

தமிழரசு
மலர்: 5 16.2.75 இதழ் 16
மகளிர் நலச் சிறப்பிதழ்

# வறட்சியைச் சமாளிக்க

சற்றும் எதிர்பாராது ஏற்பட்டுவிட்ட வறட்சி என்னும் கொடுமையை எதிர்த்துப் போரிட-தமிழக அரசு சூளுரைத்துப் பணியாற்றுகிறது. வேளாண் குடியினருக்கு அடுக்கடுக்கான சலுகைகளைக் கொடுத்து அவர்களின் நலம் காக்க முனைகிறது.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அரும்பெரும் திட்டங்களை எல்லாம் உருவாக்கி வறட்சியை வெற்றி கொள்ள வழி வகுத்து வருவதோடு, வறட்சிப் பகுதிக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டார். 30-1-75 அன்று மதுரை மாவட்டத்தில் அவனியாபுரத்தில் பாரபத்தி என்னுமிடத்தில் கிணறுகள் தோண்டும் பணி நடைபெறுவதைப் பார்வையிட்டார். பின்னர் இராமநாதபுர மாவட்டத்தில் அருப்புக்கோட்டை, முதுகுளத்தூர் பரமக்குடி, மானாமதுரை, ஆகிய பகுதிகளுக்கும் சென்று, அங்கு நடைபெற்று வரும் வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டார். ஏரிகளைத் தூர் எடுப்பதிலும், கிணறுகளை ஆழப்படுத்துவதிலும் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளதை முதல்வர் கண்ணுற்றார். அந்தத் தொழிலாளர்களிடம் உரையாடி, அவர்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்தினார். வறட்சிப் பகுதிகளில் பொது மக்களை நேரில் சந்தித்தார். அவர்களின் துயரக் கதைகளைச் செவி மடுத்து ஆறுதல் கூறினார். நிவாரணப் பணிகளை விரைவுபடுத்துமாறும் அந்தப் பணிகளில் விழிப்புடன் இருக்குமாறும் அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

இராமநாதபுரத்தில் தம்மைச் சந்தித்த நிருபர்களிடம் முதல்வர் கலைஞர் பல செய்திகளைத் தெரிவித்தார். அவற்றின் தொகுப்பு வருமாறு:

"மதுரை - இராமநாதபுர மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டோம். இராமநாதபுரத்திற்கென்று ஒப்புதல் அளிக்கப்பட்ட 95 இலட்ச ரூபாயில் 40 இலட்சரூபாய்க்கு மேற்பட்ட பணிகள்' நடைபெற்று வருகின்றன.

"இராமநாதபுரத்தில் மட்டும் ஒரு நாளைக்கு 50 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் வகையில் வறட்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

"இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள கண்மாய் வேலைகள் மட்டுமல்லாமல் பேரையூர்க் கண்மாய் போன்ற நடுத்தரக் கண்மாய்களிலும் உடனடியாக வேலைகள் ஆரம்பிக்கப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளன. தூர் எடுத்து ஆழப்படுத்திக் கரை உயர்த்தும் வேலையை நிறைவேற்றும்படி அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

"இதன்றியில் இராமநாதபுரம் பெரிய கண்மாய், ராஜசிங்கமங்கலம் பெரிய கண்மாய், திருப்பத்தூர் பெரிய கண்மாய், புதுக்கோட்டை, கவிநாடு பெரிய கண்மாய் ஆகிய மிகப் பெரிய கண்மாய்களில் இப்போது தண்ணீர் வறண்டுள்ளதைப் பயன்படுத்தி மேலும் அவற்றை ஆழப்படுத்திட வேண்டுமென்றும் இன்னும் 2, 3 வார காலத்தில் வேலை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் இன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

"இராமநாதபுரம் பெரிய கண்மாய்க்கு 25 இலட்சரூபாய் செலவாகும். இதேபோல இன்னமுள்ள மூன்று பெரிய கண்மாய்களுக்குமாகச் சேர்த்து ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்படும்.

"சாலையோரத்தில் நடைபெறும் பணிகள் மட்டுமல்லாமல் தொலைவில் உள்ள கிராமப் பகுதிகளில் நடைபெறும் பணிகளையும் நெடுந்தூரம் சென்று பார்வையிட்டிருக்கிறோம். பணிகள் யாவும் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன.

மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் முதல்வர் கலைஞர் அவர்களும் சந்திப்பு. உணவமைச்சர் மாதவன், வருவாய்த்துறை அமைச்சர் சாதிக் பாட்சா ஆகியோர் உடனிருக்கின்றனர்.



# வகை வகைப் பணிகள்

''குடிநீர் கஷ்டம் மேலும் மோசமாகக் கூடிய சூழ்நிலை உள்ளதென்பதை உணர்ந்திருக்கிறோம். கிணறுகள் மூலம் தண்ணீர் கிடைப்பதில் சங்கடம் உள்ளதென்றாலும் விரைவாகப் பரிசீலித்துக் குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

''ஆர். எஸ். மங்கலத்தில் இருந்து செய்குடி கிராமத்திற்கு இடையே செல்லும் பாதையின் இடையே பாலம் அமைக்கும் வேலைக்கும் ஆணையிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இலட்சம் பேர் பயனடைவர். இந்தப் பாலம் அமைக்கும் கோரிக்கை 20 ஆண்டுகளாக இருந்து வருகிறது. அந்தக் கோரிக்கை இப்போது செயலாக மலரவிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பணிக்கு 1 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.''

இவ்வாறு முதல்வர் கலைஞர் குறிப்பிட்டார்.

இராமநாதபுர மாவட்டத்தில் பாண்டிய மங்கலம் பகுதியில், பாண்டியர் காலத்துக் கேணிகள் இரண்டு கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. நீர் ஊற்றெடுக்கும் இடத்தில் தோண்டியபோது, 20 அடி ஆழத்திற்குள் கிணறுகள் இருந்ததைக் கண்டுபிடித்துள்ளார்கள். அவற்றைத் தூர் எடுத்ததில், தெளிந்த நீர் சுரந்து வந்திருக்கிறது. முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தக் கிணறுகளைப் பார்வையிட்டார்.

''இவைபோன்ற கிணறுகள் சுற்றுப்புறங்களில் உள்ளனவா என்று ஆராய வேண்டும்''— என முதல்வர் கலைஞர், அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

இராமநாதபுர மாவட்டத்திலிருந்து, புதுக்கோட்டை மாவட்டம் சென்று அங்கு சில பகுதிகளைப் பார்வையிட்டு விட்டு 1-2-75 அன்று சென்னைக் குத் திரும்பிய முதல்வர் கலைஞர் அவர்கள் அரசு ஆற்றி வரும் வறட்சி நிவாரணப் பணிகள் குறித்த விளக்கங்களைச் செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

வறட்சி நிவாரணத்துக்காகத் தமிழக அரசு மத்திய அரசிடம் கோரி வரும் நிதி குறித்து மத்திய நிதியமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்களும் முதல்வர் கலைஞர் அவர்களும் 2.2.75 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினர்.

மத்திய நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடம் செய்தியாளர்கள் விடுத்த வினாக்களுக்கு, அவர் விடையளித்தார். அவரது விடைகளின் தொகுப்புரையாவது:

''தமிழ்நாட்டின் வறட்சி நிவாரணப் பணிகளுக்குத் தமிழக அரசு ரூ. 55 கோடிக்கு நீண்டகாலத் திட்டம் தயாரித்திருக்கிறது. அதில் ரூ. 30 கோடியை மத்திய அரசு தர வேண்டுமென்று கோரியிருக்கிறது.

''இந்தத் திட்டப் பணிகளுக்கு இவ்வாண்டு மார்ச் வரை ஆகும் மொத்தச் செலவு ரூ. 17 கோடியாகும் எனத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த 17 கோடியில் மத்திய அரசு உடனடியாக ரூ. 10 கோடி தரவேண்டும் என்று கோரியது. இந்த 10 கோடி கோரிக்கையில் மத்திய அரசு ரூ. 7.5 கோடியைத் தரத் தீர்மானித்திருக்கிறது. இதற்குள் வறட்சிப் பணித் தேவைகளைச் சமாளிப்பது சாத்தியமாயிருக்க வேண்டும் என விரும்புகிறேன். அடுத்த ஆண்டிற்கான நீண்டகால உதவி பற்றி பிப்ரவரி 12-ந் தேதி முதல்வர் டெல்லி வரும் போது விவாதிக்கப்படும்.

''மத்திய அரசு உடனடியாக தற்போது அளிக்கும் ரூ. 7.5 கோடியைக் கொண்டு பிப்ரவரி முடிவுக்குள் 59 இலட்சம் பேருக்கும், அடுத்த மாதத்தில் 9 இலட்சம் பேருக்கும் வேலை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



வறட்சிப் பகுதியில் வாழும் மக்களுக்கு, முதல்வர் கலைஞர் ஆறுதல் தெரிவிக்கிறார்.



வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிடுகிறார் முதல்வர்

''தமிழக அரசு புஞ்சை தானிய நடமாட்டத்திற்கு மற்ற மாநிலங்களும் கட்டுப்பாடு விதிக்காமல் மத்திய அரசு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கோரியுள்ளது. இது பற்றி உணவுத் துறையிடம் தெரிவிக்கிறேன் என்று முதல்வரிடம் கூறியிருக்கிறேன்.

''பற்றுக்குறை பகுதிகளில் குடிநீருக்கு முன்னுரிமை அளித்துத் தமிழக அரசு

செயல்படுகிறது. அதற்குப் போதுமான சாதனங்களைத் தருமாறு தமிழக அரசு கேட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களில் கிடைக்கும் சாதனங்களைத் தமிழ்நாட்டின் வறட்சிப் பகுதிகளுக்குத் திருப்பிவிட வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதே.

"சிறிய நீர்ப்பாசன அமைப்புகளில் தூர் வாரும் பணிகளில் தமிழக அரசு முனைப்பு காட்டுவது வரவேற்கத்தக்கதாகும்." இவ்வாறு மத்திய நிதி அமைச்சர் கூறினார்.

வறட்சி நிவாரணத்திற்காக ஏழரைக் கோடி ரூபாய் அனுமதி அளித்த, மத்திய நிதி அமைச்சருக்கு முதல்வர் கலைஞர் அவர்கள் நன்றியைத் தெரிவித்தார்.

## நெல்லை மாவட்டம்

நெல்லை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 752 கிராமங்களில் வறட்சி நிவாரணப் பணிக்காக இதுவரை 49.50 இலட்சம் ரூபாய் தமிழக அரசால் அனுமதிக்கப்பட்டு அதில் மக்களுக்கு இன்றியமையாததான குடிநீர் வழங்கிட ரூ. 16.50 இலட்சமும், உணவைப் பெருக்கிட சிறிய, பெரிய நீர்ப்பாசன வகைக்கு ரூ. 26 இலட்சமும் மற்றும் போக்குவரத்துகளைச் செப்பனிட ரூ. 7 இலட்சமும் ஒதுக்கப்பட்டு வேலைகள் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமும், பொதுப் பணித்துறை மூலமும் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமும் நடைபெற்று வருகின்றன.

**குடிநீர்க் கிணறுகள் :**

வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களில் பழைய கிணறுகள் ஆழப்படுத்தவும் புதிய கிணறுகள் தோண்டவும் ஆக 752 வேலைகள் ரூ. 20,15,000 மதிப்பீட்டில் தொழில்நுட்ப அனுமதியும் நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டு இதுவரை 330 வேலைகள் ரூ. 4,39,750 மதிப்பீட்டிற்கு வேலைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன. அவைகளில் இதுவரை ரூ. 77,700 செலவு முன்னேப்பாக்கப்பட்டுள்ளது. மேலும் கோவில் பட்டிக் கோட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 109 குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு ரூ. 3 இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செலவிட அனுமதிக்கப் பட்டுள்ளது.

### நிவாரணப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு

வறட்சியைப் போக்கிட—சமாளித்திட நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள தமிழக அரசு—இதுவரை 5 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. மாவட்ட வாரியாக ஒதுக்கப் பெற்றுள்ள தொகையின் விவரங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| இராமநாதபுரம் | 95 இலட்சம் |
| மதுரை | 55 இலட்சம் |
| கோவை | 57 இலட்சம் |
| புதுக்கோட்டை | 54·50 இலட்சம் |
| நெல்லை | 49·50 இலட்சம் |
| திருச்சி | 40 இலட்சம் |
| சேலம் | 36 இலட்சம் |
| தருமபுரி | 14 இலட்சம் |
| செங்கற்பட்டு | 23 இலட்சம் |
| வட ஆர்க்காடு | 24 இலட்சம் |
| தென் ஆர்க்காடு | 36 இலட்சம் |
| தஞ்சாவூர் | 15 இலட்சம் |
| நீலகிரி | 1·0 இலட்சம் |

(பிப்ரவரி 1–ஆம் தேதி வரை ஒதுக்கப் பட்டுள்ள தொகை.)

வேலைகள் நடைபெற்று வருகின்றன. இது தவிரக் கோவில் பட்டி நகர் மன்றப் பகுதியில் கடும் வறட்சியினால் அல்லல் உறும் மக்களுக்கு உடனடி



யாகக் குடிநீர் வழங்கிட ஆழ் கிணறுகள், குழாய்கள் மூலம் அமைக்க ரூ. 2.50 இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செலவிட அனுமதிக்கப்பட்டு மூன்று குழாய்க் கிணறுகள் ரூ. 28,000 செலவில் வேலை முடிந்து மற்ற வேலைகள் தொடர்ந்து நடந்து கொண்டு வருகிறது. குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் சிறிய ஆயக்கட்டுகளில் தூர் அகற்றவும், மீன் பாசிகளை நீக்கவும் பெரிய நீர்ப்பாசனக் குளங்களில் பொதுப்பணித் துறையினரால் போதிய நீர் கொள்ளவும், மதகுகள், ஓடைகள் செப்பனிடவும் இதுவரை ரூ. 26 இலட்சம் அனுமதிக்கப்டுள்ளது. அதில் 295 வேலைகள் ரூ. 16,87,000 மதிப்பீட்டில் நிர்வாக அனுமதியும் தொழில் நுட்ப அனுமதியும் வழங்கப் பட்டுள்ளன. இதுவரை 220 வேலைகள் தொடர்ந்து நிவாரணப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.



# கலையை வளர்க்கும் கலைஞர்களை வளர்ப்போம்!

கலை வளர்க்கும் தமிழகத்தில் கலையை வளர்க்கின்ற கலைஞர்களையும் வளர்க்க வேண்டும் என்கின்ற உணர்வு எழுவது தவறில்லை. அந்த அடிப்படையில் மக்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற அரசு தன்னால் இயன்ற கடமையைச் செய்ய முன்வருகின்றது. அந்த வகையில்தான் இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் பல ஆண்டுக் காலமாக இசை வாணர்கள், நாடகக் கலைஞர்கள், இலக்கிய மேதைகள் சிறப்பிக்கப்பட்டு வருகிறார்கள்.

இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற விழாவில் அரசின் சார்பில் நானும் நாவலரும் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, 'வாழ்ந்து கொண்டிருக்கிற கலைமேதைகளுக்கு மாத்திரமல்லாமல், இன்றைய கலையுலக வளர்ச்சிக்கு வித்திட்ட மறைந்த மாமேதைகளுடைய குடும்பத்தாருக்கு - அவர்கள் காலத்திலே இல்லாத இந்த இயல் இசை நாடக மன்றம் இன்றைக்கு இருப்பதால்—மறைந்தவர்களையும் சிறப்பிக்க வேண்டும்; அவர்களைப் பெருமைப்படுத்துவது அவர்களுக்குப்பெருமை சேர்ப்பதாகாது; நமக்கு நாமே பெருமை சேர்த்துக் செ ள்வதாகும்' என்ற சீரிய எ ணத்தோடு, மறைந்த மேதை[illegible]ின் குடும்பத்தாருக்குக் கலைமாமணி விருது வழங்க வேண்டும் என்று அறிவித்து அதைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறோம்.

சென்னையில் நடைபெற்ற முத்தமிழ் இசை விழாவில் உரையாற்றிய செம்மங்குடி சீனுவாச அய்யர் ''தமிழக அரசு கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றுவதில் பெயர் பெற்ற அரசு; ஆகவே வருகிற கலைமாமணி விருது வழங்குகிற விழாவில் வறுமையில் உழன்று கொண்டிருக்கிற கலைமாமணி குடும்பங்கள் வாழப் பொற்கிழி வழங்கப்பட வேண்டும்''-என்று சொன்னார்கள்.

அவர் எண்ணியிருப்பது மெய்தான் என்கின்ற வகையில் அதே மேடையில் 'இந்த ஆண்டு அப்படிப்பட்ட கலைஞர்களுக்குப் பொற்கிழி, கல்வி அமைச்சரோடும், இந்த மன்றத்தாரோடும் கலந்துகொண்டு வழ்ங்க ஆவன செய்யப்படும்' என்று அறிவித்தேன்.

அதற்கேற்பப் பத்துக் குடும்பங்களுக்கு, குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் வீதம் இங்கே வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆயிரம் ரூபாய் அவர்களுடைய குடும்பத்தின் துயரத்தைத் தீர்க்கப் போதுமா என்றால் போதாது; என்றாலும், நம்முடைய அன்பினை, ஆர்வத்தை மனிதாபிமான உணர்ச்சியைக் காட்டுகின்ற வகையில் அது பயன்படும் என்ற அளவில்தான் அதனைப் பொற்கிழியாகக்கூட அல்ல, தமிழகத்திற்கு, தமிழ் மண்ணுக்கு, தமிழ் இசைக்கு, தமிழ்க் கலைக்கு அவர்கள் ஆற்றிய தொண்டுக்குத் தமிழக அரசின் காணிக்கையாகத்தான் அதை நாங்கள் வழங்கியிருக்கிறோம்.

இப்படிப்பட்ட கலைமாமணி விருது பெற்றவர்கள் இதுவரை முந்நூறுக்கு மேற்பட்டவர்கள் என்றாலும் அதிலே சற்று வசதியோடு வாழ்பவர்கள் நூற்றுக்கும் குறைவானவர்கள்தாம்! மீதமுள்ள இருநூறு பேர்களுடைய குடும்பத்திற்கு நூறு ரூபாய் வீதம் மாதந்தோறும் மானியத் தொகை வழங்க வேண்டும் என்கின்ற ஒரு வேண்டுகோளை இங்கே வைத்திருக்கிறார்கள்.

முதலமைச்சர் நிதியிலிருந்து ஓர் இலட்சம் ரூபாய் வரையில் இந்தக் காரியங்களுக்காக நான் தரத்தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனென்றால் கலைஞர்கள் பல பேர்களுடைய கண்ணீரைத் துடைத்தவர்கள்; பல பேர்களுடைய குடும்பங்களுக்கு இலவச நாடகம் நடத்தி அவர்களுடைய வாழ்வில் வளம் சேர்த்தவர்கள் எல்லாம் கலையுலகத்தில் இருக்கிறார்கள்.

கலைஞர்கள் நாட்டுப்பற்று மிக்கவர்கள்; ஒரு காலத்தில் இந்திய நாட்டின் விடுதலைக்காகக் கலைஞர்கள் தூக்கு மேடை ஏறவும் தயாராக இருந்தவர்கள்; சும்மா சொல்லிக் கொண்டிருந்தவர்கள் அல்ல; உண்மையில் தூக்கு மேடை ஏறத் தயாராக இருந்தார்கள். வெள்ளைக்காரர்களை எதிர்த்து நாடக மேடையில்





பாடி, அந்தப் பாடலின் காரணமாகச் சிறைச்சாலைக்கு இழுத்துச் செல்லப்பட்டவர்கள்; காராக்கிரகத்தில் கஞ்சிக் கலயம் ஏந்தியவர்கள்; விடுதலைப் போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள்; இந்தியா சுதந்தரம் பெற்று, தமிழ்நாடு இன்றைக்குக் கொஞ்சம் குறைவாக இருந்தாலும் வளம் எல்லாம் பெற்றுள்ள நாட்டில் கலைஞர்கள் வளம் பெற்றுத் திகழத் தமிழக அரசின் சார்பில் நம்மால் இயன்றதைச் செய்ய நாம் காத்திருக்கின்றோம்.

இந்த விழாவில் கலைமாமேதைகள் பலருடைய திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தேன். கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக இந்த மேதைகளின் படங்களை இராஜாஜி மண்டபத்தில் நாம் திறந்து வைக்கிறோம். 'இப்படித் திறந்து வைக்கும் படங்களை எங்கே கொண்டு போய் வைக்கிறீர்கள்?' என்று கேட்டேன். அவர்களுடைய "தென்றல்" என்ற பெயருடைய இந்த மன்றத்திற்காக இருக்கிற வாடகைக் கட்டடத்தில் சுவரில் மாட்டப்படுவதாகச் சொன்னார்கள். எங்கேயும் சுவரில்தான் மாட்டுவார்கள். ஆனால் இங்கே வாடகைக் கட்டடம் என்று அவர்கள் குறிப்பிட்டது, 'அழகுற மாட்ட முடியவில்லை; எடுப்பாக மாட்ட முடியவில்லை' என்று தெரிவித்தார்கள். ஆகவே, இவைகள் எல்லாம் அழகுற மாட்டப்படவும், கலைஞர்கள் விரும்புகிற நேரத்தில் எல்லாம் வந்து இந்தப் படங்களைக் காணவும், அந்தப் படங்கள் தருகின்ற பாடங்களைப் பெறவும் பயனுள்ள வகையில்-'கிரீன்வேஸ் சாலையிலேயே இப்போது அவர்கள் அலுவலகம் இருக்கும் அதே இடத்தில் உள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலம் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றக் கட்டடம் கட்டுவதற்காக ஒதுக்கப்படும்.

கட்டப்படுகிற மண்டபத்தில் ஆண்டுதோறும் இப்படிப்பட்ட கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்க அரசாங்கத்தை எதிர்பார்க்காமல் வருமானத்தைப் பெருக்கிக் கொண்டு, கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்கத் தக்க வகையில் அமைந்திடும். அதற்காக அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்று, ஆளுநர் தலைமையில் அதனுடைய திறப்பு விழாவிற்கும் நாங்களே வருவோம் என்பதைத் தெரிவித்து, அதை உணர்ந்து கலைஞர்கள் எல்லாம் அதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

**(25—1—1975-ல் இயல், இசை நாடக மன்றத்தின் கலைமாமணி விருது வழங்கு விழாவில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை).**


## அதிசய நீர் ஊற்று நிபுணர்

குழாய்க் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்ட (பழைய கிணற்றில் போரிங் குழி இறக்க) குறிப்பிட்ட பூமியில் உள்ள நீர் ஊற்றுக்களை எல்லாம் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடித்து அந்த நீர் ஊற்றுக்களிலேயே மிக அதிகமான தண்ணீர் உள்ள 2 நீர்ஊற்றுக்கள் கிராஸ் செய்யும் சரியான இடமும், அதில் கிடைக்கும் தண்ணீரின் அளவும், நீர் ஊற்று உள்ள ஆழம் முதலிய விவரங்களையும் தெரிவிக்கப்படும்.

என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நான் குறிக்கும் இடத்தில் குழாய்க் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால் 2:3 என்ற விகிதத்தில் ரூ. 3,000 நஷ்டஈடு கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு 25 நயா பைசா ஸ்டாம்பு அனுப்புக.

**K. கந்தசாமி,**

(Ex. Member of the British Society of Dowers, London)

நீர் ஊற்று நிபுணர், கணபதி அஞ்சல், கோயமுத்தூர்-6.

தொலைபேசி எண் 31912.




# மகளிர் நலம் மேலோங்கச் செய்வோம்!

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் **சி. வி. எம். அண்ணாமலை**

சமூகநலத்துறை என்னும் பெரியதொரு மண்டபத்தின் தூணாக விளங்குவது மகளிர் நலத்துறையாகும். கண்ணுக்கு நிகரான அன்னைக் குலம் சமூக நலத்துறையின் சிறப்புக்கு வழி வகுக்கும் இனமாகும்.

நமக்குக் கல்வி புகட்டுகின்ற காலத்திலேயே நமது ஆசிரியர்கள் சொல்லித் தந்த வாசகம் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பதாகும்.

இவ்வாறு முன்னறி தெய்வமாக-மூல முதலாக இடம் பெற்றிருந்த அன்னைக் குலம் எப்படியோ நமது சமூகத்தில் உரிமையற்ற இனமாகிப் பலப்பல அல்லல்களை அனுபவித்து வந்தது. பெண்கள் என்றால் அடிமைகள் என்ற மனப்போக்கு சமுதாயத்தில் மேலோங்கி நின்றது. 'பெண் புத்தி பின் புத்தி' என்றும், 'பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்தே' என்றும் கூறப்பட்டுப் பெண்கள் இழிவு செய்யப்பட்டனர்.

ஒரு காலத்திலே மகளிர் களங்கண்டிருக்கின்றனர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. வெள்ளையரை எதிர்த்து நின்ற ஜான்ஸிராணி லட்சுமிபாயை-வீரம் நிறைந்த சிவகங்கையில் வீறிட்டெழுந்த வேலுநாச்சியை நாம் மறந்துவிட முடியுமா? பிரெஞ்சு நாட்டிலே போர்ப்பரணி பாடிய ஜோன் ஆப் ஆர்க் என்னும் வீரமங்கை நமது நினைவை விட்டு நீங்குவாளா?

இந்திய நாட்டில் விடுதலை உணர்வு அரும்பிய பிறகு, மகளிர் ஓரளவு பெருமைப்படுத்தப்பட்டனர். காந்தியடிகள், பண்டித ஜவகர்லால் நேரு, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகிய தலைவர்கள் பெண்ணடிமை தீர்வதற்காகப் பேசினர்-எழுதினர் - போராடினர். அறிஞர் அண்ணா அவர்களின் வழியில் அடிபிறழாமல் அல்லும் பகலும் அயராமல் பாடுபட்டு வரும் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெண்ணினம் பெருமைபெற்று ஏற்றம் எய்திட-தமிழர் வாழ்வு தரணியில் ஒளி வீசித் திகழ்ந்திட- எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். அம்மட்டோடு அமையாமல் இந்நாட்டின் ஏழை, பாட்டாளி மக்களுக்காக- தாழ்த்தப்பட்ட பிற்பட்ட-வாழ்விழந்த மக்களுக்காக தனது பிறந்தநாள் பரிசுகளைக் குவித்து அள்ளி அள்ளி வழங்கி அரிய சாதனைகளைச் செய்து வருகிறார். வேறு எந்த மாநில முதலமைச்சரும் செய்யாத - செயற்கரும் செயல் செய்து வரும் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உலகெங்கும் வாழும் தமிழர்கள் எல்லாம் தலையார வணங்கி வரவேற்றுப் பாராட்டுவதை இந்தத் தரணி நன்கறியும்.

மகளிர் நலப்பணிகள் நமது மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் சிறப்புற நடைபெற்று வருகின்றன. மகளிர் நல நிலையங்கள் குழந்தைகள் காப்பகங்கள் ஆகியவை தமது பணிகளை மிகச் சிறப்பாக நிறைவேற்றி வருகின்றன. சத்துணவின் இன்றியமையாமை மகளிர் மன்றங்களின் வாயிலாக அனைவர்க்கும் உணர்த்தப்படுகிறது. கைத்தொழில் கற்றுத் தரப்படுகிறது.



என்றாலும் இவையெல்லாம் போதாது. சமூக நலத்துறையில் அங்கம் பெறும் மகளிர் நலத்துறை ஆற்ற வேண்டிய மாபெரும் பணி ஒன்று உண்டு. அது என்ன தெரியுமா?

குடும்பநலத்தை அனைவருக்கும் எடுத்துரைக்க வேண்டியது மகளிர் மன்றங்களின் கடமையாகும். நமது நாட்டில் ஒரு நிமிடத்திற்கு 40 குழந்தைகள் பிறப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். அப்படியென்றால் ஒரு நாளைக்கு 57,600 குழந்தைகள் பிறக்கின்றன. ஒரு நாளைக்கே இத்தனை என்றால் ஓர் ஆண்டுக்கு எத்தனை என்று கணக்கிட்டுக் கொள்ளுங்கள். இந்த ஆபத்து நமது அறியாமையினால் தான் ஏற்படுகிறது. இந்த அறியாமையை நீக்குகின்ற அரும்பணியில் மகளிர் மன்றங்கள் இறங்க வேண்டும். நாட்டிலுள்ள மகளிர் அனைவர்க்கும் குடும்ப நலத்தின் நன்மையை எடுத்துச் சொல்லி நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும் என்று 'தமிழரசு' மகளிர் நலச் சிறப்பிதழின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டுக்கு நலம் சேர்க்கும் நற்பணிகளில் ஈடுபட்டு மகளிர் இனம் மேதினியில் மேலோங்கிட செய்திடுவோம், வாரீர்.

''தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராய் வருதல் வேண்டும்'' என்னும் பாவேந்தர் பாரதிதாசன் பாட்டுக்கு இலக்கணம் வகுக்கும் இன்றைய நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் செயற்கரியசாதனைகளால் இந்நாடு பொன்னாடாய்ப் பூத்துக் குலுங்கிடும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

## தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நெ. எக்ஸ் 406

**நெ. 14, ரித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை-600007.**

தொலைபேசி எண் : 30877, 30878. தபால் பெட்டி எண். 486. தந்தி: "ஹவுஸ்பாங்க்"

தலைவர் : திரு பழனிவேல் ராஜன், பி.எஸ்.ஸி., பி.எல்; எம் எல்.ஏ.

உபதலைவர் : திரு பி. கஸ்தூரி பிள்ளை

பொருளாளர் : திரு எஸ். பழனிசாமி, எம்.ஏ.,

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | ... | ரூ. 5 கோடி |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | ... | ரூ. 2.45 கோடி |
| பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை | ... | ரூ. 16.11 கோடி |

இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்கு புதிய வீடு கட்ட 20 வருட நீண்டகாலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன. இது சம்பந்தமான விபரத்திற்கு அருகிலுள்ள பிரதம வீடு அடமான அல்லது வீடு கட்டும் சங்கத்தை அணுகவும்.

ரூ. 500-க்குக் குறையாமலும் ஓர் ஆண்டிற்குக் குறையாமலும் தவணைவைப்புத் தொகைகள் பெற்றுக் கொள்ளப்படும். தவணைவைப்புத் தொகைகளுக்கு அரசாங்கம் உத்தரவாதம் அளித்துள்ளது.

| | | அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்ச கடன் அளவு. |
|---|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு | ... | ரூ. 30,000/- |
| கிராமப் புறங்களில் புதிய வீடு கட்ட | ... | ரூ. 10,000/- |
| பழைய வீடுகளை அபிவிருத்தி செய்யவும், புதுப்பிக்கவும் | ... | ரூ. 10,000/- |

**பூ.க. பத்மநாதன், பி.ஏ., எச்.டி.சி.,**
**இணைப்பதிவாளர்—செயலாளர்.**



## சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை.) எண் 151

**தபால் பை எண் : 171** **தொலைபேசி எண் : 2402**

### சேலம்-1.

**கிளைகள் :** நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடை வீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்பேட்டை, சேலம்-2, பெத்தநாயக்கன்பாளையம், மேட்டூர், டேம், நாமகிரிபேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

**சொந்த நிதி ரூ. 327 லட்சம்.** **நடைமுறை மூலதனம் ரூ. 1,711 லட்சம்.**

**வட்டி விகித அட்டவணை 16-1-75 தேதி முதல்.**

| | | |
|---|---|---|
| **கால் டெபாசிட்டுகள் :** | ரூ. 5,000-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | $3\frac{1}{4}\%$ |
| | ரூ. 10,000-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) | $3\frac{1}{2}\%$ |
| **சீசன் டெபாசிட்டுகள் :** | ரூ. 1,000-க்கும் அதற்கு மேலும் 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் | 3 % |
| | 46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் | $3\frac{1}{2}\%$ |

**பிக்செட் டெபாசிட்டுகள் :**

1. 61 மாதங்களுக்கு மேல்...... $10\frac{1}{2}\%$
2. 36 முதல் 61 மாதங்களுக்குள் $9\frac{1}{2}\%$
3. 12 முதல் 36 மாதங்களுக்குள் $8\frac{1}{2}\%$
4. 9 முதல் 12 மாதங்களுக்குள் $7\frac{1}{2}\%$
5. 6 முதல் 9 மாதங்களுக்குள் $6\frac{1}{2}\%$
6. 91 நாட்கள் முதல் 6 மாதங்களுக்குள் 6 %

**நடப்புக் கணக்கு $\frac{1}{2}\%$** **சேமிப்புக் கணக்கு $5\frac{1}{2}\%$**

*ரூ. 5,000/-க்கு மேல் கால் டெபாசிட்டுகளும் ரூ. 1,000/-க்கு மேல் 15 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை சீசன் டெபாசிட்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. *ரூ. 500/-, ரூ. 5,000/- மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவசப் பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. *பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. *ரெக்கரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.*இதர விவரங்களுக்கு எமது தலைமை மற்றும் 31 கிளைகளிலும் தொடர்பு கொள்க.

**எம். அய்யனூர்,**
துணைப் பதிவாளர்
நிர்வாக அதிகாரி.

**எஸ். ஆறுமுகம் எம்.எல்.ஏ,**
தலைவர்.

**கே. இராசப்பன், எம்.ஏ.,**
சி.ஏ.ஐ.ஐ.பி., சி.சி.,
உதவிச் செயலாளர்.

# சங்க காலப் பெண்பாற் புலவர்கள்

இன்றையத் தமிழகத்தில் சிறந்த பெண் எழுத்தாளர்களும் பெண் கவிஞர்களும் வாழ்ந்து வருகிறுர்கள். அன்னேத் தமிழின் திறம்பாடும் இந்தப் பெண்பாற் புலவர்கள் 'வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபைச் சேர்ந்தவர்கள், இவர்களின் முன்னேர்கள் சங்க காலத்திலேயே வாழ்ந்திருக்கிறுர்கள். ஆம்! சங்க காலத்தில் கவிமழை பொழிந்த பெண்பாற் புலவர்களே அகநானூறு, புறநானூறு, குறுந் தொகை முதலிய நூல்களில் நாம் சந்திக்கிறேம். அவர்களில் சிலரை இங்கு நினேவு கூர்வோம்.

ஔவையார்
வெள்ளிவீதியார்
பொன்முடியார்
முடத்தாமக் கண்ணியார்
மாறேக்கத்து நப்பசலேயார்
காக்கை பாடினியார் நச்செள்ளேயார்
நக்கண்ணேயார்
ஆதி மந்தியார்
ஒக்கூர் மாசாத்தியார்
குறமகள் இளவெயினி



பேய்மகள் இளவெயினி
மாற்பித்தியார்
பாரிமகளிர்
பெருங்கோப் பெண்டு
பூங்கண் உத்திரையார்
வெண்ணிக் குயத்தியார்
காவற்பெண்டு
வெறிபாடிய காமக்கண்ணியார்
போந்தைப் பசலேயார்
நல் வெள்ளியார்
நன் முல்லேயார்

# மகளிர்க்குப் பாமாலே

தற்காத்துத் தற்கொண்டார் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.
—திருவள்ளுவர்

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக்கிங் கேபெண்
இளேப்பில்லே காணென்று கும்மியடி
—பாரதியார்

மங்கைய ராகப் பிறப்பதற்கே-நல்ல
மாதவஞ் செய்திட வேண்டுமம்மா!
பங்கயக் கைநலம் பார்த்தலவோ!-இந்தப்
பாரில் அறங்கள் வளருமம்மா!
—தேசிக விநாயகம் பிள்ளே

பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே
உள்ளடங்கும் ஊமையென்று பெண்ணே உரைக்குமட்டும்
ஆமை நிலேமைதான் ஆடவருக்கும் உண்டு.
—புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்





# இன்றைய சேமிப்பு நாளைய மகிழ்ச்சி!!



## வளமான நல்வாழ்வுக்கு வழிகாட்டும்

## சிறப்புமிக்க திட்டம் சிறுசேமிப்புத் திட்டம்

### தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு 'அதிக வட்டி' அளிக்கப்படுகிறது.

*சிறு சேமிப்புத் தரும் சீரிய திட்டங்களில் இரண்டு தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெக்கரிங் டெபாசிட் திட்டம்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.*

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1, 650/- |

**சலுகைகள்**

1. தற்போது 1. 7. 1972 க்கு பிறகு ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் கணக்கு துவக்கியவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச்சலுகை கிட்டும். **இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்ப தில்லை.** சம்பளப்பட்டியல் மூலம் இத்திட்டத்தில் சேரலாம்.

2. வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்தின் மூலம் சேமிப்பவர்கள் செலுத்தும் தொகைக்கு ரூ. 20, 000 வரை வரிச் சலுகை உண்டு. இத்திட்டத்திலும் சம்பளப்பட்டியல் மூலம் சேரலாம்.

இப்போது தபால் நிலைய காலவரை வைப்புத் திட்டத்திற்கு 10% வட்டி அளிக்கப் படுகிறது.

உங்கள் குழந்தைகளின் சீர்மிகு வாழ்விற்காகவும்
நாடும் வீடும் வளம் பெறவும்,

''இன்றே ஒரு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்''

**இயக்குநர்,**
சிறு சேமிப்புத் துறை,
அண்ணா சாலை, சென்னை-2.

# மௌனமொழி

காரை. சாயபு மரைக்காயர்

“இந்தாய்யா! இந்தச் சாப்பிடு”

“எனக்கு வேண்டாம்”

“ஏன்?”

“கேவலமான பிழைப்பிலே சாப்பிடுறதைவிடப் பட்டினி கிடந்து சாகலாம்”

சுருக்கென்றது அவளுக்கு. என்றாலும் சுதாரித்துக் கொண்டாள்.

“சரிய்யா! நான்தான் கேவலமான பிழைப்பிலே வாழறவ! நீ மட்டும் பிச்சை எடுக்கிறது ஒசத்தியாக்கும்?”

அவள் குத்தலாகக் கேட்டாள். இவ்வளவு நேரம் எடுத்தெறிந்து பேசியவன் அடுத்தொன்றும் சொல்ல முடியாமல் தடுமாறினான்.

மெல்ல அந்த மண்டபத்தின் கடைசித் தூணில் சாய்ந்து கால்களை நீட்டிக் கொண்டான் அவன். கண்களில் கசிந்த நீர் கன்னத்தை நனைத்து உதடுகளின் சங்கமத்தில் ஒதுங்கி நின்றது.

“என்னை மன்னிச்சிடுய்யா! உன் நிலைமை தெரிஞ்சிருந்தும் மனசு புண்படும்படிப் பேசிட்டேன்” அவன் கண்ணீரைக் கண்டு அவள் கலங்கினாள்.

“தங்கம்....!”. ஏதோ சொல்ல வந்தவன் எச்சிலைக் கூட்டி விழுங்கினான்.

“என்னய்யா? என்கிட்ட சொல்லுய்யா!” உரிமையோடு கேட்டவள் அவனை ஒட்டி அமர்ந்து கொண்டாள்.

“தங்கம்! இப்படியொரு வாழ்க்கையை நான் விரும்பறேன்னு நினைக்கிறியா? பிச்சையெடுத்த காசிலே ஒவ்வொரு வேளையும் உண்ணும்போது என் மனசு எப்படியெல்லாம் கூசும் தெரியுமா? வாழவும் முடியாமல் சாகவும் தெரியாமல் எனக்குள்ளே நடக்கிற போராட்டம் எனக்கு மட்டுந்தான் தெரியும்”

யாரிடமும் சொல்லாமல் உள்ளத்தின் ஓர் ஓரத்தில் ஒதுக்கி வைத்திருந்த உணர்ச்சிகளையெல்லாம் அவளிடம் கொட்டிக் கொண்டிருந்தான் அவன்! அவளும் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்தாள்.

“......உழைச்சு சாப்பிடணும்தான் எனக்கு ஆசை! ஆனால் இந்தக் குருடனுக்கு யாரு வேலை கொடுப்பாங்க?”

மேலும் பேச முடியாமல் ஏதோ ஒன்று அவன் தொண்டையை அடைத்தது. பெருகி வந்த கண்ணீர் வெள்ளத்தில் அவன் கந்தல் ஆடையும் நனைந்தது.

“நீ ஏன்யா அழறே! உண்மையிலேயே நீ கொடுத்து வச்சவன்யா! இல்லேன்னா கண்ணாவி பிடிச்ச இந்த உலகத்தைக் காண வேண்டாம்னு கடவுளே உன் கண்ணைப் பறிச்சிருப்பாரா?”

ஆறுதலாக ஏதோ சொன்னவள் அவன் கண்ணீரைத் துடைத்தாள். பட்டுக்கரங்கள் பட்டபோது அவன் மேனி சிலிர்த்தது.

அந்த உணவுப் பொட்டலத்தை மீண்டும் அவனிடம் நீட்டினாள் தங்கம்.

“சரிய்யா! இதைச் சாப்பிடு

“எனக்கு வேண்டாம்”

அவன் பிடிவாதம் தளரவில்லை. அவளுக்கோ ஓவென்று அழவேண்டும் போலிருந்தது. உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் அமைதியாகக் கேட்டாள்.

“ஏன்யா அடம் பிடிக்கிறே? உறவுன்னு சொல்லிக்க உனக்கோ எனக்கோ யாருமில்லே! அனாதைங்க ஒருத்தருக்கொருத்தர் அன்பு செலுத்துறது தப்பா?”

அவள் கேட்டாள். அவன் பதில் பேசவில்லை.

“நீ ஏன் என்னை வெறுக்கிறேன்னு புரியுதுய்யா! இந்தச் சமுதாயத்திலே அனாதையான இளம்பெண்கள் இப்படித் தான்யா வாழ முடியும்”

அவள் குரல் கம்மியது. கண்கள் பனித்தன. அப்பொழுதும் அவன் ஊமையாய் இருந்தான். அவளே மீண்டும் தொடர்ந்தாள்.

“என் உடல் ஒரு சத்திரம் தான்! எத்தனையோ பேரு அதிலே சொந்தம் கொண்டாடலாம். ஆனால் என் மனசைத் தூய்மையாய் வச்சிருக்கேன்யா!

“நீ என்ன சொல்றே தங்கம்?”

“ஆமாய்யா! நீ என்னை வெறுக்கிறதுலே அர்த்தமிருக்கு! ஆனால் நான் உன்னை விரும்புறது தப்பில்லியே! இந்த உலகத்திலே நான் நேசிக்கிற ஒரே உயிர் நீதான்யா”.

உணர்ச்சிகள் அவனையும் ஊமையாக்கின. பொலபொலவென்று கொட்டிய கண்ணீர் முத்துக்கள் அவன் மேனியிலும் சிதறி விழுந்தன.

“நீ அழறியா தங்கம்?”

விம்மலை விடையாகத் தந்தாள் அவள். தட்டுத்தடுமாறி அவள் தோள்களைத் தொட்டவுடன் அப்படியே கண்ணீரையும் துடைத்தான்.

“இனிமேல் நீ அழக்கூடாது தங்கம்! இத்தனை நாளா உன் அன்பைப் புரிஞ்சுக்காத என்னை மன்னிச்சிடு! எப்பவும் நீ சிரிச்சுக்கிட்டே இருக்கணும். எங்கே..கொஞ்சம் சிரியேன்!”

அவள் கரங்களைப் பற்றிக் கேட்டான் அவன். மறுக்க முடியாமல் கலகலவெனச் சிரித்தாள் தங்கம்.

அந்தச் சிரிப்பினூடே கவலைகளால் கனத்த அவளது இதயம் திடீரென்று இலேசாகி விட்டதைப் போன்றதொரு உணர்வு அவளுக்கு!

“எனக்குப் பசிக்குது தங்கம்”.

சட்டென்று பொட்டலத்தைப் பிரித்து தயிர்ச்சோற்றை உருண்டையாகப் பிடித்து அவனுக்கு ஊட்டினாள் அவள்.

“நீ சாப்பிட்டியா?”

இதுவரை கேட்டறியாத ஒரு கேள்வியில் ஒருகணம் தன்னை மறந்தாள் அவள்!

''நீயும் சாப்பிடேன்'' கையிலிருந்த ஒரு சோற்றுருண்டையை அவளுக்காக நீட்டினான் அவன்.

உணர்ந்தறியாத அன்புப் பரிமாற்றத்தில் இருநெஞ்சங்களுமே நெகிழ்ந்தன.

இரவின் ஆட்சியில் வெண்ணிலா விண்ணுலவும் நேரம்!

உண்ட களைப்பு நீங்க அவளது மடியில் தலை வைத்துப் படுத்திருந்தான் அவன். அவளோ அவனது அடர்ந்த முடியினூடே தனது மெல்லிய விரல்களை அலையவிட்டுக் கோதிக்கொண்டிருந்தாள்.

இனந்தெரியாத இன்பச் சிந்தனையில் மூழ்கியிருந்த அவனை அவளே கலைத்தாள்.

''ரொம்ப நாளா கேக்கணும்னு ஆசை! உன் பேரு என்னய்யா?''.

''தாமஸ்''

''அப்படின்னு நீ கிறித்துவரா?''

''ஆமாம்! கருத்தறிஞ்ச காலத்திலிருந்து அந்தப் பேரைச் சொல்லித்தான் எல்லாரும் என்னைக் கூப்பிடுறாங்க'

''உனக்கு எப்படிய்யா.....''

''கண் போயிட்டுதுன்னு கேட்கிறியா? மூன்று வருடங்களுக்கு முன்னாலே ஒரு தொழிற்சாலையில் நான் வேலை பார்த்துக்கிட்டு இருந்தேன். அப்போ ஏற்பட்ட ஒரு விபத்துலேதான் என் பார்வையை இழந்துட்டேன்...அது சரி! உன்னைப் பற்றி ஒண்ணும் சொல்லலியே!''

''அதை ஏன்யா கேட்கிறே? கும்பகோணத்திலே ஒரு நல்ல குடும்பத்திலே பொறந்தவதான் நான்! என்னைப் பெத்தவங்களுக்கு நான் ஒரே பொண்ணு! சின்ன வயசிலேயே அம்மாவை இழந்துட்ட என்னை அப்பாதான் கண்ணும் கருத்துமா வளர்த்தார். ஆடல் பாடல் அழகு அத்தனையும் நெறஞ்ச என்னைச் சினிமாவிலே சேர்த்துப் பெரிய நடிகையாக்கணும்னு அப்பா ஆசைப்பட்டாரு....''

ஆணுக்கு உலகமெல்லாம் வீடு. பெண்ணுக்கு வீடுதான் உலகம்.

—காண்டேகர்

* * *

ஆணின் வலிவு தோளிலிருக்கிறது; பெண்ணின் வலிவு நாவிலிருக்கிறது.

—கலிபோர்னியப் பழமொழி

''அப்புறம்?''

''அப்புறம் என்ன? இருந்த கொஞ்சம் சொத்தையும் வித்துட்டு சென்னைக்கு வந்தோம். பணமெல்லாம் அழிஞ்சுது! அப்பாவும் கவலையிலேயே இறந்துட்டாரு! ஒளிமயமான எதிர்காலத்தை நம்பின எனக்கு இந்த இருட்டு வாழ்க்கைதான் கிடைச்சுது''

''ஏன் தங்கம்! நமக்கு நல்ல காலமே வராதா? விரக்தியான அந்தக் கேள்வியில் அவனது வேதனை தெரிந்தது.

''ஏன்யா வராது?'' ஏதோ நம்பிக்கையில் சொன்னவள் திடீரென்று துள்ளினாள்.

''யோவ்! நம்ப அரசாங்கம் இலவசக் கண்சிகிச்சை முகாம் நடத்துதே! உனக்குத் தெரியுமா? கண்ணிழந்த எத்தனையோ பேருக்குப் பார்வை கிடைச்சிருக்குய்யா!''

''நீ என்ன உளறுறே? ஆண்டவன் பறிச்ச கண்ணை அரசாங்கம் கொடுக்கும்னு சொல்றியா?''

''ஆமாய்யா! நாளைக்கே உன்னை அந்த முகாமிலே சேர்க்கிறேன். நிச்சயமா உனக்குப் பார்வை வரும்னு நான் நம்புறேன்''

''தங்கம்! எனக்கு மட்டும் பார்வை கிடைச்சுட்டா இந்த நரக வாழ்க்கையிலிருந்து இரண்டு பேருக்கும் விடுதலை கிடைக்கும் இல்லியா?''

''ம்ம்.....''

எதிர்காலத்தைப் பற்றிய கற்பனையில் இருவரது இதயப் பறவைகளும் சிறகடித்துப் பறந்தன.

அவனது தோளிலே சாய்ந்தவள் மார்பிலே துவண்டு விழுந்தாள். நெஞ்சோடு சேர்த்து அவளைத் தழுவிக் கொண்டான் அவன்.

வெறிபிடித்த மிருகங்களின் முரட்டுத்தனமான எத்தனையோ தழுவல்களைக் கண்டிருக்கிறாள் அவள்! அப்பொழுதுதான் முதன்முதலாக அன்பின் அரவணைப்பை உணர்ந்தாள் தங்கம்.

* * * *

பதினைந்து நாட்களுக்குப் பின் ஒருநாள்! இலவசக் கண்சிகிச்சை முகாமின் படுக்கையொன்றில் படுத்துக் கிடந்தான் தாமஸ்.

அறுவை சிகிச்சைக்குப் பின் இன்றுதான் அவனுக்குக் கட்டவிழ்க்கப் போகிறார்கள். பார்வை வரப்போகும் நேரத்தில் இந்தத் தங்கம் எங்கே போனாள்?

இத்தனை நாட்களாகக் கட்டிய மனைவிபோல் பக்கத்திலிருந்து பராமரித்தவள் இரண்டு நாட்களாக ஏன் வரவில்லை? ஒருவேளை அவளுக்கு உடல் நலமில்லையோ?'' என்று அவளைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தான் அவன்.

''தாமஸ்! உன்னை டாக்டர் அழைத்துவரச் சொன்னார்''

மருத்துவச் சிப்பந்திகள் இருவர் கைத்தாங்கலாக அழைத்துச் சென்று அந்த அறையின் மூலையில் கிடந்த ஒரு நாற்காலியில் அவனை அமர்த்தினர்.

''தாமஸ்! உனக்கு உறுதியாகப் பார்வை கிடைக்குமென்று நம்புகிறேன்'' என்று அன்பாகச் சொன்னவாறே அவனது கட்டைப் பிரித்தார் டாக்டர் செழியன்.

''இப்பொழுது நீ கண்ணைத் திறக்கலாம். பதட்டப்படாமல் மெல்லக் கண்ணைத்திற'' டாக்டர் செழியன்தான் சொன்னார்.

இமை மூடிக்கிடந்த விழிகளை மெல்லத் திறந்தான் தாமஸ். எங்கும் பேரிருள்! அவ்விருட்டின் நடுவே இலேசான ஒளி! சற்று நேரத்திற்கெல்லாம் அந்த ஒளிக்கற்றை பெரிதாகி அவனது விழித்திரைக்குள் ஊடுருவதைப் போன்ற ஓருணர்வு! இருட்டெல்லாம்

மறைந்து எங்கும் ஒளிமயம்!!

''டாக்டர்..! எனக்குக் கண் தெரியுது டாக்டர்! இதோ நீங்கள்! அதோ அலமாரி, மேசை, நாற்காலி......''

உணர்ச்சி வசப்பட்டுக் கத்தினுன் தாமஸ். நன்றியுணர்வோடு டாக்டர் செழியனின் காலில் விழுந்தான்.

''டாக்டர்! மீண்டும் எனக்குப் பார்வை கிடைக்குமென்று நம்பவே இல்லே. உங்களுக்கு நான் எப்படி நன்றி செலுத்துவேன்?''

''எழுந்திரு தாமஸ்! எனக்கு ஏன் நீ நன்றி செலுத்த வேண்டும்? நான் என் கடமையைத் தானே செய்தேன். நீ யாருக்காவது நன்றி செலுத்த நினைத்தால், அந்தப் படத்தில் இருப்பவரை வணங்கிக் கொள்! அவர்தான் இந்தத் திட்டத்துக்கே காரணம்''

டாக்டர் செழியன் காட்டிய திசையில் தனது பார்வையைத் திருப்பினுன் தாமஸ்.

''ஏழைகளின் சிரிப்பில் இறைவனேக் காண்போம்'' என்ற வாக்கியத்தோடு தமிழக முதல்வரின் படம் அங்கே தொங்கிக் கொண்டிருந்தது.

தாமஸின் கரங்கள் அந்தப் படத்தை நோக்கிக் குவிந்தன. அவனது கண்களில் ஆனந்தக் கண்ணீர் சுரந்தது.

''உன் படுக்கைக்குச் சென்று ஓய்வெடுத்துக் கொள் தாமஸ்! மூன்று நாட்களுக்குப் பிறகு நீ உன் இருப்பிடத்திற்குச் செல்லலாம்.''

மூன்று நாட்கள் கழித்து டாக்டர் செழியனே மீண்டும் சந்தித்தான் தாமஸ். அப்போது அவன் முகத்தில் ஏதோ ஓர் ஏக்கம் குடிகொண்டிருந்தது.

''எனக்குப் பார்வை வேண்டாம் டாக்டர்! மீண்டும் என்னேக் குருடணுக்கிவிடுங்கள்.

''நீ என்ன சொல்கிருய் தாமஸ்?''

''ஆமாம் டாக்டர்! யாருக்காக வாழ ஆசைப்பட்டேனே, யாருடைய அன்புக்காக ஏங்கினேனே அவளே என்னே மறந்த பிறகு எனக்கு ஏன் இந்தக் கண்கள்?'' விரக்தி நிலேயில் பேசினுன் அவன்.

''இதோ பார் தாமஸ்! அந்தப் பெண்ணேத் தவருகக் கணிக்காதே! அவள் உனக்காக என்னவெல்லாம் செய்திருக்கிருள் தெரியுமா?''

''ஏன் டாக்டர்! தங்கம் இங்கே வந்தாளா?''

அகமும் முகமும் ஒருங்கே மலர, டாக்டர் அடுத்துச் சொல்லப் போவதை ஆவலோடு எதிர்பார்த்தான் அவன்.

''ஆமாம்! ஐந்து நாட்களுக்கு முன்பு என்னேச் சந்தித்துத் தன்னேப் பற்றியும் உன்னேப் பற்றியும் நிறையச் சொன்னுள். அவள் உன்மீது உயிரையே வைத்திருக்கிருள் தாமஸ்''

''நான் அவளேப் பார்க்க வேண்டும் டாக்டர்! தங்கம் இப்போது எங்கே இருக்கிருள்?'' ஆர்வம் அவனேக் கேட்க வைத்தது.

''எனக்குத் தெரியாது! ஆனுல் இந்த ஊரைவிட்டே போகப் போவதாகச் சொன்னுள். தன்னேத் தேடி அலேய வேண்டாமென்றும், தானே ஒருநாள் உன்னேத் தேடிவருவதாகவும் சொல்லச்சொன்னுள். எங்கிருந்தாலும் உன் எதிர்காலம் சிறப்பாக இருக்கவேண்டுமென்பதே தனது ஒரே ஆசையென்று தெரிவிக்கச் சொன்னுள்''.

டாக்டர் செழியன் சொல்லிக்கொண்டே போஞர். அவன் உள்ளமோ அழுது கொண்டிருந்தது. எண்ணங்களால் எழுப்பிய கற்பனேகளெல்லாம் தண்ணீரில் எழுதிய எழுத்துபோல் அவன் கண்ணீரில் கரைந்து போயின.

''எதிர்காலமா? எனக்கா? இனிமேலா?'' வேதனேயில் விளேந்த முறுவல் அவன் இதழோரத்தில் மின்னியது.

> குடும்ப வேலே ஒன்று மட்டுமே பெண்ணின் வாழ்நாளில் பெரும் பகுதியை விழுங்கி விடக் கூடாது.
>
> * * *
>
> கல்வியறிவு ஆண்களுக்கு எவ்வளவு இன்றியமையாததோ அந்த அளவு பெண்களுக்கும் இன்றியமையாததாகும்.
>
> —காந்தியடிகள்

''கவலேப்படாதே தாமஸ்! உன் எதிர்காலத்திற்குத் தங்கம் வழிசெய்துவிட்டுத்தான் போயிருக்கிருள்.''

மேசையைத் திறந்து ஒரு கவர் ஒன்றை எடுத்து நீட்டிஞர் செழியன். அந்தக் கவரினுள்ளே ஐந்தும் பத்துமாக ரூபாய் நோட்டுக்கள் இருந்தன.

''இந்தப் பணத்தை வைத்து உன் புதுவாழ்வைத் தொடங்கும்படித் தங்கம் கொடுத்தாள். அரசாங்க உதவியோடு உனக்கு ஒரு சைக்கிள்ரிக்ஷா கிடைக்க நான் ஏற்பாடு செய்கிறேன். அதைக்கொண்டு நீ பிழைக்கலாம் அல்லவா?''

''எனக்கு எதுவுமே வேண்டாம் டாக்டர்!''

''பைத்தியக்காரன்போல் பேசாதே தாமஸ்! குருட்டுப் பிச்சைகாரனுய் இருந்தபோது இந்தச் சமுதாயம் காட்டிய அனுதாபத்தை இனிமேலும் நீ எதிர் பார்க்க முடியாது. நாலுபேரைப் போல் நீயும் வாழ வேண்டாமா? உன் வாழ்வில் ஏற்பட்ட கறையை நீ போக்க வேண்டாமா? உன்னேயும் இந்தச் சமுதாயம் மதிக்க வேண்டாமா?

தலேநிமிர்ந்து அமர்ந்தான் தாமஸ். அவன் முகத்தில் நம்பிக்கை ஒளி அரும்பியது.

''ஆதரவற்றவர்களேயும், ஏழைகளேயும் அரவணேக்க அரசாங்கம் இருக்கும்போது நீ எதற்காகக் கவலேப்படவேண்டும்? நம்பிக்கையோடிரு! விரைவிலேயே தங்கமும் உன்னேத் தேடிவருவாள்''

புதுத்தெம்போடு அம் முகாமை விட்டு வெளியேறினுன் தாமஸ்.

காலத்தின் விரைவான ஓட்டத்தில் மேலும் ஈராண்டுகள் கழிந்தன.

கதர்ச்சட்டைக்காரர் ஒருவரைத் தன் வண்டியில் ஏற்றிக் கொண்டு தொழுநோய் சிகிச்சையாளர் மருத்துவமனேக்கு விரைந்தான் தாமஸ். வண்டியிலிருந்து பெரியவர் அவனிடம் பேச்சுக் கொடுத்தார்.

''தம்பி! இந்த அரசு எத்தனேயோ நன்மைகளேச் செய்திருக்கலாம்; அவற்றிலெல்லாம் எதை நான் உயர்வாக நினேக்கிறேன் தெரியுமா? தமிழக

முதல்வர் தம்முடைய ஒவ்வொரு பிறந்தநாளின் போதும் புரட்சிகரமான திட்டம் ஒன்றைக்கூறி அதன் மூலம் ஏழை எளிய மக்களை வாழ வைக்கிறாரே... அதைத்தான்! 'நமக்கும் எதிர்காலம் உண்டா?' என ஏங்கித் தவிக்கும் தொழு நோயாளிகளுக்கும், கண்ணிழந்தோர்க்கும், ஊனமுற்றோர்க்கும் இந்தச் சமுதாயத்தில் வாழ முடியுமென்று நம்பிக்கையைத் தந்திருக்கிறாரே.. அதைத்தான்''

வண்டியை மிதித்துக்கொண்டிருந்த தாமஸ் மெல்லத் திரும்பி பெரியவரைப் பார்த்தான்.

பெரியவரின் பெருந்தன்மையை நினைத்துப் பெருமைப் பட்டான் தாமஸ்.

''ஐயா! உங்களுக்கு வேண்டியவங்க யாராவது மருத்துவமனையிலே இருக்காங்களா?''

''ஏன் தம்பி! சொந்தக்காரங்க யாராவது இருந்தால் தான் மருத்துவமனைக்குப் போகணுமா? நோயாளிகளைச் சந்தித்து அவங்களுக்கு ஆறுதல் சொல்லும்போது ஏற்படுற மன அமைதி வாழ்க்கையில் வேறெதிலும் கிடைப்பதில்லை தம்பி! மாதந்தோறும் அவங்களைச் சந்திப்பது என் வழக்கம்.''

முதிர்ந்த அனுபவஞானத்தில் உதிர்ந்த கருத்துக்களைக் கேட்டவாறே தொழு நோய் சிகிச்சையாளர் மருத்துவமனைக்கு முன்னே ரிக்ஷாவை நிறுத்தினான் தாமஸ். வண்டியிலிருந்து இறங்கிய பெரியவர் மருத்துவமனைக்குள் நுழைந்தார். அவரைப் பின்தொடர்ந்தான் தாமஸ்.

''தொழுநோயைத் தொற்றுநோயா நினைச்சவங்களுடைய பயத்தைப் போக்கி, எங்கெல்லாமோ இருந்த தொழுநோயாளிகளை இங்கே கூட்டி, அவர்களை ஒரு குடும்பம்போல் வாழ வைத்து, அவர்களுக்கும் வாழ்க்கையில் பிடிப்பை ஏற்படுத்தி இருக்கிறார்களே! அதற்காக இந்த அரசை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம். காந்தி கண்ட கனவெல்லாம் இப்போதான் நனவாகுது தம்பி!''

பெரியவரின் பேச்சை ஆமோதிப்பது போல் தலையசைத்தான் தாமஸ்.

ஒவ்வொரு வார்டாக நுழைந்த பெரியவர், நோயாளிகளின் நலனை விசாரித்தார். அப்போது அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை அவர்களது முகமலர்ச்சியே காட்டியது.

''நீ எப்படிம்மா இருக்கே?''

''நல்லா இருக்கேன்யா! இந்த மாதமே முழுமையும் குணமாயிடும்னு டாக்டர் சொன்னாரு''.

அந்த இளம் பெண்ணை விசாரித்த பெரியவர் அடுத்த வார்டுக்குள் நுழைந்தார். ஆனால் தாமஸ் மட்டும் அங்கேயே நின்று கொண்டிருந்தான்.

எப்பொழுதோ கேட்ட குரலை அந்தப் பெண்ணின் குரலோடு ஒப்பு நோக்கியது அவன் உள்ளம்! அவளும் அவனை வெறிக்கப் பார்த்தாள்.

''நீங்க... தாமஸ்தானே!'' அவள் துணிந்து கேட்டுவிட்டாள். அவனோ அதிர்ந்து போனான்.

''ஆமாம்! நீ.. நீ.. தங்கம்!'' சொற்கள் அவன் வாயிலிருந்து பிறக்க மறுத்தன. அப்படியே அவளைத் தழுவ முயன்றான் தாமஸ். அவளோ விலகி நின்றாள். இருவரும் ஒருவரை ஒருவர் பார்வையால் விழுங்கிக் கொண்டிருந்தனர்.

''தங்கம்! எனக்கு நல்வழி காட்டிட்டு நீ மட்டும் ஓடி வந்துட்டியே என்ன காரணம்?

''தாழ்வு மனப்பான்மை என்னைத் தடுத்திட்டுது! என்னாலே உங்க வாழ்க்கையும் கெடக்கூடாதில்லியா?''

''இரண்டு வருடமா இங்கே தான் இருக்கியா தங்கம்?''

''இல்லே! கொஞ்ச காலம் சிறையிலே இருந்தேன். அப்போதான் இந்த நோய் வந்துட்டுது! உடனே என்னை இங்கே சேர்த்துட்டாங்க! சட்டத்தின் தண்டனையிலிருந்து கூட தப்பிச்சுடலாம். ஆனால் பாவத்தின் தண்டனையிலிருந்து மீளமுடியுமா? பாவத்தின் தண்டனையை முழுமையாக அனுபவிக்க நினைச்சேன். அரசாங்கந்தான் ஆரம்பத்திலேயே இங்கே சேர்த்து என்னைக் குணப்படுத்திட்டாங்க....''

தன்னைப் பற்றிச் சொல்லி முடித்தவள் அவனை வைத்த கண் வாங்காமல் பார்த்தாள்.

''நீங்க எப்படி இருக்கீங்க?''

''எனக்கென்ன குறைச்சல்? கைநிறைய சம்பாதிக்கிறேன். எனக்குன்னு சொந்தமா ஒரு குடிசைகூட இருக்கு! கவலைப் படாதே தங்கம்! இனிமேல் நீ என்னோடு சந்தோஷமா வாழலாம்.''

''நான் உங்களோடு வாழறதா?''

''ஆமாம்! ஊரறிய உன்னை என் மனைவியாக்கப் போறேன்'

''என்னையா?''

''ஏன்? நீ ஒரு இந்து! நான் ஒரு கிறித்துவன்னு நினைக்கிறியா? எந்த மதத்தையும் பற்றி எனக்கு அக்கறையில்லை. உன் சம்மதம் மட்டுந்தான் தேவை.

''என்னைப் பற்றித் தெரிஞ்சிருந்துமா இப்படிச் சொல்றீங்க?''

''குடும்பம் நடத்துறதுக்குக் கணவனும் மனைவியும் ஒருத்தரையொருத்தர் புரிஞ்சுக்கிட்டிருந்தாலே போதும்! இல்லறத்துக்கு அன்புதான் அடிப்படை! அது உன்கிட்ட நிறைய இருக்கு!''

அவன் மெய்மறந்து நின்றான். எல்லா வார்டுகளையும் சுற்றிய பெரியவர் மீண்டும் அங்கே வந்தார்.

''நீ இங்கேயே நின்னுட்டியா தம்பி! இந்தப் பெண்ணை உனக்கு ஏற்கனவே தெரியுமா?''

நடந்த கதையை அவருக்குச் சுருக்கமாகச் சொன்னான் தாமஸ்.

''அப்படியா சேதி? உங்க கல்யாணத்துக்கு நான் ஏற்பாடு செய்றேன்''

இருவரது கரங்களையும் இணைத்து வைத்தார் பெரியவர்.

தாமசும் தங்கமும் ஏனோ கண்கலங்கினர். அவர்களது கண்களில் நீர் கசிந்தது. அது ஏழைகளின் இதயத்திலிருந்து சுரக்கும் ஆனந்தக் கண்ணீர்.

# 1975 உலக மகளிர் ஆண்டு

எஸ். முத்துராமலிங்கம்

"பெண்ணடிமை தீரும் மட்டும் பேசும் திருநாட்டின் மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே!'' என்றார் பாவேந்தர். வாழ்வின் அனைத்துக் கூறுகளிலும் திறன் காட்டும் வாய்ப்பைப் பெண்கள் பெற வேண்டும். கல்விக் கண் திறக்கப்பட வேண்டும். கவின் கலைகள் அனைத்திலும் மகளிர் பங்கேற்கும் நிலை வளர வேண்டும். அப்போதுதான் உலக வாழ்வு முழுமை பெறும்.

சமுதாய—பொருளாதார வளர்ச்சிக்குப் பெண்களின் பணி இன்றியமையாதது. இலக்கியப் பாத்திரங்களாவதற்கு மட்டும் உரியவர்கள் அல்லர் பெண்கள். இந்த நாட்டின் ஏற்றத்திற்காக ஏற்ற துறைதொறும் இயன்ற வகையெல்லாம் பணியாற்றிச் சிறப்பான வெற்றி தேடித் தரும் திறனும் இயல்பும் படைத்தவர்கள் பெண்கள்! அவர்தம் ஆற்றல் பயன்படுத்தப்பட வேண்டும்! அவர்களது பணியால், அளப்பரிய வெற்றியினை இந்த நாடும் உலகமும் பெற்றுப்பயனடைய வேண்டும். அந்த வகையில் உலக மகளிரிடையே விழிப்பு உணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற பெரு நோக்கில் ஐக்கிய நாடுகள் மன்றம் இந்த 1975-ஆம் ஆண்டை 'உலக மகளிர் ஆண்டு' என அறிவித்து விழா வெடுக்கிறது—ஆக்கப் பணிகளில் ஈடுபடுகிறது.

ஐ. நா. மன்றத்தின் பொதுச் சபை 18—12—1972 நாள் நிறைவேற்றிய 3010 வது தீர்மானத்தின்படி, 1975-ஆம் ஆண்டை உலக மகளிர் ஆண்டு என அறிவித்துப் பெண்கள் முன்னேற்றத்துக்கான நடவடிக்கைகள் எடுப்பதற் குரியவற்றைச் செய்யுமாறு தனது பொதுச் செயலாளரைக் கேட்டுக்கொண்டது. ஐ. நா. மன்றத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள், தன்னியக்க நிறுவனங்கள் முதலியவற்றின் கருத்துக்கள் திரட்டப்பட்டு, அவற்றின் அடிப்படையில், 'உலக மகளிர் ஆண்டு 1975' எப்படி எப்படியெல்லாம் பயனுடையதாய் அமைய வேண்டுமென்பதற்கான பல்வேறு கருத்துக்கள் -கொள்கைகள்-கோட்பாடுகள் ஆகியவற்றை வகுத்தும் தொகுத்தும் அளித்துச் செயல்பட்டு வருகிறது ஐ. நா. மன்றம்.

ஐ. நா. மன்றம் 1967-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில், பெண்களுக்கு எதிராகக் காட்டப்படும் வேறுபாடுகள் வேரறுக்கப்பட வேண்டும் என **'உறுதி ஆவணம்'** (Declaration) ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த உறுதி ஆவணத்தின் முன்னுரையில், ''பெண்களுக்கு எதிராகக் காட்டப்படும் வேறுபாடுகள் மனித இனத்தின் மாண்புக்கும் மரியாதைக்கும், குடும்ப நல வாழ்வு, சமுதாயத்தின் நல்வாழ்வு ஆகியவற்றிற்கும் முரண்பாடானவை.

ஒரு நாட்டின் முழுமையான, குறைவேதுமில்லாத வளர்ச்சிக்கும், உலக நல்வாழ்வுக்கும், உலக சமாதானத்துக்கும் தேவையானது எதுவென்றால், அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் பங்கு பெற வேண்டும் என்பதேயாகும்'' எனக் கூறியிருப்பதன் வாயிலாகப் பல ஆண்டுகளுக்கு முன்பேபெண்கள் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் குறித்து எண்ணியிருக்கிறது ஐ. நா. மன்றம். 1975-ஆம் ஆண்டான உலக மகளிர் ஆண்டில் நிறைவேற்ற வேண்டிய பணிகள் பற்றி முந்திச் சிந்தித்துச் செயல்படத் துவங்கியிருக்கிறது ஐ. நா. மன்றம் என்பது தெளிவாகிறது.

உலக மகளிர் ஆண்டு என அறிவிக்கப்பட்டுள்ள இந்த 1975-ஆம் ஆண்டில் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமம் என்ற நிலையை வளர்த்தல்—அனைத்துலக அளவிலும் தேசிய நிலையிலும் ஏற்பட வேண்டிய பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சிகளில் பெண்டிர் ஆற்ற வேண்டிய சிறப்புப் பணிகள் குறித்து விளக்கிப் பங்கேற்கச் செய்வது—மொத்த வளர்ச்சிப் பணிகளில் முழுமையாகப் பெண்களைப் பங்கு பெறச் செய்வது ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். உலக சமாதானத்தை ஏற்படுத்துவதில் மகளிர் பங்கு எவ்வளவு மகத்துவம் வாய்ந்தது என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும் எனத் தொடக்கத்தில் கூறப்பட்ட ஐ. நா. மன்றத்தின் 3010-வது தீர்மானம் கூறுகின்றது.

சமத்துவம், வளர்ச்சி, சமாதானம் ஆகியவையே உலக மகளிர் ஆண்டின் தலையாய நோக்கம் எனலாம். இந்த அடிப்படையில் 1945-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஐ. நா. மன்றப் பட்டயத்தின் நோக்கங்கள் எந்த அளவு நிறைவேற்றப் பட்டுள்ளன என்பது உலக மகளிர் ஆண்டில் ஆய்வு செய்யப்படும். ஆற்றல் வாய்ந்த ஊக்கமூட்டும் நடவடிக்கைகள் பலவற்றை இது தொடர்பாக தேசிய அளவிலும் அனைத்துலக அளவிலும் எடுப்பதற்குச் சரியான தருணம்

இதுவே யாகும். பெண்களின் நிலையை உயர்த்தல், சமுதாயத்துக்கு அவர்கள் ஆற்ற வேண்டிய பணியை ஆற்றச் செய்வது ஆகியவை இவ்வாண்டின் பணிகளாகும். மேலும் மனித உரிமைகள், வளர்ச்சி, சமாதானம் ஆகியவை ஒன்றினைவிட்டு ஒன்று ஓங்க முடியாது. இவை நிறைவேறப் பெண்களும் ஆண்களும் இணைந்து செயல் பட வேண்டும். அனைத்து வயதுப் பெண்களும்—அனைத்துத் துறைகளில் உள்ள பெண்களும்—அனைத்து நாடுகளில் உள்ள பெண்களும் உலக மகளிர் ஆண்டு நடவடிக்கைகள் வெற்றி பெற, தங்கள் கற்பனை, உருவாக்கும் திறன் ஆகியவற்றைப் பயன்படுத்தி எத்தனை எத்தனை நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அவற்றை அவர்களே எடுக்க வேண்டும் என்பது ஐ. நா. மன்றத்தின் விழைவு!

பெண்ணுரிமை வேண்டுமென விழையும் எந்த நாட்டுச் சமுதாயமும் ஐ. நா. மன்றத்தின் அளப்பரிய இப் பெரும்பணிக்குத் துணை நிற்கும் என்பதில் ஐயமில்லை. அரசியல் விடுதலை பெற்ற போதிலும் நம் நாடு பொருளாதார மேம்பாடு என்ற விடுதலையைப் பெறுததுபோல, நமது பெண்கள் உரிமையாய் வாழாதுதான் உள்ளார்கள்!

இந்த நாட்டுச் சமுதாயத்தில் பெண்ணடிமைத் தனம் புரையோடிப் போய்த்தான் இருக்கிறது என்ற உண்மையைச் சொல்ல யாரும் வெட்கப்பட வேண்டியதில்லை—வேதனைப்பட வேண்டிய தேவையுமில்லை. சமுதாயத்தில் இழையோடிப் போய்க் கிடக்கும் பெண்ணடிமைத் தனம் ஆங்காங்கே தோன்றுமவில்லை—நீறுபூத்த நெருப்பாக அது இருந்து கொண்டுதான் இருக்கிறது. வட்டமிடும் கழுகாக—வாய் பிளந்து நிற்கும் ஓநாயாக அது வாய்ப்பினை எதிர்நோக்கிக் காத்துக் கிடக்கிறது வளர்வதற்கு! அதன் வேகம் குறைக்கப்பட வேண்டும்—முனைப்பு மழுங்கச் செய்யப்பட வேண்டும் உலக மகளிர் தொகை ஆண்டில்!

'வண்மை உயர்வு
மனிதர் நலமெல்லாம்
பெண்மையினால் உண்டென்று
பேசவந்த பெண்ணழகே!

நாய் என்று பெண்ணை
நவில்வார்க்கும் இப்புவிக்குத்
தாய் என்று காட்டத்
தமிழர்க்கு வாய்த்தவளே!

மூடத் தனத்தின்
முடைநாற்றம் வீசுகின்ற
காடு மணக்கவரும்
கற்பூரப் பெட்டகமே!

வேண்டாத சாதி
இருட்டு வெளுப்பதற்குத்
தூண்டா விளக்காய்த்
துலங்கும் பெருமாட்டி!

எனப்பெண் குழந்தை தாலாட்டில் பெண்மையை ஏற்றிப் புகழ்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதி தாசன்! அந்தப் பெண்மைக்குத் தமிழகம் தந்திருந்த இடமென்ன? பழந் தமிழகத்தில் பெண்ணுரிமை உண்டா என்றெல்லாம் எண்ணத் தோன்றும்! பழந் தமிழகத்தில் பெண்ணுரிமை இருந்தது என்பதைத் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் — மகளிர் மாண்பு, மாட்சி இவற்றை உலகுக்குக் காட்டப் 'பெண்ணின் பெருமை' என்றதொரு தனி நூலைத் தந்திருக்கிறார் திரு. வி. க. அவர்கள்.

பழந்தமிழ் நாடு பெண் மக்கள் உரிமைக்கு ஓர் இலக்கியம் என்று கூறல் உயர்வு நவிற்சியாகாது. பழந்தமிழ் நூல்களைத் துருவித் துருவி ஆராய்ந்தால் அவற்றில் யாண்டும் பெண்ணுரிமை காணலாம்; என அந்நூலில் அவர் கூறியிருப்பது தக்க விடையாகும். மேலும் பழந் தமிழகத்தில் வாழ்ந்த ஔவையார், பெருங்கோப் பெண்டு போன்ற பெண்பாற் புலவர் மக்களெல்லாம் பெண்ணுரிமை தமிழகத்தில் தக்க இடம் பெற்றிருந்தது என்பதற்குச் சான்றுகளாவர்! புறநானூறு காட்டும் பெண்களும், இளங்கோவடிகள் காட்டியுள்ள கண்ணகியும் தமிழகத்துப் பெண்கள் உரிமையோடு மட்டுமல்ல வீரத்தோடும் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கு இலக்கிய எடுத்துக்காட்டுகளாகத் திகழ்பவர்களாவர்.

இடைக் காலத்தில் இலக்கிய இடைச் செருகல் போன்று ஏற்பட்ட எண்ணற்ற வேண்டாத பழக்க வழக்கங்களால் தமிழர் சமுதாயமே தாழ்வுபடுத்தப் பட்டது என்றால் மிகைபடக் கூறியதாகாது. பெண்ணுரிமையிலும் தொய்வு ஏற்பட்டது. ஆனால் அந்தத் தொய்வும் தளர்ச்சியும் தகர்த்தெறியப் பட்டுவிட்டது தமிழர் தலைவர்களால்! நாட்டில் பெண் கல்வி பெருகி வருகின்றது. பெண்டிர் புக முடியாது என்றிருந்த காவல் துறையிலும், பொறியியல் துறையிலும் கூடப் பெண்கள் புகுந்துள்ளார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். வேலை வாய்ப்புகள் அனைத்திலும் ஐம்பது விழுக்காடு பெண்களுக்கும், ஐம்பது விழுக்காடு ஆண்களுக்கும் தரப்பட வேண்டும் என்ற தந்தை பெரியார் அவர்களின் கருத்து, தமிழகத்தில் விரைவில் கைகூடும் என்று கூடத் தோன்றுகிறது.

இன்றையப் பெண்கள் விழிப்பு உணர்வோடு வளர்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு ஊக்கந் தர வேண்டும். பண்டைய நிலைகளை எண்ணிக் கொண்டு சமுதாயம் பின்வாங்காது பெண்களின் நிலை உயர ஆவன செய்யாது இருந்துவிடக் கூடாது. அதுபற்றி அஞ்சத் தேவையில்லை என்பதைத் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு பேட்டியில்,

> பெண்ணுக்குச் சுதந்தரமே கிடையாதென மனு கூறிய தாகக் கூறப்படும் வாக்கை நான் வேதவாக்காகஃ ஒப்புக் கொள்ள முடியாது. பெண்களை அடிமை நிலையில் அடக்கி வைத்திருந்த காலத்தில் தோன்றிய வாக்கு என்பதை அது எடுத்துக் காட்டுகிறது.
>
> —காந்தியடிகள்

''பழைய அளவு கோலை வைத்து இன்றையப் பெண்களை எடை போட்டு, அவர்கள் பண்பாடில்லாதவர்கள், அடக்கம் இல்லாதவர்கள் என்றெல்லாம் பேசுவது தவறு. பண்பாடு என்பது உள்ளத்தில்தான் இருக்க வேண்டும்; உடையிலும் அலங்காரத்திலும் அந்த உள்ளத்தின் உணர்வு பிரதிபலிக்க வேண்டும்'' என்று கூறியிருப்பது தெளிவாக்குகிறது.

எனவே பொது வாழ்வு முதல், துறைகள் அனைத்திலும் பெண்கள் உரிய பங்கேற்றுப் பெண்ணுரிமையுடன் வாழ்வில் முன்னேற உலக மகளிர் தொகை ஆண்டில் ஐ. நா. மன்றத்தாலும் நம் நாடு உட்படப் பன்னாட்டு அரசுகளாலும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் வழி வகுக்கும்.



# அண்ணா நகர் மகளிர் மன்றம்

வீட்டை நிருவகிப்பது முதல் நாட்டைக் காப்பது வரையில் பெண்களுக்குப் பொறுப்பு உண்டு. 'பெண்கள் நாட்டின் கண்கள்' எனவும் புகழப்பட்டு உள்ளனர். இத்தகு குண நலன்கள் பெற்ற பெண்கள் தங்களால் இயன்ற அளவு நாட்டிற்கு நற்பணியாற்றிட முன் வர வேண்டுமல்லவா? நாட்டு நலனில் அக்கறை கொள்ள வேண்டுமல்லவா?

இவைகளைக் கருத்திற் கொண்டுதான் இன்று நம் நாட்டுப் பெண்கள் தங்களுக்குக் கிடைக்கின்ற ஓய்வு நேரங்களைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொண்டு நாட்டுப்பணியிலும், பொதுப் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர். பல்வேறு அமைப்புகள் மூலம் அவர்கள் பணியாற்றிவருவதை நாம் காணலாம்.

இந்த வகையில் தமிழகம் முழுதும், குறிப்பாக மகளிர் மன்றங்கள் பல்வேறு பணிகளில் ஈடுபட்டுப் பயனுள்ள செயல்களைச் செய்து வருகின்றன. அவற்றுள் ஒன்று அறிஞர் அண்ணா நகரில் செயல்பட்டு வரும் மகளிர் மன்றம்.

இம் மகளிர் மன்றம் 1972-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் துவக்கப் பெற்றது. முதலில் 60 உறுப்பினர்களைக் கொண்டு துவக்கப் பெற்ற இதில் தற்பொழுது ஏறத்தாழ 175 உறுப்பினர்கள் உள்ளனர்.

இம்மன்றத்தின் உறுப்பினர்கள் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருவதால் அவர்களின் செயல் முறைகள் சிறந்தமுறையில் நடைபெற வேண்டியிருப்பதால் போதுமான இடம், கிடைத்திட வேண்டும். எனவேதான், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினைச் சார்ந்த, அறிஞர் அண்ணா நகர் கோபுரத்திற்கு அருகிலுள்ள கட்டடம் ஒன்று ஒப்பந்த அடிப்படையில் இதற்கு வழங்கப்பட்டுள்ளது.

இம்மன்றத்தினுடைய முதலாம் ஆண்டு நிறைவு விழா 1973-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையிலும், இரண்டாம் ஆண்டு நிறைவு விழா 1974-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு செ. மாதவன் அவர்கள் தலைமையிலும் சிறப்பாக நடந்தேறின. ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டி மற்றும் மாறுபட்ட போட்டிகள் நடத்தப்பெற்று வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

அறிஞர் அண்ணா நகர், செனய் நகர், அரும்பாக்கம் போன்ற பகுதிகளைச் சார்ந்தவர்கள் இம்மன்றத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். இதில் துணிகளில் ஓவியம் தீட்டுதல், தையற்கலை, இசை, நடனம், வீணைப் பயிற்சி, கைத்தொழில், பொம்மைகள் செய்தல், கூடை பின்னுதல், சமையற் கலை போன்றவைகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பயிற்சிக்கும் தனித் தனி ஆசிரியைகள் நியமிக்கப் பெற்றுள்ளனர். மன்ற உறுப்பினர்களுக்குப் பயன்படும் விதத்திலும், நன்மையளிக்கின்ற முறையிலும் நடத்தப் பெற்று வருகின்ற இந்தப் பயிற்சி வகுப்புகள் எல்லாராலும் பாராட்டப்படுகின்றன.



அண்ணா நகரைச்சுற்றியுள்ள குடிசைப் பகுதிகளுக்கு இம் மன்ற உறுப்பினர்கள் நேரில் சென்று குடும்ப நலத் திட்டத்தின் அவசியம் குறித்தும், குழந்தைகள் வளர்ப்பு பற்றியும் எடுத்துக் கூறி வருகிறார்கள். மாதந்தோறும் அனைத்து உறுப்பினர்கள் சந்திக்கின்ற முறையில் கூட்டம் நடத்தித் தங்களின் எண்ணங்களையும், செயல் முறைகளையும் விவாதித்துக் கொள்கின்றனர்.

சமையல் பற்றிய விளக்கவுரைகள் மாதந்தோறும் நடைபெறுகின்றன. உணவு மற்றும் சத்துணவுத் துறையினரின் சீரிய ஒத்துழைப்போடு சாறு தயாரித்தல் (Juice making) சத்துணவுதயாரித்தல் முதலிய வகுப்புகளையும் நடத்துகின்றனர்.

இவர்கள் தயாரிக்கின்ற பொம்மைகள் விக்டோரியா தொழில்நுட்ப நிலையத்திற்கு விலைக்குத் தரப்படுகின்றன. நண்பர்கள், உறவினர்களுக்கும் பரிசுப் பொருளாகவும் வழங்கப்படுகின்றன.

இம்மன்றத்தின் உறுப்பினர்கள் சென்னைவானொலி நிலையத்தில் நடைபெற்ற மகளிர் நிகழ்ச்சிகள் பலவற்றில் பங்குபெற்று மகளிர் நலப் பணிகளின் இன்றியமையாமையை விளக்கியுள்ளனர்.

இவ்வாறு நாள்தோறும், துறைதோறும் சிறப்பான முறையில்விரைந்துபணியாற்றி வரும் அண்ணா நகர் மகளிர் மன்றத்தின் நற்பணிகள் மேலும் சிறந்து விளங்கி வளர்ந்தோங்கிப் பயன் பல தரும் என நம்புவோமாக!

—ஆயிரம்.

# தமிழ்நாட்டில் மகளிர் நலம்

மகளிர் நலத்துறை 1947 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. மகளிர் நலத்துறை இயக்குநர் ஒருவரைக் கொண்ட முழு அளவிலான துறையொன்று 1955-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாடு மாநில சமூக நல வாரியம் 1954 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் கொண்டுவரப்பட்டதை அடுத்து, மகளிர் நலத்துறை, மாநில சமூக நல வாரியம், சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் மகளிர் நலப் பிரிவு ஆகிய மூன்று அமைப்புகளும் 1961-ஆம் ஆண்டில் ஒருங்கிணைக்கப்பட்டு மகளிர் நலத்துறையாக உருவாக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டில் மகளிர் நலத்துறையின் பெயரை சமூக நலத்துறை என்று மாற்றியதும் குறிப்பிடத் தக்கதோர் அம்சமாகும்.

தமிழ்நாட்டில் 1972 ஆம் ஆண்டு முதல் பாலர் பள்ளிகள் இயங்கி வருகின்றன; கிராமப்புற மகளிர்க்கும் அவர்தம் குழந்தைகட்கும் பணி புரியும் இரட்டைக் குறிக்கோளைக் கொண்டு அவை செயல்பட்டு வருகின்றன. வேலைக்குச் செல்லும் கிராமப்புற மகளிர் தம் குழந்தைகளை பாலர் பள்ளியில் விட்டுச் செல்ல முடிவதால், தங்களுடைய வேலை நேரத்தில் தங்கள் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள வேண்டியது பற்றி கவலையற்று இருக்கவும், குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் நற்பழக்கத்தை வேரூன்றச் செய்யவும் இது உதவுகிறது. இதன் காரணமாகத்தான் இம்மாநிலத்தில் இலவசத் தொடக்கக் கல்வியளிக்கும் திட்டம் பெருமளவுக்கு வெற்றி கண்டுள்ளது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நான்காவது ஆண்டு இறுதியில் 840 பாலர் பள்ளிகள் தொடங்கப்பட்டன 1973-74-ல் புதிய பாலர் பள்ளிகள் 600 தொடங்கப்பட்டன. ஒவ்வொரு பாலர் பள்ளிக்கும் ரூ. 400 அளவில் கல்வி மற்றும் பொது வகையான சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. பாலர் பள்ளிகள் எண்ணிக்கையில் தமிழ்நாடே மற்ற மாநிலங்களைக் காட்டிலும் முன்னணியில் நிற்கிறது. தமிழ்நாட்டில், 2,676 பாலர் பள்ளிகள் உள்ளன; 2,280 பாலர் பள்ளிகளில் தவறாமல் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது

மகளிர் நலத்துறையில் பணிகளை மகளிர் நலப் பிரிவுகள் மேற்கொள்ளுகின்றன. இப்பிரிவுகளின் மூலம், கிராமத்தைச் சேர்ந்த மகளிருடன் தொடர்பு கொள்ளப்படுகிறது. மாநிலம் முழுவதிலுமாக 50 மகளிர் நலப் பிரிவுகள் உள்ளன. இப்பிரிவுகளுக்குப் பொறுப்பு வகிக்கும் மகளிர் நல அமைப்பாளர்கள் காலையில் பாலர் வகுப்புகள் நடத்துகின்றனர். மாலையில் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று குடும்பக்கலை, சத்துணவு, குழந்தை வளர்ப்பு ஆகியவற்றைக் கற்பிக்கின்றனர். மகளிர் கூட்டங்கள், நடத்தி தையல், பாய் முடைதல், தையல் இலை தயாரித்தல் முதலியவற்றில் பயிற்சியும் அளிக்கின்றனர். ஒவ்வொரு பிரிவுக்கும் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ரூ. 6,000 செலவாகிறது. பிரிவுகளில் இரண்டு குடிசைவாழ் மகளிர் நலனுக்கென, சென்னை மாநகரில் டொம்பிக் குப்பம், வ. உ. சி. நகர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

இத்துறை, பணிபுரிகின்ற குறைந்த வருமானம், நடுத்தர வருமானம் உடைய மகளிருக்காகச் சென்னை மாநகரில், 25 பேர் தங்கக்கூடிய பணி புரியும் மகளிர் இல்லம் ஒன்றை 1967-ல் தொடங்கியது. இதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 34,200 செலவாகிறது.

சமூகத்தில் நொடிந்துபோன வாழ வழியற்ற பெண்களுக்கு வாழ வழிகாட்டுவதற்காகத் தாம்பரம், கடலூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் மூன்று சேவை இல்லங்கள் இயங்கிவருகின்றன. 18 முதல் 30 வயது வரையுள்ள பெண்களுடன் அவர்களின் இரு குழந்தைகளும் இவ்வில்லங்களில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அத்துடன், இதுபோன்ற சேவை இல்லங்கள் நடத்துவதற்கான ஆறு சமூக நல நிலையங்களுக்கு மானியம் வழங்கப்படுகின்றன.

இவ்வில்லங்களில் சேர்த்துக் கொள்ளப்படும் பெண்களுக்கு மறு வாழ்வு அளிப்பதற்காகக் கீழ்க்காணும் திட்டங்களும் செயற்படுத்தப்படுகின்றன.

(1) அரசுத்தொழில் நுட்பத் தேர்வுக்குச் செல்லும் வண்ணம் 50 பெண்களுக்குத் தையற் பயிற்சியளிக்கும் வகையில் ஒரு தையல் தொழிற் பிரிவு தாம்பரம் சேவை இல்லத்தில் நடைபெற்று வருகிறது. இதுபோன்று 15 பெண்கள் வீதம் பயிற்சிபெறும் வகையில் கடலூர், தஞ்சாவூர் சேவை இல்லங்களிலும் தையல் தொழிற் பிரிவு இயங்கி வருகின்றன.

(2) தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயிற்சியளிக்கும் செயலகப் பயிற்சி வகுப்பு மூன்று சேவை இல்லங்களிலும் ஸ்ரீ சேவா மந்திர் என்னும் சமூக நல நிலையங்களிலும் இயங்கி வருகின்றன.

(3) தாம்பரம் சேவை இல்லத்தில் ஒரு இடை நிலை ஆசிரியைப் பயிற்சிப் பிரிவு இயங்கி வருகிறது.

(4) தாம்பரம், கடலூர் ஆகிய சேவை இல்லங்களில் உடை தயாரிக்கும் உற்பத்தி நிலையங்களும் தொடங்கப்பட்டு இயங்கிவருகின்றன.

கடைநிலை மற்றும் இடைநிலை ஊதியம் பெறும் பெண்

கள் 25 பேர் தங்கும் வகையில் ஒரு பணியும் பெண்கள் இல்லம் சென்னையில்நடத்தப்பட்டு வருகிறது.

தாழ்த்தப்பட்ட இனத்தவர், மலைசாதியினர், குற்றப் பட்டியலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர், முன்னாள் இராணுவ வீரர், ஆசிரியர், தொழிலாளர் குடும்பத்தினர், மற்றும் பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையிலுள்ள பெண்கள் பயன்பெறும் வகையில் நாடு முழுவதும் 49 பயிற்சி நிலையங்களும், 9 உற்பத்தி நிலையங்களும் நடைபெற்று வருகின்றன. இந்நிலையங்களில் தையல், பாய், கம்பளி, போர்வை நெய்தல், கயிறு தயாரித்தல், பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல் போன்ற சிறு குடிசைத் தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகின்றன.



1974-75 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ஏழைப் பெண்களின் சமூகப் பொருளாதாரத்தில் மறுமலர்ச்சிக்காக பல திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. ரூ. 43,000 செலவில் தென் ஆர்க்காடு மாவட்டம் உளுந்தூர்ப் பேட்டையிலும், தருமபுரி மாவட்டம் அரூரிலும் 1.7.74 முதல் செயல்பட்டு வரும் இரண்டு உடை உற்பத்திப் பயிற்சி நிலையங்கள் இத் திட்டத்தைச் சேர்ந்ததாகும்.

## தமிழ்நாட்டில் மகளிர் மன்றங்கள்

தமிழ்நாட்டில் 1962-63 முடிய மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கிராமங்கள் அனைத்திலும் ஊராட்சிக்கு ஒரு மகளிர் மன்றம் வீதம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 மகளிர் மன்றங்கள் துவங்கப்பட்டன. தற்போது சுமார் 13,124 மகளிர் மன்றங்கள் கிராமங்களில் இயங்கி வருகின்றன. அங்கே கிராம மகளிர் ஒன்றுகூடி தமது முன்னேற்ற வாழ்விற்கான வழிமுறைகளைக் கற்று கடைப்பிடிக்க ஆவன செய்து வருகின்றனர்.

துவங்கப்பட்ட சுமார் 13,124 மகளிர் மன்றங்களில் சுமார் 10,082 மகளிர் மன்றங்களுக்குத் தையல் இயந்திரம், சக்கி போன்ற கைத்தொழில் உபகரணங்கள் 50 சதவிகிதம் அரசு மானியத்தில் வாங்கி விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மகளிருக்கான 359 வானொலி மன்றங்கள் துவங்கப்பட்டுள்ளன. 318 மன்றங்களுக்கு 50 சதவிகிதம் அரசு மான்ய உதவியுடன் வானொலிப் பெட்டிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 'யூனிஃசெப்' மூலம் டிரான்சிஸ்டர்களும் இவ்வானொலி மன்றங்களுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மகளிர் மன்றத்திற்கும் அவ்வூரிலுள்ள தலைமைப் பொறுப்பை ஏற்கக் கூடிய மகளிர், மகளிர் மன்ற அமைப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வமைப்பாளர்கள் தங்களது ஒய்வு நேரத்தில்கட்டடங்களைக் கட்டி மகளிர்க்குத் தையல் வேலை—சிறு சேமிப்பு, சுகாதாரம், வீட்டுத் தோட்டம், மகளிர் நலம், குழந்தை வளர்ப்பு, குடும்பநலம், சத்துணவு தயாரித்தல், குறைந்த உழைப்பில் சமைத்தல் ஆகியவற்றை கிராம சேவிகா, முக்கிய சேவிகா அறிவுரைப்படி கற்பிக்கின்றனர்.

இந்த அமைப்பாளர்களுக்குக் கூட்டுப் பயிற்சி திட்டத்தின்கீழ் சிக்கனமாக வாழ்தல், சத்துணவு, விவசாயம், சுகாதாரம், கால்நடை வளர்ப்பு போன்றவைகளில் 1 மாத காலம் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்கள் மகளிர் மன்றத்தை முறைப்படி நடத்த தகுதியுள்ளவர்களாக ஆக்கப்படுகின்றனர். இதுவரை மொத்தம் 4,997 மகளிர்க்கு இத்தகைய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அமைப்பாளர்களைத் தவிர 6 மகளிர் மன்றங்களுக்கு ஒரு தையல் ஆசிரியை வீதம் நியமனம் செய்து மகளிர் மன்ற அங்கத்தினர்களுக்குத் தையல் கலையும் கற்பிக்கப்படுகிறது.

மேலும் கிராமங்களில் கிடைக்கும் உணவுப் பொருட்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தி அதைச் சத்துள்ள உணவுப் பொருளாக உட்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் 'சத்துணவுக் கல்வித் திட்டம்' ஒரு ஒன்றியத்திற்கு 12 மகளிர் மன்றங்கள் வீதம் 104 ஒன்றியங்களில் மொத்தம் 1,248 மகளிர் மன்றங்களில் அமுலாக்கப்பட்டுள்ளது. இதன்கீழ் கிராமமக்களும் செயல்முறை விளக்கமாகச் செய்து காட்டப்படுகிறது. சமையல் செய்முறை பொருட்டு ஒரு மகளிர் மன்றத்திற்கு மாதம் ரூ. 2 வீதமும், சமையல் உபகரணங்கள் வகைக்கென ரூ. 500-ம் இதுவரை செலவழிக்கப்பட்டுள்ளது.

சிறந்த மகளிர் மன்றங்களுக்குப் பரிசளித்தல் மூலம் பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவித்தல் என்ற அடிப்படையில் கலவைத் திட்டத்தின் கீழ் சிறந்த மகளிர் மன்றங்களுக்கு 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி மூன்று ஆண்டுகளில் பரிசளிக்கப்பட்டுள்ளது. சுமார் 600 மகளிர் மன்றங்களுக்கு அளித்தப் பரிசுத் தொகையை பாய் முடைதல், தையல் வேலை, மீன் வலை பின்னல், கால்நடை வளர்ப்பு, கோழிவளர்ப்பு தேனீ வளர்ப்பு போன்ற சிறு கைத்தொழில்களைத் துவங்கி அதன் மூலம் உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது. மகளிர் மன்ற அமைப்பாளர்களே மேற்படி நடவடிக்கை அனைத்திற்கும் பொறுப்பானவராவர். கிராம சேவிகா, முக்கிய சேவிகாக்கள் அமைப்பாளர்களுக்கு அவ்வப்போது அறிவுரை அளிப்பார்கள்.

இவ்வாறு தமிழக அரசின் சமூக நலத்துறையின் கீழுள்ள மகளிர் நலத்துறை மகளிர் நலத்திற்காக அரும்பெரும் பணிகளை ஆற்றி வருகிறது—சாதனைகளை நிகழ்த்தி வருகிறது ; இந்தப் பணிகள் தொடர்ந்து வருகிறது; இந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெற—வெற்றி பெற—அரசு அயராது பாடுபடுவது உறுதி.

மாவட்டந்தோறும் நடைபெற்றுவரும் மகளிர் நலப் பணிகள் இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

# மாவட்டங்களில் மகளிர் நலப் பணிகள்



## சென்னை மாவட்டம்



**1962** வரை சென்னை மாவட்ட மகளிர் நலன் செங்கை மாவட்டத்தோடு இணைந்து இருந்தது. 1962 இறுதியில் சென்னை மாவட்டம் தனியாகச் செயல்பட ஓர் அலுவலரை நியமித்து 3 மகளிர் நலக் கிளைகளுடன் அலுவலகம் துவக்கப் பட்டது. இம் மூன்று மகளிர் நலக் கிளைகள் ஒவ்வொன்றும் 2 கிளைச் சங்கங்களுடன் காலையில் பாலர் பள்ளிகளும் மதியம் ஓய்வு நேரத்தில் பெண்கள் கைவேலை, தையல் மூலம் ஓரளவு ஊதியம் பெற பயிற்சியும் வாய்ப்புகளும் ஏற்படுத்தப் பட்டது. மேலும் குடும்பக் கட்டுப்பாடு, குடும்ப நலன், சிறு சேமிப்பு, வரவு செலவுக் கட்டுப்பாடு, கும்மி போன்ற கலைகளையும் அமைப்பாளர்கள் மூலமும், இவைகளை அறிந்த அங்கத்தினர்கள், அறியாத அங்கத்தினர்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலமும் அறிவு வளர்ச்சி, அனுபவ வளர்ச்சி, சமூகத்தில் கூட்டுறவுடன் வாழவும், பழகவும் சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டன.

1969-ல் அரிசன மக்களின் நலத்தை உத்தேசித்து மங்களபுரம் சேத்துப்பட்டல் உள்ள அரிசனப் பெண்களுக்கு 1 வருட காலம் மாதம் ரூ.30 மானியத்துடன் தையற்கலையில் பயிற்சி அளிக்கப்பெற்றது. டிப்ளமோ வாங்கின ஆசிரியை தையற் கலைப் பயிற்சி அளிக்கிறார். 1970-ல் கோகுலம் காலனி அரிசனப் பெண்களுக்கு 2 தொகுதிப் பயிற்சி அளிக்கப் பட்டது. அதன் பிறகு வெங்கடாபுரத்திற்கு மாற்றப்பட்டு அங்கும் 2 தொகுதிகள் பயிற்சி அளிக்கப்பட்டது. பிறகு கோட்டூர்புரத்திற்கு மாற்றப்பட்டு, தற்போது அங்கே பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது வரை 2 தொகுதிபயிற்சியாளர்களுக்கு அரிசன நலத் துறையினரால் இலவசமாகத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

1970—71-இல் செங்கை மாவட்டத்திலிருந்து 3 மகளிர் நலக் கிளைகள் சென்னை மாவட்டத்திற்கு மாற்றப்பட்டது.





1972-ல் 2 புதிய கிளைகள் துவங்கப்பட்டன. தற்போது 8 மகளிர் நலக் கிளைகளும், 16 துணைக் கிளைகளும் செயல்பட்டு வருகின்றன.

1972-ல் பர்மா அகதிப் பெண்களுக்கென வியாசர்பாடியில் தையற் பயிற்சிக்கூடம் ஒன்றைத் துவக்கி ஒவ்வொரு வருக்கும் மாதம் ரூ. 30 மானியத்துடன் 25 பெண்களுக்கு 2 வருடம் பயிற்சி அளிக்கப்பட்டது. தற்போது 2-ஆம் தொகுதி நடைபெற்று வருகிறது. 1972—73-ல் தொழிலாளர் குடும்ப நலனைக் கருதி அக்குடும்பத்திலுள்ள பிள்ளைகள், மக்களுக்காக காலையில் பாலர் வகுப்பும், மதியம் தொழிலாளர் குடும்பப் பெண்களுக்காகத் தையற் பயிற்சிகூடங்களும், செம்பியத்திலும், அம்பத்தூரிலும் இயங்கி வருகின்றன. பாலர் வகுப்புப் பிள்ளைகளுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது. 1973-ல் முன்னாள் இராணுவக் குடும்பத்திலுள்ள பெண்களுக்கும், ஆசிரியர்கள் குடும்பப் பெண்களுக்கும் மாதம் ரூ. 30 உதவித்தொகையுடன் தையற் பயிற்சிக்கூடம் ஒன்று துவக்கப்பட்டு, ஒரு தொகுதி முடிந்து, 2-வது தொகுதி இயங்கி வருகிறது.

1974 ஜனவரி மாதம் பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த பெண்களுக்கென சீனிவாசபுரத்தில் மாதம்ரூ. 30 உதவித்தொகையுடன் 20 பெண்களுக்குத் தையற் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது 2-வது தொகுதி நடைபெற்று வருகிறது.

குடிசைப் பகுதியினருக்காகக் குடிசை மாற்று வாரியம் குடியிருப்புகள் நிருமாணித்துள்ள கட்டடங்களில் 25 இடங்களில் 1973-லிருந்து குழந்தைகள் காப்பகங்கள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு காப்பகங்களிலும் ஒவ்வொரு குழந்தை நலப்பணியாளருடன் 2 ஆயாக்களைக் கொண்ட பாலர் வகுப்பும், 1 வயது முதல் 2½ வயதுள்ள (Creche) குழந்தைகளும் இருக்கிறார்கள். கேர் நிறுவனத்தின் உதவியாலும், தமிழ்நாடு அரசின் மானியத்தாலும் மதியத்தில் ஒவ்வொரு காப்பகத்திலும் 60 குழந்தைகளுக்குக் கேர் உணவு சில தினங்களிலும், சாப்பாடு மற்ற தினங்களிலும் அளிக்கப்பட்டு வருகின்றது.

இந்த ஆண்டு (1975) இயல், இசை, நாடக மன்றம் மொத்தம் 35 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருதளித்துச் சிறப்பித்திருக்கிறது. இவர்களில் பெண்மணிகள் 6 பேர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிற்காலத்தில் குழந்தைகளை நல்ல குடிமக்களாக ஆக்குவதற்கென புதுக் குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவையினர் இவர்களுக்கு மருத்துவ வசதியும், தடுப்பு ஊசிகள் போட மருத்துவ விடுதிகளும் நடத்துகின்றனர்.

இக்காப்பகங்களைச் சார்ந்த குழந்தைகள், குழந்தைகள் தின விழாவில் நடத்தப்பெற்ற சித்திரம், பாட்டு, மாறுவேடம் போன்ற போட்டிகளில் கலந்து கொண்டனர். அப்போட்டிகளில் பிருந்தாவனம், விசாலாட்சி தோட்டம் ஆகிய காப்பகங்களின் குழந்தைகள் முறையேமாறுவேடப்போட்டி, பாட்டுப் போட்டியில் முதன்மையாக வந்து பரிசுகள் பெற்றனர்.

சில காப்பகங்களைத் தனியார் நிறுவனங்களான சுழற் சங்கம் (Rotary Club) போலிகோன்ஸ் (Polygons) செஞ்சிலுவைச் சங்கம் (Red Cross), காவல் துறை, இந்திய மகளிர் கூட்டமைப்பு, இந்திரா நகர் மகளிர் மன்றம் போன்ற நிறுவனத்திரும் கண்காணித்து வருகிறார்கள்.

சென்னை மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட வகுப்பினரைச் சார்ந்த குழந்தைகளுக்கென்று 8 மகளிர் நலக் கிளைகளும், 16 துணைக் கிளைகளும், 6 தையற் பயிற்சிக் கூடங்களும், 25 குழந்தைகள் காப்பகங்களும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

மகளிர் நலக் கிளைகள் தையல் பயிற்சி நிலையங்களைச் சார்ந்த உறுப்பினர்கள் பயிற்சியாளர்கள் ஆகியோர் அரிசனப் பள்ளி மாணவ, மாணவியருக்குச் சீருடைகள் தயாரித்துக் கொடுத்து இந்த ஆண்டு ரூ. 15,610 வரை ஊதியம் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண் கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ அந்த அளவு, நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள். படித்த ஆண்கள் தவறான வழியில் செல்லும் போது படிப்பு வாசனையற்ற பெண்கள் அவர்களைச் சரியான வழிக்குத் திருப்பிவிடுகிறார்கள். இந்தக் குடும்ப அறிவை எந்தப் பள்ளியிலும் பயிலாமலே அவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முறையான கல்வி அறிவும் கிடைத்தால் சமுதாயம் உயர்வதற்கும் சந்ததிகள் வாழ்க்கை சீர் பெறுவதற்கும் மெத்தப் பயனுடையதாக இருக்கும்.

—அண்ணா.



# கோவை மாவட்டம்

இம்மாவட்டத்தின் நகராட்சிப் பகுதிகளான பொள்ளாச்சி தாராபுரம், திருப்பூர், கோபிச்செட்டிப் பாளையம் ஆகிய நகரங்களில் மகளிர் நலக்கிளைகள் செயல்பட்டு வருகின்றன.

இக்கிளைகளில் பயிற்சி பெற்ற மகளிர் நல அமைப்பாளர்கள் பொறுப் பேற்றுள்ளார்கள். இக்கிளை நிலையங்களில் காலை தோறும் 3 வயது முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அறிவு வளர்ச்சி, ஒழுக்கம், கட்டுப்பாடு, உடல்நலன் ஆகியவற்றில் முறைப்படி பயிற்சி அளிக்கப்படுகின்றது. பிற்பகலில் பெண்கள் தங்கள் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள இந்நிலையங்களில் தையல், பின்னுதல், பூவேலை போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். அவ்வப்போது சத்துணவுக் கல்வி, செயல்முறை விளக்கங்களுடன் கற்பிக்கப்படுகின்றது. தேசீய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. மேலும் குடிசைவாழ் மக்கட் குடியிருப்புகளுக்கும் மகளிர் நல அமைப்பாளர் சென்று சுற்றுப்புறச் சுத்தம், குடும்பநலத் திட்டம், குழந்தை வளர்ப்பு முதலியனவற்றைத் தாய்மார்களுடன் தொடர்பு கொண்டு எடுத்துரைக்கின்றனர்.

**தொழிலாளர் நல நிலையம் :** சிங்காநல்லூர் உப்பிலி பாளையத்தில் நூற்பாலைகள் நிறைந்த பகுதியில் தொழிலாளிகளின் குடும்ப மகளிரும் குழந்தைகளும் பயன்பெறத்தக்க வகையில் பயிற்சி பெற்ற பெண் அமைப்பாளரைக் கொண்டு, குழந்தைகள் காப்பகமும், தையல் வகுப்பும் நடத்தப்படுகின்றன. குழந்தைகளுக்கு மதிய உணவும் வழங்கப்படுகின்றது. இந்நிலையத்திற்கான செலவினம் முழுதும் தொழிலாளர் நலத்துறையின் மூலம் ஏற்கப்படுகின்றது.

**காவல்துறை குடியிருப்பு மகளிர் மன்றம்:**—இங்கு மகளிர்க்கு உதவும் பொருட்டுப் பயிற்சி பெற்ற தையல் ஆசிரியர் ஒருவரை நியமித்துத் தையல் பயிற்சியுடன் சத்துணவுக்கல்வி செயல்முறை விளக்கங்களும் செய்து காண்பிக்கப்படுகின்றது.

**பழ உணவுப் பண்டங்கள் உற்பத்தி நிலையம்:**— இந்நிலையத்தில் 10 பெண்கள் ஓர் ஆண்டுப் பயிற்சிக்குப் பின்னர், ஆசிரியர் ஒருவரின் கீழ், ஊறுகாய், பழரசம், ஜாம் போன்றவற்றைத் தயாரிக்கின்றனர். ஒவ்வொரு பெண் பணியாளர்களுக்கும் வேலை செய்த நாட்களுக்கு ரூ. 3 அளிக்கப்படுகின்றது.

கோவை மகளிர் நலக்கிளையில் தையல்கற்ற பெண்களை ஒன்று சேர்த்துக் கோயம்புத்தூர் பெண்கள் ஆடை தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் அழைக்கப்பட்டு உதவித் தொழில் கூட்டுறவு இயக்குநர் மேற்பார்வையில் நன்முறையில் செயல்பட்டு வருகின்றது.

இவ்வாண்டு அரசினர் விடுதிகளில் இருக்கும் அரிசன மற்றும் பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்குச் சீருடை தைக்கும் பணி மகளிர் நலக்கிளைகள், தொழிலாளர் நல நிலையம், காவலர் குடியிருப்பு மகளிர் மன்றம், பெண்கள் கூட்டுறவுச் சங்கம், மாவட்ட முன்னாள் இராணுவ, ஆகாயப் படைச் சங்கத் தையல் பயிற்சி நிலையம் ஆகியவற்றில் இருக்கும் பெண்களைக் கொண்டு துணிகள் தைக்கப்பட்டுக் கூலியாக 25,000 ரூபாய் வழங்கப்படவுள்ளது.

**மகளிர் நல மன்றங்கள் :—**

இம்மாவட்டத்திலுள்ள 41 ஊராட்சி ஒன்றியங்களில் மகளிர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மகளிர் மன்றங்களில் குடும்பநலன், சுற்றுப்புறச் சுகாதாரம், சிறுசேமிப்பு, காய்கறித் தோட்டம் அமைத்தல், தையல்வேலை, கோழி வளர்ப்பு, உணவியல் போன்றவற்றில் கவனம் செலுத்தப்படுகின்றது. இம்மகளிர் மன்றங்களைச் சீரானமுறையில் செயல்படுத்த வட்டார அளவில் ஒரு பெண் விரிவாக்க அலுவலர், 2 ஊர்நலப் பணியாளர்கள் ஆகியோர் பணி புரிகின்றனர். மேலும் உள்ளூரில் கிடைக்கும் விளைபொருட்களைக் கொண்டு சத்துக்கெடாமல் மலிவான முறையில் சத்துணவுக் கல்வி செயல்முறை விளக்கங்கள் மாதமொருமுறை செய்யப்படுகின்றன. இம்மன்றங்களுக்குப் புத்தகங்கள், தினத்தாள்கள் ஆகியவையும் வழங்கப்படுகின்றன.



மேலும் சத்துணவுக் கல்வியினை மகளிர் மன்றங்கள் மூலம் கற்பித்து இவ்வாண்டு இம்மாவட்டத்தில் பெருந்துறை, ஈரோடு, குடிமங்கலம், பெங்களூர், சூலூர், அவிநாசி, தூக்கநாயக்கன் பாளையம், தொண்டாமுத்தூர், தாராபுரம் ஆகிய வட்டாரங்களில் வட்டாரத்திற்கு 3 மகளிர் மன்றங்களில் அமல்படுத்தப்படுகின்றன.

மகளிர் மன்றங்களை ஊக்குவிக்கவும் மகளிர் மன்றங்களில் சிறுதொழில்கள் துவங்க ஏதுவாகும் பொருட்டு ஒவ்வொரு வருடமும் சிறந்த மகளிர் மன்றங்களைத்தேர்ந்தெடுத்துமுதல் பரிசாக ரூ. 1000-மும் 2-வது பரிசாக ரூ. 600-மும் 3-வது பரிசாக ரூ. 400-மும் அளிக்கப்படுகின்றது. அவ்வகையில் கடந்த மூன்று ஆண்டுகளில் இம்மாவட்டத்தில் 27 மகளிர் மன்றங்கள் முதற்பரிசும், 48 மகளிர் மன்றங்கள் 2-வது பரிசும், 30 மகளிர் மன்றங்களில் 3-வது பரிசும் பெற்றுள்ளனர்.

**ஊட்ட உணவுத் திட்டம்** : இத்திட்டம் தற்போது நடைமுறையில் பேரூர் வட்டாரத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. குறிப்பாக இத்திட்டத்தின் மூலம் கிராமப்புற கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆகியோரின் உணவில் ஊட்டம் சேர்த்தலையாம். இதற்கு அடிப்படையான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தல், சத்துணவுக் கல்வியினை அறிதல், சரிவிகித முறைப்படி உணவுப் பொருளைச்சமைத்துஉட்கொள்ளுதல் ஆகும். இத்திட்டத்தின் கீழ், குழந்தைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் இத்திட்டம் தூக்கநாயக்கன் பாளையம் வட்டாரத்தில் அமலாக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.



**குழந்தைகள் நலன்** : இன்றைய அரும்புகள் நாளைய மலர்களாகிய குழந்தைகளின் நலம் காண, சமூக நலத்துறையின் மூலம் இம்மாவட்டத்தில் 146 குழந்தைகள் காப்பகங்களும், 60 குழந்தைகள் நல நிலையங்களும் செயல்படுகின்றன. இக்காப்பகங்களில் கேர் நிறுவன உதவி கொண்டும், சமூகநலத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை நிதி கொண்டும் மதிய உணவு வழங்கப்படுதலின் மூலம் ஏறத்தாழ 9,520 குழந்தைகள் நாள்தோறும் பயன் அடைகின்றனர்.



# தருமபுரி மாவட்டம்

தருமபுரி மாவட்டத்தில் 16 வட்டாரங்கள் உள்ளன. இவற்றில் 472 மகளிர் மன்றங்கள் கிராமப்புறங்களிலே செயல்பட்டு வருகின்றன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் அமைப்பாளரால் நடத்தப்பட்டு வருகிறது. இம்மன்றங்களின் மூலமாகக் கடந்த ஓராண்டுக் காலத்தில் மட்டும் 293 பெண்கள், குடும்ப நலத் திட்ட நன்மைகள் பெற்றுள்ளனர். சிறுசேமிப்பின் பல பிரிவுகளிலும் இந்த மகளிர் மன்றங்களின் பெண்கள் ரூ. 25,730 சேர்த்துள்ளனர். குறிப்பாக 14 அமைப்பாளர்கள் புதிய திட்டப்படி வட்டாரச் சேமிப்புத் தலைவர்களாகச் செயல்புரிகின்றார்கள் என்பது பின்தங்கிய இந்த தருமபுரி மாவட்டத்திற்கே பெணகளின் முன்னேற்றத்தில் ஏற்பட்டுள்ள நல்ல திருப்பமாகும்.

14 வட்டாரங்களில் 21 மகளிர் வானொலி மன்றங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

கடந்த 1973-74 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் 165 பாலர்பள்ளிகள் செயல்பட்டு வருவதால் இரண்டு முதல் ஐந்து ஆண்டுக்குட்பட்ட சுமார் 7,410 குழந்தைகளும் 300 தாய்மார்களும் (கர்ப்பிணிகளும், பாலூட்டும் தாய்மாரும்) மாதத்தில் 25 நாட்களுக்கு இவற்றின் மூலம் நண்பகல் உணவினை உண்ணும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். குழந்தைகள நல்வாழ்வுடன் நல்ல பழக்க வழக்கங்கள் உடையவர்களாக முழு வளர்ச்சி பெறுவதிலே இந்தப் பாலர் பள்ளிகள் நல்ல பணியாற்றி வருகின்றன.

இம்மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்புப் பெண்களுக்கென ஓர் பனை ஓலைப் பொ[illegible] தொழிற் பயிற்சி நிலையமும், பின் தங்கின இனத்தவருக்கென மூங்கில் பொருள் தொழிற்பயிற்சி நிலையமும் உள்ளன. அவற்றில் பயிற்சி பெறும் பெண்களுக்குப் பயிற்சிக் காலத்திலேயே உதவித் தொகை வழங்கப்படுகிறது. சுமார் 65 பெண்கள் இத்தொழில்களில் பயிற்சி பெற்றுள்ளனர்.

# திருச்சி மாவட்டம்



இம்மாவட்டம் 31 ஊராட்சி
ஒன்றியங்களைத் தன்பால்
கொண்டுள்ளது. இவ்வொன்
றியங்களில் சமூக விரிவாக்க
அலுவலர்களும், கிராம சேவி
காக்களும் பணியாற்றி வரு
கின்றனர். 900 மகளிர் மன்
றங்களும், குழந்தைகள் காப்
பகங்களும், சிறுவர் நல
மையங்களும் செயல்பட்டு
வருகின்றன.

இம்மாவட்டத்தில் மகளிர்
நலத்துறையினரால் நடத்தப்
படும் இரு தையல் பயிற்சி
நிலையங்கள் லால்குடியிலும்,
பொன்மலைப்பட்டியிலும் நடை
பெற்றுவருகின்றன. ஒரு பயிற்சி
குழுவாளர் இப்பயிற்சி நிலையங்
களில் ஆண்டுக்கு 12 பெண்
களுக்குப் பயிற்சி கொடுத்துத்
தேர்விற்கு அனுப்புகின்றனர்.
ஒருவருக்கு மாதம் ரூ. 30
உதவிச் சம்பளம் வழங்கப்பட்டு
வருகின்றது.

திருச்சி, திருவரங்கம், கரூர்
ஆகிய மூன்று இடங்களிலும்
மகளிர் நலக் கிளைகள் செயல்
பட்டு வருகின்றன. இதில்
குழந்தைகள் காப்பகமும்
தையல் பயிற்சியும் நடத்தப்
பட்டு வருகிறது. ஒவ்வொரு
நிலையத்திலும் ஓர் அமைப்பா
ளரும், ஒரு வழிகாட்டியும்
பணியாற்றி வருகின்றனர்.
இம் மாவட்டத்தில் பல
ஊராட்சி ஒன்றியங்களில்
சிறப்புத் திட்டங்கள் பல
செயல்பட்டு வருகின்றன.

மண்ணச்சநல்லூர், துறை
யூர், முசிரி ஆகிய மூன்று ஒன்றி
யங்களிலும் கலவைத் திட்டத்
தின் கீழ் செயல்முறை ஊட்ட
உணவுத் திட்டம் செயல்பட்டு
வருகிறது. நாள்தோறும் 80
பேர்களுக்கு ரூ. 15 செலவில்
மாதத்தில் 25 நாட்களுக்கு
உணவு வழங்கும் திட்டம்
நடந்து வருகிறது. திருவெறும்
பூரிலும், மண்ணச்ச நல்லூரி
லும் ''யுனிசெப்'' உதவி
யுடன் செயல்படும் ஊட்ட
உணவளிக்கும் திட்டம் நன்
முறையில் செயல்பட்டு வரு
கிறது. இத்திட்டத்தில் மீன்,
முட்டை, பழம், பால், காய்
கறிகள், குழந்தைகளுக்கும்
தாய்மார்களுக்கும் வழங்கப்
பட்டு வருகிறது.

''கேர்'' நிறுவனத்தாரின்
உதவியுடன், மண்ணச்சநல்லூர்
க. பரமத்தி, துறையூர், முசிரி,
குளித்தலை, அந்தநல்லூர்,
மணிகண்டம், தொட்டியம்,
புள்ளம்பாடி, திருவெறும்பூர்
ஆகிய ஒன்றியங்களில் குழந்
தைகளுக்கும், கர்ப்பிணிகளுக்
கும் பாலூட்டும் தாய்மார்
களுக்கும் மதிய உணவு அளிக்
கப்பட்டு வருகிறது. இந்த
மதிய உணவுத்திட்டம் நன்கு
செயல்பட அரசு மான்யமாக
சமூகநலத் துறை குழந்தைக்
காப்பகங்களுக்கு ஒருவருக்கு
ஒரு நாளைக்கு 3 காசு வீதம்
சில்லறைச் செலவினமாக
வழங்கப்பட்டு வருகிறது.



இவையன்றி 7 ஒன்றியங்
கல் கலவைத் திட்டத்தின்
கீழ் மகளிர் மன்றங்கள் மூலம்
சத்துணவுக் கல்வி என்ற திட்
டம் 5 ஆண்டுகளாகச் செயல்
பட்டு வருகிறது. இத்திட்டத்
தில் மகளிர் மன்றம் ஒவ்
வொன்றுக்கும் ரூ. 500
பெறுமானமுள்ள தளவாடச்
சாமான்களும் வழங்கப்படு
கின்றன. இதன் மூலம் சத்து
ணவுச் செயல்முறைகள் ஒன்றி
யம் முழுதும் பரவலான முறை
யில் நடத்தப்பட்டு வரு
கின்றன.

அரசுத் திட்டங்கள் நீங்க
லாக அரசு உதவி பெற்று
திருச்சி சேவாசங்கம் மகளிர்-
குழந்தைகள் நலனுக்காகச்
செயல்பட்டு வருகின்றது.

இது திருமதி. கமலா ஆர்.
சாரி அவர்களின் முயற்சியால்
அனாதை, கைம்பெண், கை
விடப்பட்டோர் ஆகிய வாழ்
விழந்த, பெண்களுக்குக் குறுகிய
காலப் பள்ளி இறுதித் தேர்வு,
தேர்வு வகுப்பு, அச்சுப் பயிற்சி,
தையல் பின்னல் பயிற்சி முதலி
யவை பெண்கள் உயர்நலப்
பள்ளியும் நடத்தப்பட்டு வரு
கிறது. இதுபோன்று மற்றும்
சில தனியார் நிலையங்கள்
சமூகநலத் துறையிடமிருந்து
மான்யம் பெற்றுச் சிறப்பாக
நடைபெறுகிறது.

இது தவிர வாழ்விழந்தோர்,
விதவைகள், அனாதைகள்,
சேவை இல்லங்களுக்கும் (கட
லூர், தஞ்சாவூர், தாம்பரம்)
இங்கிருந்து சிலரைப் படிப்புக்
கும் தையல் பயிற்சிக்கும்
அனுப்பி அவர்கள் வாழ்வுக்கு
வழி வகுத்துக் கொடுக்கப்படு
கிறது. அவர்களுக்குப் பள்ளி
இறுதித் தேர்வுப் பயிற்சியும்
அளிக்கப்பட்டு, ஆசிரியைப்
பயிற்சிக்கும் வழி செய்யப்படு
கிறது.

# செங்கற்பட்டு மாவட்டம்



செங்கை மாவட்டத்தில் நான்கு பயிற்சி நிலையங்கள் உள்ளன. பயிற்சி பெற்ற பிறகு தேர்வு எழுத வைத்து சான்றிதழ்கள் வழங்கப்படும். உதவித் தொகை மாதத்திற்கு ரூ. 30 ஒரு நபருக்கு வழங்கப்படும்.

அரிசனப் பெண்களுக்காகக் காட்டூரில் பனை ஓலைப் பயிற்சி நிலையம் 22—8—64 முதல் ஆரம்பிக்கப்பட்டு பத்து குழுக்களுக்கு அதாவது 150 பெண்களுக்கு இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன.

மொண்டியம்மன் நகரில் பர்மா அகதிப் பெண்களுக்காகத் தையல் பயிற்சி நிலையம் 22—6—69-ல் ஆரம்பிக்கப்பட்டு 75 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன.

பொன்னேரி சின்னக்காவனத்தில் 26—4—71-ல் தையற் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டு 45 பெண்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளன.

அரிசனப் பெண்களுக்காக ஒரகடத்தில் தையற் பயிற்சி நிலையம் 15—2—73-ல் ஆரம்பிக்கப்பட்டு 20 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன.

மகளிர் நலக் கிளைகள் என்று நகர்ப் புறங்களில் ஏற்படுத்தி அவைகளில் காலையில் பாலர் பள்ளி வகுப்பும், மாலையில் மகளிர் மன்றமும் நடத்தி பெண்கள், குழந்தைகள் நலன் கவனிக்கப்பட்டு வருகின்றன.

மகளிர் நல அமைப்பாளர் பல்வேறு கைத்தொழில்களில் பயிற்சி பெற்றவர். பெண்களுக்குக் கைத்தொழில்களில் பயிற்சி அளிக்கின்றனர். அரசாங்கத்தின் மூலமாக மூலப் பொருள் வழங்கப்பட்டு அங்கத்தினர்களால் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு அதன் மூலம் கூலி வழங்கப்படுகின்றது. இத்தகைய மகளிர் நலக் கிளைகள் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய மூன்று இடங்களில் இயங்கி வருகின்றன.

தொழிலாளர் நலத் திட்டத்தின் கீழ் அம்பத்தூரில் தொழிலாளர் குடும்பப் பெண்களுக்காக ஒரு நிலையம் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகின்றது.

தாம்பரத்தில் சேவை இல்லம் ஒன்று சிறப்பான முறையில் நடந்து வருகின்றது. 5-வது வகுப்பிற்கு மேல் எட்டாவது வகுப்பிற்குள் படித்த 18 வயது முதல் 30 வயது வரை உள்ள ஆதரவற்ற பெண்களுக்கு அடைக்கலம் கொடுக்கப்பட்டு மூன்றாண்டுக் காலம் தன்னகத்தே வைத்திருந்து தனிக் கவனம் செலுத்தி கல்வி கற்றுத் தந்து குறுகிய காலப் பயிற்சி மூலம் ஈ.எஸ்.எல். சி. தேர்வு எழுத வைக்கப்படுகின்றனர். பின்னர் எஸ்.எஸ்.எல். சி. தேர்வு எழுத வைக்கப்படுகின்றனர்.

தொழிற் கல்வியும் வேண்டுமென்பதால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றும் நடத்தப்படுகின்றது. பாய் பின்னும் தொழில், தையல் தொழில் ஆகிய தொழில்களும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. ஆதரவற்ற குழந்தைகளுக்கும் அனாதை இல்லம் இங்கே நடத்தப்பட்டு வருகின்றது.

காவலர் குடியிருப்புப் பகுதிகளில், காவலர் குடும்பப்பெண்களுக்காக மகளிர் மன்றங்கள் நடத்தப்படும் திட்டத்தில் ஆலந்தூரிலும், ஆவடியிலும் இரு மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டு சத்துணவுத் திட்டத்தின்கீழ் செயல்முறை விளக்கங்கள் செய்து காட்டப்படுகின்றன.

மகளிர், குழந்தைகள் நலத்திற்கும் பரவலான திட்டங்கள் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக நடைபெறுகின்றன.

ஒவ்வொரு ஒன்றியத்திலும் 80 மகளிர் மன்றங்கள் என்று செங்கை மாவட்டத்தில் 810 மகளிர் மன்றங்கள் இருக்கின்றன. ஆனல் 24 மகளிர் மன்றங்களே தனக்கென்று கட்டடங்களைப் பெற்றிருக்கின்றன. வானொலி கேட்கும் சங்கங்கள் 55 இடங்களில் இருக்கின்றன.

எட்டு ஒன்றியங்களில் சத்து உணவுத் திட்டம் என்று மகளிர் மன்றங்களில் சத்துணவு செயல்முறை விளக்கங்கள் காட்டப்படுகின்றன.

மகளிர் மன்றத்திற்கு அடுத்தபடியாகக் குழந்தைகள் காப்பகங்கள் நடைபெற்று வருகின்றன 2½ வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் இக்காப்பகங்களில் சேர்க்கப்படுகின்றனர். நல்ல நோக்கங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட 'குழந்தைகள் காப்பகங்கள்' செங்கை மாவட்டத்தில் 103 இடங்களில் இருக்கின்றன. அவைகளில் சேர் உணவுத் திட்டம் 49 இடங்களிலும் மற்ற 44 இடங்களில் பாலஹார் வழங்கும் திட்டமும், 10 இடங்களில் கலவைத் திட்டத்தின் மூலம் உணவு வழங்குதலும் நடைபெறுகின்றன.



'குடும்ப நலத் திட்டம்' என்ற சிறப்புத் திட்டம் வில்லிவாக்கம் ஒன்றியத்தில் செயல்பட்டு வருகின்றது. பாண்டேஸ்வரம் என்ற இடத்தை தலைமை இடமாகக் கொண்டு அங்கே மகளிர்க்கு மனை இயல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. 6 இடங்களில் குழந்தைகள் காப்பகங்கள் நடைபெற்று வருகின்றன.

ஊரக வளர்ச்சித் துறையில் நடத்தப்படும் ஊட்ட உணவுத் திட்டம் குழந்தைகள் காப்பகங்கள் மூலமாகவும் மகளிர்மன்றங்கள் மூலமாகவும் சமூக நலத் துறை ஊழியர்களைக் கொண்டு வில்லிவாக்கம், திருப்போரூர் ஆகிய ஒன்றியங்களில் செயல்பட்டு வருகின்றது.



பூந்தமல்லி ஒன்றியத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டம் என்ற சிறப்பானதொரு திட்டம் செயல்பட்டு வருகின்றது. 50 குழந்தைகள் காப்பகங்கள் தோற்றுவிக்கப்பட்டு நல்லதொரு முறையில் இயங்கி வருகின்றன.

தனியாருக்குப் பொருளுதவி செய்து திட்டங்களைச் செயல்படுத்துவதும் உண்டு. சேவை இல்லம், அனாதை விடுதி, குழந்தைகள் காப்பகம், சுகாதாரத் திட்டங்கள், மருத்துவத் திட்டங்கள் ஆகியவைகளில் இ மாவட்டத்திற்கு நிதி உத கிடைக்கப்பெற்று வருகின்ற

# திருநெல்வேலி மாவட்டம்

நெல்லை மாவட்டத்தில் சீர்மிகு திருச்செந்தூரில் துணிப் பொம்மை செய்யும் பயிற்சி நிலையம் ஒன்று 1963 ஆம் ஆண்டில் நிறுவி, ஓர் அணிக்கு 10 பேர் வீதம் 1968 வரை 5 அணிகளில் 50 பெண்களுக்குத் துணிப் பொம்மை செய்வதில் பயிற்சி அளித்துள்ளது. பின்னர் அதில் பயிற்சி பெற்ற பெண்களுக்கு உற்பத்தி செய்ய வழிவகுத்து அதில் 10 பெண்கள், தரமான அழகான பொம்மைகளைச்செய்கிறார்கள். அப்பொம்மைகள் அரசு விற்பனை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு விற்பனையாகின்றன. இந்த நிலையத்தில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் ரூபாய் 30 உதவித் தொகை வழங்கப் படுகிறது.



அத்துடன் சாக்குத் துண்டு (Chalk piece) செய்யும் பயிற்சி நிலையம் ஒன்று நெல்லைக்கு 30 மைல் தொலைவிலுள்ள நாங்குனேரி அருகில் வடக்கு விஜய நாராயணத்தில் 1963-ல் ஆரம்பிக்கப்பட்டது. 1967 வரை அதில் சுமார் 75 பெண்களுக்குப் பயிற்சி அளித்தபின், பொருளாதார நிலையில்மிகமிகப் பிற்போக்காக இருக்கும் மானூர் என்னும் ஊருக்குப் பயிற்சி நிலையம் மாற்றப்பட்டுள்ளது. வடக்கு விஜய நாராயணத்தில் பயின்ற பெண்களுக்கு நிரந்தரமாக வேலை கிடைக்க, கிராமியத் தொழில் திட்ட நிறுவனம் (Rural Industries project) மூலம் மானியம் கிடைக்க வழி செய்து அங்கு சாக்குத்துண்டு உற்பத்தி நிலையம் நடைபெற்று வருகிறது. மானூரில் 1967-ல் ஆரம்பிக்கப்பட்ட பயிற்சி நிலையம், 1974-ல் உற்பத்தி நிலையமாக மாற்றப்பட்டு, அதில் உற்பத்தி செய்யப்படும் சாக்குத் துண்டுகள் இம்மாவட்டத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், குழந்தைகள் காப்பகங்கள் ஆகியவற்றிற்கு அனுப்பப்படுகின்றன.

மேலும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்குப் புது வாழ்வு அளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அங்கிருந்து வந்த பெண்களின் வருங்கால வாழ்வுக்கு வழி காட்டுவதற்குத் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பிக்க அரசு ஏற்பாடு செய்தது. நெல்லை மாவட்டத்தில் பனை வளம் மிகுந்த காரணத்தால் அதைப் பயன்படுத்தி, பல பயனுள்ள பொருட்கள் செய்யப் பயிற்சி அளிக்கும் பனை ஓலை வேலைத் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று மூக்குப் பீரியில் ஆரம்பிக்கப்பட்டது. ஓராண்டுக்காலம் பயிற்சி கொடுத்த பின் அரசு அப் பயிற்சி நிலையத்தைச் சமூக நலத்துறையின் பொறுப்பில் ஒப்படைத்தது. சமூகநலத் துறை 25 . பெண்களுக்கு ஓராண்டுப் பயிற்சி அளித்து நான்கு அணிகளில் 100 பேருக்குப் பயிற்சி கொடுத்து அவர்களுக்கு மாதம் ரூபாய் 30 வீதம் உதவிப்பணம் கொடுத்து வருகிறது.



1967-ல் நெல்லை மாவட்டத்தில் கீழக்கடையம் என்னும் ஊரில் பெண்களுக்குத் தொழிற் பயிற்சி தர பனைஓலை வேலை தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்தது. அங்கு மூன்று அணிகளில் 45 பெண்களுக்குப் பயிற்சி கொடுத்த பின் அப்பயிற்சி நிலையத்தை கீழப்பத்தை என்னும் ஊருக்கு மாற்றித் தற்போது கீழப்பத்தைகுடில் தெருவில் 3-வது அணியின் பயிற்சி நடைபெற்று வருகிறது. ஓராண்டுப் பயிற்சி பெறும் பெண்களுக்கு மாதம் ரூபாய் 30 உதவிப் பணமாகக் கொடுக்கப்படுகிறது. பனை ஓலையின் மூலம் கண்ணைக் கவரும் வண்ணங்களில் பயனுள்ள பல பொருட்களை இவர்கள் செய்கின்றனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் தையல்தொழில், ஆடை தயாரித்தல் (Ready made Dress making) முதலியவற்றில் ஓராண்டுப் பயிற்சி அளிக்க சங்கரன்கோவில் வட்டம், தேவர்குளம் கிராமத்தில் 1967-ல் பயிற்சி நிலையம் ஒன்று துவக்கப்பட்டது. அங்கு 3 பயிற்சிகள் முடிந்த பின் 1970-ம் ஆண்டில் பயிற்சி நிலையம் பெருங்குளம் என்னும் ஊருக்கு மாற்றப்பட்டது. அங்கு இரண்டு அணிகளுக்குப் பயிற்சி தரப்பட்டது. பிறகு பயிற்சி நிலையம் 1974-ல் பாளையங்கோட்டையைச் சேர்ந்த குலவணிகர்புரத்திற்கு மாற்றப்பட்டுச் சிறப்பாக நடைபெறுகிறது. பயிற்சி பெறும் பெண்களுக்கு 30 ரூபாய் வீதம் உதவிப் பணம் பிற்பட்டோர் நலத்துறையிலிருந்து கொடுக்கப்படுகிறது. சமூக நலத்துறை அதன் சீரிய நடைமுறையைக் கண்காணிக்கிறது.

இன்று கிராமப்புற பெண்கள் நேரத்தை வீணாக்குவதில்லை. அவர்கள் தங்களுக்கு அரிதாகக் கிடைக்கும் ஓய்வு நேரத்தில் ஏதாவது ஒரு தொழில் செய்யக் கற்றிருக்கின்றனர். காய்கறித் தோட்டம் வீட்டில் அமைத்து தங்களுக்கு வேண்டிய புதிய பச்சைக் காய்கறிகளைப் பெறுகின்றனர். கோழி வளர்த்து முட்டையைப் பயன்படுத்துகின்றனர். உபரியாகக் கிடைக்கும் முட்டைகளை விற்று இலாபம் அடைகின்றனர். இளம் பெண்டிர் நேரத்தை வீணாக்காது தையல் தொழிலை மகளிர் மன்றங்களில் கற்று தங்களுக்கு வேண்டிய உடுப்புக்களைத் தைத்துக் கொள்கின்றனர். பிறருக்கும் தைத்துக்கொடுத்து காசு சம்பாதிக்கின்றனர். அத்துடன் அரிசன நலத்துறை, பிற்பட்டோர் நலத்துறை

ஆகியவை நடத்தும் விடுதி மாணவ மாணவிகளுக்கு அத்துறையினர் தீபாவளி, பொங்கல் ஆகிய விழாக்களுக்கு இலவசச் சீருடை வழங்குவதால் அவர்களிடமிருந்து துணியை மாவட்ட மகளிர் நல அலுவலர் மூலம் வாங்கி உடைகள் தைத்துக் கொடுத்து பணம் சம்பாதிக்கின்றனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் 87 குழந்தைகள் காப்பகங்களில் பாலஹார் என்னும் சத்துணவு உப்புமாவாகவும் காய்கறி, கீரை ஆகியவற்றுடன் சுமார் 50 குழந்தைகள் வீதம் ஏறத்தாழ 6,090 குழந்தைகளுக்கு நண்பகல் உணவாகக் கொடுக்கப்படுகிறது.

மேலும் இம்மாவட்டத்தில் தென்காசி, வள்ளியூர், சங்கரன்கோவில் ஒன்றியங்களில் ஒன்றியத்திற்கு 5 வீதம் 15 குழந்தைகள் காப்பகங்கள் கலவைத் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இக்காப்பகங்களில் 6 மாதம் முதல் 1 வயதுவரை 20 குழந்தைகட்கும், $2\frac{1}{2}$ வயது முதல் 5 வயதுவரை 30 குழந்தைகட்கும், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் 30 பேருக்கும் ஆக மொத்தம் 80 பேருக்கு உணவு வழங்கப்படுகிறது.

அத்துடன் சத்துணவுத் திட்டத்தின்கீழ் மானூர், ஆழ்வார் திருநகரி, ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் குழந்தைகள் காப்பகங்கள் நடைபெற்று வருகின்றன. தற்போது இம்மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தில், இத்திட்டம் செயல்படுத்த உள்ளது.

மேலும் உயர்நிலைக் கல்வி பயின்று வேலை வாய்ப்பின்றித் தவித்த பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு ஆரம்பித்த தீவிர வேலை வாய்ப்புத் திட்டத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் 50 குழந்தைகள் காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டுச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஊனமுற்ற குழந்தைகளுக்கு நல்வாழ்வு அளிக்கும் பணியைச் சமூகநல வாரியம் மேற்கொண்டுள்ளது. பாளையங்கோட்டை சிவசைலம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள குருடல் பள்ளி செவிட்டூமையர் பள்ளி போன்ற தானே இயங்கும் நிறுவனங்களுக்கு (Voluntary Institutions) சமூகநல வாரியத்திலிருந்து மானியம் வழங்கப்படுகிறது.





# தென் ஆர்க்காடு மாவட்டம்

தென்னார்க்காடு மாவட்டத்தில் 34 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 மகளிர் மன்றங்கள் அரசு மான்யம் பெறுகின்றன. அம்மகளிர் மன்றங்களுக்கு ஆண்டுதோறும் மான்யங்கள் வழங்கப்படுகின்றன.

அமைப்பாளர்களுக்குச் சிறப்பு ஊதியம் ரூ. 15 ஒவ்வொரு காலாண்டும், சமையல் நிருபணங்களுக்காக ரூ. 15 ஒவ்வொரு காலாண்டும், குழந்தைகள் காட்சி நடத்த (5 காட்சிகள்) ரூ. 100 ஒவ்வொரு ஆண்டும், சமூகக் கல்விக்காக (மாதர் சங்கத்திற்கு ரூ. 300-ம் ரூ. 10 ஆக) வழங்கப்படுகின்றது.

சென்ற நான்கு ஆண்டுகளில் மகளிர் மன்றங்களில் சத்துணவுக் கல்வி மகளிர் மன்றமாக எடுக்கப்பட்டு மான்யங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

74-75 ஆண்டில் அவ்வாறு செயல்படுத்தப்பட ஆரம்பித்த மகளிர் மன்றங்கள் 36.

குழந்தைகளின் வளர்ச்சி அவர்கள் ஐந்தாவது வயதுடன் நின்று விடுகிறது என்றும், அக்குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்குச் சத்துணவு அவசியமானது என்றும் அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். ஆகவே, 2.5 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்காக இம்மாவட்டத்தில் 213 குழந்தைகள் காப்பகங்கள் உள்ளன. அவற்றில் குழந்தைகளுக்கு நற்பழக்கங்கள், கல்வி முதலியன புகட்டப்படுவதோடு உணவும் அளிக்கப்படுகின்றது.

இம்மாவட்டத்தில் சுமார் 13 இடங்களில் குழந்தைகள் நல நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையங்களில் கேர் உணவு மற்றும் சத்துணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்காகவும், பொருளாதாரத் துறையில் பின்தங்கிய பெண்களுக்காகவும், விதவைகளுக்காகவும் உளுந்தூர்ப்பேட்டையில் ஒரு தயார் உடை நிலையம் நடத்தப்பட்டு வருகிறது. அதில் 20 பெண்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். இந்நிலையத்திற்கு ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 16,000 ரூபாய் வரை செலவிடப்படுகிறது.

சமூக நலத்துறையுடன் இணைந்து செயல்படும் சமூக நல வாரியத்தின் வாயிலாகவும் பல நன்மைகள் கிடைக்கின்றன. புவனகிரி மகளிர் மன்றத்தினர் சமூக நல வாரியத்தின் வாயிலாகப் பெற்ற ஒரு குழந்தைகள் காப்பகத்தையும், ஒரு தையற் பயிற்சிப் பள்ளியையும் நடத்தி வருகின்றனர். சேப்ளாநத்தம் தொழுநோயாளர் நிலையத்திற்கும் மழவந்தாங்கல் தொழுநோயாளர் நிலையத்திற்கும் இம்மான்யம் கிடைத்துள்ளது.

# கன்னியாகுமரி மாவட்டம்

இம்மாவட்டத்தில் இத்துறையில் 3 மகளிர் நலக்கிளைகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் ஒவ்வொரு கிளையிலும் ஓர் மகளிர் நல அமைப்பாளரும் ஒரு ஆயாவும் பணிபுரிகின்றனர். அமைப்பாளர்கள் காலை 10 மணி முதல் 12 மணி வரை பாலர் வகுப்பு நடத்துவர். பின், பிற்பகல் மகளிர் மன்ற உறுப்பினர்களுக்குத் தையல், பாசி பின்னுதல், எம்பிராய்டரி, ஆகியவைகள் கற்றுக் கொடுப்பார்கள். மேலும் முதியோர் கல்வி, வீட்டுத் தோட்டம் போடுதல், வீடுகள் பார்வையிட்டு தலைவியருக்கு அறிவுரை வழங்குதல், ஆகிய பணிகள் இவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் இரணியலில் ஜமுக்காள நெசவு உற்பத்தி நிலையம் ஒன்று நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு பிரிவிற்கும் 10 பயிற்சியாளர் வீதம் 9 பிரிவுகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரம்புத் தொழிற் பயிற்சி நிலையம் முதன் முதலாக மருங்கூர் என்னும் இடத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஒரு பிரிவிற்கு 12 பயிற்சியாளர்கள் வீதம் பயிற்சியளிக்கப்பட்டு வந்தது. இது அரிசன நலத்துறை முதலீட்டிலிருந்து நடத்தப்பட்டு வருகிறது. இது அரிசன நலம் கருதி ஆரம்பிக்கப்பட்டது. பயிற்சியாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 30 வீதம் உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. மருங்கூரில் 4 பிரிவுகள் நடத்தப்பட்ட பின், கரியமாணிக்கபுரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. தற்போது 3 பிரிவுகள் நடத்தப்பட்டு, நான்காவது பிரிவு நடந்து கொண்டிருக்கிறது.

இம்மாவட்டத்தில் 9 ஊராட்சி ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 367 மகளிர் மன்றங்களும் 101 பாலர் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. முஞ்சிறை, மேல்புறம் ஆகிய இரு ஊராட்சி ஒன்றியங்களிலும், முறையே 5 வீதம் குழந்தைகள் நல நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்திலும், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்திலும், மகளிர் மன்றங்கள் மூலம் சத்துணவுக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

## குழந்தைகள் காப்பகம் :

அகஸ்தீவரம் ஊராட்சி ஒன்றியத்தில் 10 பாலர் பள்ளிகளும், குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் 51 பாலர் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. அகஸ்தீஸ்வரத்திலுள்ள பாலர் பள்ளிகளுக்கு ரூ.5,040, குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் 46 பாலர்பள்ளிகளுக்கு ரூ. 23,184, 1974-75-ம் ஆண்டு நிதி ஒதுக்கீடாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் 5 பாலர் பள்ளிகள் கூட்டு உணவுத் திட்டத்தின் கீழ் செயலாற்றுகின்றன. குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் 3 மகளிர் மன்றங்களில் சத்துணவுக் கல்வித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

தோவாளை, திருவட்டார், இராஜாக்க மங்கலம், தக்கலை, கிள்ளியூர் ஆகிய ஊராட்சி ஒன்றிங்களில் 40 பாலர் பள்ளிகள் செயலாற்றுகின்றன. பாலர் பள்ளி குழந்தைகளுக்குப் பாட்டு, விளையாட்டுகள் முதலியன பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. மேலும் இப்பாலர் பள்ளிகளில் பாலஹார் சத்துணவுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு நாளுக்கு குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணிகள் உட்பட 70 பேர் ஒரு பாலர் பள்ளியில் பலனடைகின்றனர்.



## குழந்தைகள் நல நிலையங்கள்:

1973 ஆம் ஆண்டு டிசம்பரில் 281 குழந்தைகள் நல நிலையங்கள் திறக்கப்பட்டதில் முஞ்சிறையில் 4 குழந்தைகள் நல நிலையங்களும், மேல்புறத்தில் 3 குழந்தைகள் நல நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டன. பின் 1974 பிப்ரவரித் திங்களில் 319 குழந்தைகள் நல நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டதில் முஞ்சிறை, மேல்புறம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் முறையே, 1, 2 குழந்தைகள் நல நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் வேலையில்லாதிருப்போருக்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். இக்குழந்தைகள் நல நிலையங்களிலும் பாலஹார், சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டு முதல் சிறப்புற்று நடந்து வருகிறது.

## மகளிர் மன்றங்கள் :

இம்மாவட்டத்தில் சுமார் 367மகளிர் மன்றங்கள் இயங்கி வருகின்றன. அவற்றிற்கு ஆண்டுதோறும் சிறந்த மகளிர் மன்றங்களுக்குப் பரிசு அளிக்கப்படுகிறது. 1972-73-ல் தக்கலை, மேல்புறம், குருந்தங்கோடு இராஜாக்கமங்கலம், கிள்ளியூர், திருவட்டார், தோவாளை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பரிசு வழங்கப்பட்டுள்ளது. அப்பரிசுத் தொகை மகளிர் மன்றங்களுக்குத் தையல் இயந்திரம் போன்ற பயனுள்ள சாதனங்கள் வாங்கப்பட்டு மகளிர் மன்றத்திற்கும் மகளிர் மன்ற அங்கத்தினர்களுக்கும் தங்கள் வருவாயைப் பெருக்கிடுவதற்கான வகை செய்யப்படுகின்றன. மேலும், இத்தொகைகள் கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு ஆடு வளர்த்தல், பன்றி வளர்த்தல், பழங்கள் பக்குவப்படுத்துதல், நெய்தலும், நூற்றலும், பின்னுதல், சோப்பு செய்தல், தையல் இயந்திரம் மூலம் துணி தைத்தல், கைக்குத்தல் அரிசி விற்பனை, பாய் முடைதல், கூடை முடைதல், மாடு வளர்த்தல், மின்சாரம் மூலம் மாவு அரைக்கும் இயந்திரம் வாங்குதல் ஆகிய சிறு தொழில்களுக்கும் பயன்படுத்தப்படும்.

# நீலகிரி மாவட்டம்



நீலகிரி மாவட்டத்தில் காந்தல்—குன்னூர் ஆகிய இடங்களில் மகளிர் நலக் கிளைகளும் உதகை மற்றும் கூடலூரில் தையல் பயிற்சி நிலையங்களும்—திருச்சிகடியில் பொம்மை உற்பத்தி நிலையம் ஒன்றும் அரிசன நலத் துறை நிதி உதவியுடன், கோத்தகிரி மற்றும் மசினகுடி ஆகிய இடங்களில் தையல் பயிற்சி நிலையங்களும் நடைபெற்று வருகின்றன. மேலும் இம்மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களாகிய உ.தகை, குன்னூர், கோத்தகிரி மட்டும் கூடலூர் ஆகியவைகளில் ஊராட்சி ஒன்றியத்திற்கு 30 வீதம் 120 மகளிர் மன்றங்கள் நடைபெற்று வருகின்றன. குழந்தைகள் காப்பகங்கள், குழந்தைகள் நல நிலையங்கள் ஆகியவையும் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு கிளையிலும் மகளிர் நல அமைப்பாளர் ஒருவர் பணியாற்றுகின்றனர். காலையில் 3 முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பாலர் பள்ளியும் மாலையில் மகளிர் மன்றங்களும் நடத்தப்படுகின்றன. மன்ற அங்கத்தினர்களுக்காகத் தையல் வேலை, பூ வேலை, பின்னல் வேலை மற்றும் சிறு கைத் தொழில்கள், கற்றுக் கொடுக்கப்படுகின்றன. தவிர குடும்ப நலம், சுத்தம், சுகாதாரம், குழந்தை வளர்ப்பு, காய்கறித் தோட்டம் அமைத்தல், சத்து உணவு செயல் முறை, சிறு சேமிப்பு ஆகியவைகள் பற்றி விரிவான விளக்கங்கள் தரப்படுகின்றன.

ஒவ்வொரு தையல் பயிற்சி நிலையத்திலும் 15 மாணவியர் பயிற்சி பெறுகின்றனர்கள். அவர்களுக்கு உதவித் தொகையாக அரசால் ரூ. 30 மாதம் ஒன்றுக்கு வழங்கப்படுகிறது. இவர்களது பயிற்சிக் காலம் 2 வருடம் ஆகும். இப்பயிற்சி நிலையத்திலிருந்தே மாணவிகள் அரசுத் தேர்வுக்கு அனுப்பப்படுகின்றனர். இம் மாணவிகளுக்குத் தையல் கற்றுக் கொடுக்க பயிற்சி பெற்ற தையல் ஆசிரியர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். பயிற்சி நிலையத்திற்குத் தேவையான மூலப் பொருட்கள் அரசின் மூலம் இத்துறையில் வழங்கப்படுகிறது.

' பொம்மை உற்பத்தி நிலையம் திருச்சிகடி :—இந் நிலையம் ஆதிவாசிப் பெண்களுக்காக நிறுவப்பட்டது. மரப்பொம்மை செய்கின்ற பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. தற்பொழுது அந்த நிலையம் உற்பத்தி நிலையமாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதில் 18 ஆதிவாசிப் பெண்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர்கள். உற்பத்திச் செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்து அத் தொகை கருவூலத்தில் செலுத்தப்படுகின்றது. நீலகிரி மாவட்டத்திலுள்ள குழந்தைகள் காப்பகங்களுக்கான விளையாட்டுச் சாதனங்கள் இவ் உற்பத்தி நிலையத்திலிருந்து தயாராகி விநியோகம் செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 மகளிர் மன்றங்கள் அமைக்கப்பட்டு நன்முறையில் நடைபெற்று வருகின்றன. உதகை, கூடலூர் ஊராட்சி ஒன்றியங்களில் மட்டும் 6 மகளிர் மன்றங்களுக்கு ஒரு தையல் ஆசிரியை நியமனம் செய்யப்பட்டு மகளிர் மன்ற அங்கத்தினர்களுக்கு தையல் வேலை, பூ வேலை, பின்னல் போன்ற கைத்தொழில்களைக் கற்றுத் தருகின்றனர். மகளிர் மன்ற அங்கத்தினர்களுக்கு, உப வருமானம் தரக் கூடிய வேலைகளாகிய கோழி வளர்த்தல், காய்கறித் தோட்டம் அமைத்தல், தேனீ வளர்த்தல் மற்றும் இது போன்ற கைத் தொழில் ஆரம்பிக்க உதவி செய்கின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் ஊழியரை ஊக்குவிக்கும் பொருட்டு அரசு சிறப்புப் பரிசுகளை வழங்குகிறது. அதன் காரணமாக நீலகிரி மாவட்டத்தில் 1971--72, 1972—73 ஆண்டுகளில் மாநில அளவில் சிறந்த முறையில் பணியாற்றிய ஊர் நல ஊழியை ஆக குன்னூர் ஊராட்சி ஒன்றிய ஊர்நல ஊழியை ஜே. பி. சுசீலா தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசு ரூ. 500 வழங்கப்பட்டுள்ளார். இது நீலகிரி மாவட்டத்தின் சமூக நலப் பணியின் சிறப்பு அம்சமாகும்.

குழந்தைகள் காப்பகங்கள்: ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் குழந்தைகள் காப்பகங்கள் அமைக்கப்பட்டு 3 முதல் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு பாலர் பள்ளி நடத்தப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைகள் காப்பகங்களுக்கு 40 குழந்தைகளுக்கு மேல் வருகை தருகின்றனர். இக் குழந்தைகளைப் பராமரிக்கவும், கற்பிக்கவும் குழந்தைகள் நலப் பணியாள் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். குழந்தைகளுக்கு பால்ஹார் திட்டத்தின்கீழ் கேர் உதவியுடன் மதிய உணவு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைகள் காப்பகத்திற்கும் ரூ. 400 மதிப்புள்ள விளையாட்டுக் கருவிகள் மற்றும் கல்விச் சாதனங்கள் வழங்கப்படுகின்றன.

ஊட்ட உணவுத் திட்டம் : இத்திட்டம் கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் செயல்படும் காப்பகங்களில் குழந்தைகளுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும், தாய்மை அடைந்துள்ள மகளிருக்கும் சத்துள்ள மதிய உணவு வழங்கப்படுகிறது.

குழந்தைகள் நல நிலையங்கள் : இம்மாவட்டத்தில் குழந்தைகள் நல நிலையங்கள் பல அமைக்கப்பெற்று பயிற்சி பெற்ற குழந்தைகள் நல அமைப்பாளர் ஒருவரால் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன.

# தஞ்சை மாவட்டம்

**தஞ்சை மாவட்டத்திலுள்ள சமூகநலத்துறை அரசுத் திட்டங்கள்:** மகளிர் நலக்கிளைகள்-3, சேவை இல்லம்-1, குழந்தைகள் இல்லம்-144 (திட்டம் அல்லாதவை), கேர் குழந்தைகள் காப்பகம் 85 (திட்டம்), ஊக்க உணவு பாலர் பள்ளி-15, குழந்தைகள் நல மையம்-40, சத்துணவு மகளிர் நலத்திட்டம் (மகளிர் மன்றங்கள்-)27, மகளிர் மன்றங்கள்-993, பயிற்சி நிலையங்கள்-3, தனியார் சேவை நிறுவனங்கள்-13,

தஞ்சை மாவட்டத்தில் தஞ்சை, திருவாரூர் மற்றும் மன்னார்குடி ஆகிய மூன்று நகராட்சிப் பகுதிகளில் மகளிர் நலக் கிளைகள் செயல்பட்டு வருகின்றன.

**சேவை இல்லம்:** சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்பட்ட விதவைகள், குழந்தைகள், தாய்மார்கள், கணவனால் கைவிடப்பட்டோர் 18 முதல் 30 வயதுள்ளவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து அவர்களைச் சிறந்த குடிமக்களாக மாற்றி அமைத்து அவர்களது வாழ்க்கையினைச் செம்மைப்படுத்துவது இச்சேவை இல்லத்தின் முக்கிய நோக்கம். 1964-ல் தாய்மார்களின் அனுமதி [illegible]ணிக்கை 50. குழந்தைகளின் எண்ண[illegible]க்கை 25. இப்பள்ளியில் சேர்க்கப்படுவோர் 3 ஆண்டுக்காலம் பயின்று, பின்னர் இ.எஸ்.எல்.சி. அரசு பொதுத் தேர்வுக்கு அனுப்பப்படுகின்றனர். இவையன்றித் தொழில் சம்பந்தமாக, தையற்கலையிலும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. தற்சமயம் 37 தாய்மார்களும், 18 குழந்தைகளும், இப்பள்ளியில் கல்வி பயின்று வருகின்றனர்.

1970-ஆம் ஆண்டு தொழிற்பிரிவு மற்றும் தட்டச்சுப் பிரிவு ஒன்றும் தொடங்கப்பெற்றுத் தொழிற்பிரிவில் 15 மாணவிகளும், தட்டச்சுப் பிரிவில் 20 மாணவிகளும் பயிற்சி அளிக்கப் பெற்றுள்ளனர். இவர்களுக்கு 6 தையல் இயந்திரங்கள், 5 தட்டச்சுப்பொறி, ஆகியவை அரசினால் அளிக்கப்பட்டுள்ளது. இப்பள்ளியில் மூன்று இடைநிலை ஆசிரியைகளும் மூன்று தொழில் நுணுக்க ஆசிரியைகளும் ஒரு பட்டதாரி தலைமை ஆசிரியையும் பணி புரிந்து வருகின்றனர். அருகில் உள்ள அரசினர் மருத்துவமனையில் இல்லப் பெண்களுக்கு மருத்துவ உதவி அளிக்கப்படுகிறது. ஒரு பகுதிநேர மருத்துவர் இல்லத்தைப் பார்வையிட்டு வருகிறார். ஆண்டுக்கு 2 இணை சீருடை அளிக்கப்பட்டு வருகிறது. இச்சேவை இல்லத்திற்காகத் தஞ்சை நாஞ்சிக் கோட்டையில் ரூ. 81,000 செலவில் புதிய கட்டடம் ஒன்று தமிழ்நாடு அரசினால் கட்டப்பட்டுள்ளது.

**குழந்தைகள் காப்பகம்:** தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினம், திருவிடைமருதூர், மதுக்கூர், பட்டுக்கோட்டை ஆகிய நான்கு வட்டங்களில் 144 குழந்தைகள் காப்பகங்கள் இயங்கி வருகின்றன. ரூ. 400 மதிப்புள்ள விளையாட்டுக் கருவிகள் ஒவ்வொரு பாலர் பள்ளிக்கும் வழங்கப்பட்டுள்ளன. அரசு மானியத்தின் மூலமாகச் சத்துணவுகள் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் இயங்கிவரும் பாலர் பள்ளிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் இல்லாமையால் மகளிர் நலக் கட்டடங்களிலும், வாடகை இல்லாத கட்டடங்களிலும் தற்காலிகமாக நடத்தப்பட்டு வருகின்றன. 1974-ஆம் ஆண்டு 200 கட்டடங்கள் கட்[illegible] தர கேர் நிறுவனம் முன் வந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டத்தில் 20 பாலர் பள்ளிகள் 7 வட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

தஞ்சை மாவட்டத்தில் 1-9-73 முதல் 85 குழந்தைகள் காப்பகங்கள் 24 வட்டங்களில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

**குழந்தைகள் நல மையம்:** தீவிர வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் 40 குழந்தைகள் நல மையம் 9 வட்டங்களில் தொடங்கப்பட்டு 1973 முதல் செயல்பட்டு வருகின்றது. எஸ்.எஸ்.எல்.சி. படித்த 40 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பெற்று 2 மாதப் பயிற்சிக்குப் பின்னர் பாலர் பள்ளியில் பணியில் அமர்த்தப்பட்டனர். காலை 8 முதல் மாலை 4 மணி முடிய பள்ளி நடைபெறுவதுடன் கிராமப்புறக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் வழக்கத்தினைக் கொண்டு வருவதுடன் வளரும் பிள்ளைகள் மனத்தில் நல்ல பழக்க வழக்கங்களையும் மன வளர்ச்சியையும் அடைய அவர்களுக்கு வகை செய்யப்படுகிறது. அதற்குரிய விளையாட்டுக் கருவிகள் வழங்கப்படுவதுடன் மதிய உணவும் வழங்கப்பட்டு வருகிறது. ரூ. 300 மதிப்புடைய விளையாட்டுக் கருவிகள் அரசினால் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

**பயிற்சி நிலையம்:** கிராமப் புறங்களில் வசிக்கும் பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்த பெண்களுக்குத் தங்களது அன்றாட வருமானத்தினைப் பெருக்கும் வகையில் தையல், பிரம்பு, மற்றும் மூங்கில் பொருட்கள் செய்யும் கலையில் ஓர் ஆண்டிற்குப் பயிற்சி அளிக்கப்பட்டு பின்னர் இப்பயிற்சியாளர்களைக் கொண்டு ஓர் உற்பத்தி நிலையம் தொடங்கி இப்பெண் பயிற்சியாளர்களுக்கு அங்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன் அவர்களது வருமானத்தினையும் நாட்டின் உற்பத்தியையும் பெருக்க வழி வகுக்கின்றது. தஞ்சை மாவட்டத்தில் பசுபதி கோவிலில் மூங்கில் பயிற்சி நிலையம் 1973 முதல் இயங்கி வருகின்றது.

பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளின் மறுவாழ்விற்காகத் தஞ்சை மாவட்டம் புதுப்பட்டினத்தில் 30 பெண் பயிற்சியாளர்களுக்குத் தையற்கலையில் ஓராண்டிற்குப் பயிற்சி அளிப்பதுடன் மாதம் ரூ. 200 உதவித்தொகையும் அளிக்கப்படுகிறது. இதுவரையில் 210 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 8-வது பயிற்சிப் பிரிவு தற்சமயம் நடந்து வருகிறது. முன்னாள் பயிற்சியாளர்கள் 87 பேருக்குத் தையல் இயந்திரங்கள் இலவசமாக அளிக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சி நிலையங்களுக்கு மூலப் பொருள்கள் மாதந்தோறும் அரசினால் வழங்கப்படுகிறது. உபகரணங்களும் அளிக்கப்பட்டுள்ளன. பர்மா அகதிகளின் குழந்தைகளுக்காகப் புதுப்பட்டினத்தில் 2 பாலர் பள்ளிகள் இயங்கி வருகின்றது.

# வட ஆர்க்காடு மாவட்டம்

''மாதர்களின் தியாகம், அறிவு விளக்கம் ஆகியவற்றைப் பொறுத்தே இந்தியாவின் ஈடேற்றம் அமைந்துள்ளது என நான் உறுதியாகக் கருதுகின்றேன்'' என்பது காந்தியடிகளின் வாக்கு.

திண்மையும், நேர்மையும் அமைந்த தேசத்தை உருவாக்கும் பணியை ஆற்ற வேண்டிய நிலையில் உள்ள பெண்களுக்கு இவ்வாக்கு மிகவும் பொருத்தமுடையதாகும். வருங்கால உலக அமைப்புக்கு இன்று அடிகோலும் பணிக்கு உதவி செய்தலும் இன்றைய அமைப்பை சீரும்சிறப்பு மிக்கதாகச் செய்ய வேண்டியது மகளிரின் கடமை மட்டுமின்றி உரிமையும் ஆகும்.

இந்தியப் பெண்கள் சுதந்தரம் பெறுவதற்கு முன் ஊக்க மிழந்து குடும்பத் தொல்லைகளுக்கு ஆளாகி அழுந்திக் கிடந்தனர். ஆனால் இந்நாளில் அத்தகைய நிலை நன்கு மாறிப் பெண்களின் நிலை நன்கு மேம்பட்டிருக்கிறது என்றால் அதற்கு முக்கிய காரணம் ''சமூக நலத் துறை'' என்றால் அது மிகையல்ல.

இல்லமே மகளிர்க்கு ஏற்ற இடம்; அதுவே அவர்கள் இன்ப நிலையம் என்பது உண்மையே எனினும் தம்முடன் பிறந்த ஆக்கக் கலை, அன்பு மொழிகள், தொண்டு செய்யும் சிந்தை ஆகியவற்றின் பயன், குடும்பத்தோடு நில்லாது பரந்து சமூக மக்களும் அடையுமாறு செய்வதே அவர் தம் கடமையாகும். மகளிராய் ஆற்றக் கூடிய இவ்வரிய பணியையும் மக்களைப் பண்பாட்டில் உயர்ந்தவராக ஆக்கத்தக்க அவர் தம் வல்லமையையும் உணர்ந்தே தமிழக அரசு மாதர் நலத்துறையை நிறுவியது. இத்தகைய அரிய பணியைச் செய்ய முதலில் முன்வந்த பெருமை இந்தியாவிலேயே சென்னைக்கே மீண்டும் ஒரு முறை கிடைத்தது.

மகளிர் நலத் துறை தோற்றுவிக்கப்பட்டதற்கு முக்கிய நோக்கம் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும், தொண்டு புரிவதுடன் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தச் செய்வதற்கே ஆகும். இத்துறை 1947-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தோற்றுவிக்கப்பட்டது.

மகளிர் நலத் துறையின் முதல் வேலையைப் பற்றிப் பொதுவாகச் சொல்லுமிடத்து குடும்ப நலத் தொண்டு, சமுதாய நலத் தொண்டு என்பவையாகும்.

வெளிவேலை முப்பிரிவுகளுடையது. அவை :

1. முறையாக வீடுகளுக்குச் சென்று குடும்ப நலம் பற்றிப் பார்வையிடல்.

2. மகளிர் மன்றங்கள்.

3. முன்னுதாரக் கல்வி வகுப்புக்களும், குடும்ப விசாரணையும், குடும்பங்களை அமைத்துத் தருதலும்.

இந்த மூன்று அம்சங்களும் இம் மாவட்டத்தில் எவ்விதம் செயல்படுத்தப்படுகின்றன?

குடும்ப நலம் : அனைத்திற்கும் குடும்பமே ஆதாரம் ஆகும். எனவே குடும்ப நலப் பணியே இத் துறையின் முக்கிய அம்சமாகும். ஆகவே பயிற்சி பெற்ற கிராமசேவிகை, முக்கிய சேவிகைகளால் கீழ்க் குறிப்பிட்ட செயல்களுக்காக ஒவ்வொரு குடும்பமும் ஒழுங்காக முறைப்படி பார்வையிடப் படுகிறது.

1. உடல் நலம், சுகாதாரம், மகப் பேறு, குழந்தை பராமரிப்பு, குழந்தை வளர்ப்பு முதலியவற்றிற்கு எல்லா உதவிகளையும் செய்தல்.

2. பிணியாளர்களை மருத்துவ நிலையத்தில் சேர்த்தல், பின்னரும் அவர்களைக் கவனித்தல்.

3. குடும்பத்தினரின் பல்வேறு பிரச்சினைகளையும் தீர்க்கும் வகையில் தக்க ஆலோசனை கூறுதல்.

4. வேலை வாங்கி அளித்தல், வருவாயைப் பெருக்க வழி வகைகள் செய்தல்.

5. சத்துணவு, தோட்ட வேலை, கோழி வளர்த்தல், ஆடு வளர்த்தல், கைத்தொழில்கள் முதலியவை கற்றுக் கொடுத்தல்.

மகளிர் மன்றங்கள் :— இம் மாவட்டத்தில் மொத்தம் 36 ஊராட்சி ஒன்றியங்கள உள்ளன. ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஊராட்சிக்கு ஒன்று வீதம் மொத்தம் 1,501 மகளிர் மன்றங்கள் உள்ளன. இவற்றில் நல்ல முறையில் நடைபெறும் மகளிர் மன்றங்களுக்குச் சுழலும் முறையில் அரசு மான்யம் காலாண்டிற்கு ஒரு முறை உதவித் தொகையாக ரூ. 15 அளிக்கப்படுகிறது.

மகளிர் நலத் துறையாகிய மாளிகை உண்மையில் வீட்டுக்கு வீடு சென்று காணுதல் என்னும் அடிக்கல்லின் மீதே அமைந்திருக்கிறது. பலவகைச் சூழ்நிலையில் வாழுகின்ற பல்வகைப்பட்ட இயல்புடைய மகளிருடன் பழகும் வாய்ப்பு கிராம சேவிகை, முக்கிய சேவிகைகளுக்கு வீடுகளைச் சென்று பார்வையிடுவதால் தான் கிடைக்கிறது. வீடுகளுக்கு அடிக்கடி சென்று பார்வையிட்டு அவர்களின் பிரச்சினைகளை அறிந்து இயன்றவரை அவர்களை மகளிர் மன்றங்களுக்கு வரச் செய்து அதனால் அவர்களுககு ஏற்படும் நன்மைகளை விளக்கிக் கூறுகின்றனர்.

இம் மன்றங்களில் முக்கியமான விழாக்கள், தேசீய நன்னாட்கள், உல்லாசப் பயணங்கள், குழு விவாதங்கள், சொற்பொழிவுகள், குடும்ப நலத் திட்ட படக் காட்சிகள் ஆகியவைகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன. குடும்பக் கலை, குடும்பச் சிக்கனம், வீட்டுத் தோட்டம் போடுதல், சத்து உணவுத் திட்டம், முதல்உதவி, பிணியாளர் பராமரிப்பு, குழந்தை வளர்ப்பு, வீட்டு மருந்துகள் ஆகியவற்றைப் பற்றி கிராம சேவிகை, முக்கிய சேவிகைகளால் எடுத்துக் கூறப்படுகிறது. இது குறித்த புத்தகங்கள் பலவும் சமூகக் கல்வி என்னும் தலைப்பின் கீழ் மகளிர் மன்றங்களுக்கு வாங்கியளிக்கப் படுகின்றன.

மாலை வேளைகளில் முதியோர் கல்வி வகுப்புக்களும், மகளிர் மன்றங்களில் நடைபெற்று வருகின்றன. இம் மன்றங்களுக்கு வரும் பெண்களுக்கு அவர்களின் வருவாயைப் பெருக்கிக்

கொள்ளப் பல்வேறு கைத்தொழில்கள் கற்றுத் தரப்படுகின்றன. கழிவுப் பொருட்களால் வீட்டுக்கு உதவும் அழகிய பொருட்களைச் செய்தல். ஊறுகாய், சர்ப்பத்துக்கள், பலவிதமான சத்துள்ள உணவு செயல் முறைகள் செய்யவும் கற்றுத் தரப்படுகின்றது. பலவகை சமையல் செயல் முறைகள் செய்ய வேண்டிய மாதம் ஒன்றுக்கு மகளிர் மன்றம் ஒன்றுக்கு ரூ. 5 அளிக்கப்படுகிறது. சத்துணவுத் திட்டம் மகளிர் மன்றங்களில் ஒவ்வொரு ஆண்டும் 8 வட்டாரங்கள் தேர்ந்தெடுத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி தற்சமயம் 8 வட்டாரங்களில் 74—75-ஆம் ஆண்டில் சத்துணவுக் கல்வித் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டம் செயல்படுத்தப்படும் மகளிர் மன்றங்களுக்கு ரூ. 500 சமையல் உபகரணங்கள் வாங்க அளிக்கப்பட்டுள்ளது. இது தவிர ரூ. 7 மாதம் ஒன்றுக்கு செயல்முறை செய்ய ஒதுக்கப்பட்டுள்ளது. சமையல் செயல் முறைகள் செய்து காட்ட மகளிர் மன்றத்திற்குப் பணியாளர் (ஆயா) ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இது தவிர ஆண்டுதோறும் மகளிர் மன்றங்களை ஊக்குவிக்கும்பொருட்டுச் சிறந்த மகளிர் மன்றங்களைத் தேர்ந்தெடுத்து தகுதிக்கேற்ப பரிசுத் தொகைகள் வழங்கப்படுகிறது. பரிசுத் தொகை மகளிர் மன்றத்தை வளர்ச்சி செய்யும் வகையில் செலவு செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆண்டு ஒன்றுக்கு ரூ.100, குழந்தைகள் கண்காட்சிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு அத்தொகையில் 5 குழந்தைகள் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. ஒரு குழந்தைக் கண்காட்சிக்கு ஒதுக்கப்படும் தொகை ரூ. 20-ல் சீப்பு, சோப்பு, கண்ணாடி, பவுடர், எவர்சில்வர் பாத்திரங்கள், பிளாஸ்டிக் சாமான்கள் ஆகியவை பெறப்பட்டு ஆரோக்கியமாகவும், போஷாக்காகவும் உள்ள குழந்தைகளுக்கு முறையே முதல், இரண்டாவது, மூன்றாவது பரிசுகள் வழங்கப்படுகின்றன. இதனால் குழந்தைகள் வளர்ப்பதில் தாய்மார்களுக்கு ஊக்கம் ஊட்டப்படுகிறது. இது தவிர குடும்ப நலத் திட்டம், சிறு சேமிப்பு திட்டத்திலும், கிராம சேவிகை, முக்கிய சேவிகைகள் பங்கு கொண்டு அவர்களுக்கு மேற்படி திட்டங்களில் கொடுக்கப்படும் இலக்கினை நிறைவேற்றி வருகின்றார்கள்.

முன்னாதாரக் கல்வி :— 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கென ஏராளமான பள்ளிகள் கிராமங்கள்தோறும் துவக்கப்பட்டிருக்கின்றன. கிராமப்புறங்களில் உள்ள பெண்கள் வயல் வேலைகளுக்குச் சென்றால் தங்களது குழந்தைகளைப் பற்றிய கவலையை விட்டு மன நிறைவுடன் வேலைக்குச் செல்ல இப் பள்ளிகள் வழி வகை செய்வதுடன் இப் பள்ளிக்கு வரும் குழந்தைகளுக்குத் துவக்கப் பள்ளிக்குச் செல்ல உற்சாகத்தைத்தருவதுடன் கல்விகற்கும் எண்ணத்தையும், பெரியவர்களிடமும் பெற்றோர்களிடமும் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றியும் தெய்வ வழிபாடு பற்றியும் அழகாகக் குழந்தைகளுக்குப் புரியும் வண்ணம் இப் பள்ளிகளில் நியமிக்கப்பட்டுள்ள பால சேவிகைகளின் மூலம் எடுத்துச் சொல்லப்படுகிறது. இளம் வயதிலேயே குழந்தைகளுக்கு ஒழுக்கத்தைப் பற்றியும் கல்வி கற்பதன் அவசியத்தைப் பற்றியும் கடமையுணர்வும், நேர்மையும் உள்ள இளைய தலைமுறையினரை உருவாக்கும் நல்லதொரு பணியையும் சமூக நலத் துறை செய்கிறது.

> பெண் மருத்துவர்கள் இல்லாமல், பெண் வழக்கறிஞர்கள் இல்லாமல், பெண் விஞ்ஞானிகள் இல்லாமல், பெண் எழுத்தாளர்கள் இல்லாமல் வாழ நம்மால் முடியும். ஆனால் தாய்மார்கள் இல்லாமல், மனைவிமார்கள் இல்லாமல், சகோதரிகள் இல்லாமல், அதாவது ஆண்களிடத்தில் உள்ள உயர்வையே கண்ணெனக் கொண்டு அன்பு செலுத்தி, நாம் அறியாதவாறு ஒவ்வொரு விநாடியும் ஆக்குவித்து, ஊக்குவித்து, நம்மைக் காப்பாற்றும் அவர்களில்லாமல் போனால் வாழ்வே துக்ககரமாகிவிடும்.
>
> — *டால்ஸ்டாய்.*

இம் மாவட்டத்தில் மொத்தம் 288 முன் பள்ளிகள் உள்ளன. அவைகளில் பல வகைப்பட்ட திட்டங்கள் செயல் படுத்தப் படுகின்றன. அவையாவன : 1. பாலஹார் உணவூட்டும் திட்டம், 2. உணவூட்டும் திட்டம், 3. கேர் உணவூட்டும் திட்டம், 4. செயல் முறை உணவூட்டும் திட்டம், 5. ஊட்டச் சத்துணவுத் திட்டம்.

1. பாலஹார் உணவூட்டும் திட்டம் :— இத்திட்டத்தின் கீழ் 60 தாய்மார்களுக்கு (பாலூட்டும் கர்ப்பிணித் தாய்மார்கள் 10) தினமும் உணவளிக்கப்படுகிறது.

2. உணவூட்டும் திட்டம் : இத் திட்டத்தில் 60 குழந்தைகளுக்கு மாதத்தில் 25 நாட்களுக்கு உணவளிக்கப்படுகிறது.

3. கேர் உணவூட்டும் திட்டம் : இத்திட்டத்தின்கீழ் 120 பிள்ளைகளுக்கு உணவளிக்கப்படுகிறது. இதற்கான செலவினம் கேர் நிறுவனத்தினரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

4. செயல்முறை உணவூட்டும் திட்டம் :—இத்திட்டத்தின் கீழ் 6 மாதம் உள்ள குழந்தைகளை உடைய தாய்மார்களும், 6 மாதம் முதல் 2 வயது வரை உள்ள 20 பிள்ளைகளும், 2 வயது முதல் 5 வயது வரை உள்ள 30 குழந்தைகளும், மாதத்தில் 25 நாட்களுக்கு உணவளிக்கப்படுகின்றனர்.

5. ஊட்டச் சத்துணவுத் திட்டம் :— இத்திட்டம் இம் மாவட்டத்தில் கலசவாக்கம், ஆலங்காயம் ஆகிய இரண்டு வட்டாரங்களில் மட்டும்தான் இயங்கி வருகிறது.

மகளிர் நலக் கிளைகள் :— வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூர், திருப்பத்தூர், பள்ளிகொண்டா, திருவண்ணாமலை, வந்தவாசி என்ற ஐந்து இடங்களில் மகளிர் நலக் கிளைகள் இயங்கி வருகின்றன. மகளிர் நலத் துறையில் மகளிர் நலக் கிளை முக்கியமான அங்கமாகும். அரிசன நலத் துறையினரால் நடத்தப்படும் பள்ளி மாணவ, . மாணவிகளுக்கு ஆண்டுக்கு இருமுறை வழங்கப்படும் சீருடைகளை இக்கிளை அங்கத்தினர்கள்தான் தைத்துத் தருகின்றனர். அதனால் வருடம் ஒன்றுக்கு ரூ. 50,000க்கும் அதிகமாகக் கூலி பெறுகின்றனர். இதனால் அவர்களின் வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இக் கிளைகள் பேருதவி புரிகின்றன.

# ஆயிரம் கதை சொல்லும் அபய நிலையம்

*



கோவையிலுள்ள ஒரு பேருந்து நிலையம்!

அதோ, ஒரு கல்லூரி மாணவி வருகிறார். கல்லூரியிலிருந்து தாமதமாக வருவதால் அவருடன் தோழிகள் யாரும் வரவில்லை போலும்!

பேருந்து நிலையத்தில் தனியாக நின்று கொண்டிருக்கிறார். வீடு திரும்ப வேண்டும். பொழுதோ சாய்ந்து கொண்டு இருக்கிறது.

அப்பொழுது—

ஒரு கார் விரைந்து வந்து அவர் முன்னால் 'சடக்'கென்று நிற்கிறது. காரிலிருந்து இருவர் அவசர அவசரமாக இறங்கி வந்து கல்லூரி மாணவியை இழுத்துக் காருக்குள் போட்டுக் கொள்கின்றனர். கார் விரைகிறது. கண்ணிமைக்கும் நேரத்தில் இது நடக்கிறது.

கார் சென்னையை நோக்கிப் பறக்கிறது.

காருக்குள்ளே—

காரிகை கண்கள் கட்டப்பட்டு கிடந்தாள்!

காலை, கல்லூரி சென்ற தன் மகளைக் காணவில்லையே என்று பெற்றோர்கள் நாலா பக்கமும் தேட ஆரம்பித்தனர். இரவு நேரம் நெருங்க நெருங்க அவர்கள் கதி கலங்கினர்.

விரைந்து வந்த கார், சென்னையின் ஒதுக்குப்புறத்திலே உள்ள குடிசைப் பகுதிக்குள் நுழைந்து, ஒரு குடிசை முன் நின்றது. இருவர் மாணவியை குடிசைக்குள் இழுத்துச் சென்றனர்.

குடிசைக்குள் என்ன நடந்தது?



பென்சில்களுக்கு ரப்பர் போடப்படுகிறது.

''ஒன்றும் நடக்கவில்லை! கண் கட்டை அவிழ்த்துப் பார்த்தேன். ஒரே இருள். குடிசைக்குள் ஒரு பெண்மணி இருந்தாள். என்னைக் கடத்திக் கொண்டு வந்தவர்கள் மீண்டும் காரில் திரும்பிக் கொண்டிருந்தனர். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

''அதே இரவில் எல்லாரும் கண்ணயரும் நேரத்தில், மெல்ல அந்த இடத்தை விட்டு வேறொரு குடிசைக்குள் நுழைந்தேன். விசித்து விசித்து அழுத என் அழுகுரலைக் கேட்டுக் கண் திறந்தாள் ஒரு பெண்மணி; அவள் வெள்ளை உள்ளமும் திறந்தது. நடந்த கதையைச் சொன்னேன். அவள் பரிதாபப்பட்டாள். 'வயசு வந்த பொண்ணு, ஜாக்கிரதையாக இருக்க வேண்டாமா?' என்று செல்லமாகக் கண்டித்தாள்.

'என்னைச் சென்னைக்கு அனுப்பி விடுங்கள். அங்கிருந்து நான் எப்படியாவது ஊருக்குப் போய்விடுவேன்.' என்றேன். என் கையில் பணம் எப்படி இருக்கும்?

அவர்கள் காசு கொடுத்து என்னைச் சென்னைக்கு அனுப்பி வைத்தார்கள். சென்னைக்கு நான் புதியவள். எங்கே போவது, என்ன செய்வது



அட்டைப் பெட்டிகளில் பென்சில்கள் அடைக்கப்படுகின்றன.

என்று புரியவில்லை. என் கால்கள் நடந்து கொண்டே இருந்தன.

அதோ, காவல் நிலையம்!

நான் தைரியமாக உள்ளே சென்று நடந்ததை விவரமாகச் சொன்னேன். பிறகு காவலர் ஒருவர் என்னை அழைத்துச் சென்றார்.''

—என்று அந்தக் கல்லூரி மாணவியின் கதையை 'அபய நிலைய' சிறப்புச் செயலாளர் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

''பிறகு இந்தப் பெண் அவள் பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்டாளா?'' என்று ஆவலுடன் கேட்கிறேன்.

''அது தானே எங்கள் பணி? அந்தப் பெண்ணின் பெற்றோர்களுக்கு உடனே கடிதம் எழுதினோம். இரண்டாவது நாளே அவளுடைய பெற்றோர்கள் இங்கு வந்து பெண்ணை அழைத்துச் சென்றார்கள்'' என்கிறார் அபய நிலைய செயலாளர் புன்னகையுடன்.

அபய நிலையம்!

சென்னை மயிலாப்பூர் கச்சேரி சாலையில் காட்சியளிக்கும் இது, ஆதரவற்ற பெண்களுக்கு அபய மளிக்கிறது; நெஞ்சிலே சுமையுள்ள பெண்களுக்குத் தஞ்சம் அளித்து அந்தச் சுமையைக் குறைக்க உதவுகிறது.

சென்னை விஜிலன்ஸ் சங்கத்தின் ஆதரவில் இயங்கி வரும் இந் நிலையம் 1955-ல் துவக்கப் பட்டது.

குடும்பத் தொல்லை காரணமாக மன நிம்மதியின்றி வீட்டைவிட்டு வெளியேறுதல்.

வேலையில் சேரும் ஆர்வத்தில் வெளியூர் செல்லுதல்.

திரைப்படத்தில் நடிக்க வேண்டும் என்ற தணியாத ஆர்வத்தினால் சென்னைக்கு வருதல்.

மேற்படிப்பில் சேர வேண்டும் என்ற எண்ணத்தில் சொல்லிக்கொள்ளாமல் வருதல்.

பெற்றோர்களின் கொடுமை தாளாமல் மனமுடைந்து வீட்டைவிட்டுச் செல்லுதல்.

வசதிக் குறைவினால் திருமணம் ஆகாதவர்கள்.

கணவனால் கைவிடப்பட்டவர்கள்.

மணமாகாத தாய்மார்கள், மற்றும் விதவைகள்.

—இப்படி பல்வேறு தொல்லைகளால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கும்?

வீட்டை விட்டு வெளியேறுவதாலோ, யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் பழக்கமில்லாத ஊர்களுக்குச் செல்லுவதாலோ மனத்திலே இருக்கிற பாரம் குறைந்து விடுமா என்ன?

ஊர் விட்டு ஊர் வரும் ஓர் ஆண் மகனுக்கே எத்தனையோ தொல்லைகள் ஏற்படுகின்றன. இதைச் செய்தித் தாள்கள் அன்றாடம் நமக்கு நினைவுறுத்துகின்றன. ஆனால் ஓர் இளம் பெண் முன் பின் தெரியாத ஒரு இடத்திற்கு ஓடி வருகிறாள் என்றால் அதன் விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்பதனை நாம் ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

மேற்கண்ட தொல்லைகளால் உள்ளம் நொந்தவர்கள், ஆர்வம் காரணமாக உந்தப்பட்டு வெளியேறியவர்களுக்கெல்லாம் அன்பும் ஆதரவும் காட்டி அவர் தம் வாழ்வுக்கு ஒளி ஊட்டி வருகிறது இந் நிலையம்.

அதோ! அந்த இளம்பெண் தன்னந் தனியாக வந்துகொண்டிருக்கிறாள். சற்று நேரத்திற்கு முன் அவள் முகத்திலே இருந்த மலர்ச்சி இப்போது இல்லையே? ஏன்?

திரைப்பட நடிக, நடிகைகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் ஊரை விட்டு ஓடி வந்தவள் அவள்! வந்தவள் ஏமாற்றத்துடன் திரும்பிக் கொண்டிருக்கிறாள். காரணம், அவள் யாரைப் பார்க்க வேண்டும் என்று ஆவலுடன் வந்தாளோ அவர் ஊரில் இல்லை!

இப்போது எங்கே போவது?

என்ன செய்வது?

அவள் கால் போன போக்கில் நடந்துகொண்டிருக்கிறாள். நடையிலே தளர்ச்சி, உள்ளத்திலேயும்தான்!

இடையிலே ஒருவன் சந்திக்கிறான். உதவி செய்வதாக உறுதி கூறுகிறான். அதையெல்லாம் எப்படியோ நம்பி விடுகிறார்களே இந்தப் பெண்கள்! 'நம்பிக்கை'யின் பின்னே செல்கிறாள் பேதைப் பெண். பிறகு தான் தெரிகிறது, அவன் தன்னைத் தவறான வழியில் அழைத்துச் செல்கிறான் என்று.

உடனே, எப்படியோ அவனிடமிருந்து தப்பித்துக் கொண்டு, நேரே காவல் நிலையம் வருகிறாள். பிறகு அபய நிலையம் அவளுக்குத் தஞ்சம் அளிக்கிறது; அறிவுரை கூறுகிறது; அவளது பெற்றோர்களிடம் கடிதத் தொடர்பு கொள்கிறது. உடனே பெற்றோர்கள் பெண்ணை அழைத்துச் செல்கின்றனர்.

மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பெண்!

அவள் முகத்திலே சோகம் குடிகொண்டிருக்கிறது. வேலை கிடைக்கும் என்று நம்பி சென்னை வந்தவளாம் அவள். சென்னை நகர வீதிகளிலே அலைந்து திரிந்த அவளை அபய நிலையம் அன்புடன் வரவேற்றது. அவள் வீடு திரும்பவும் வழி செய்தது.

தோட்டத்துக்குக் காவல் இல்லையென்றால் என்ன ஆகும்? அதைப் போலத்தான் காவல் இல்லாத பருவப் பெண்ணின் வாழ்வும்!

பெண் புத்தி பின் புத்தி என்கிறார்களே அது இவர்களுக்கு ரொம்பவும் பொருத்தம். இல்லையென்றால் இப்படிச் சொல்லிக் கொள்ளாமல் பழக்கமில்லாத பட்டணத்துக்கு வருவார்களா?

ஆந்திராவைச் சேர்ந்த ஒரு இளம் பெண் தன் கணவனுடன் சண்டை போட்டுக் கொண்டு சென்னைக்கு வந்து விட்டாளாம்.

அபய நிலையச் செயலாளர் அந்தப் பெண்ணைச் சுட்டிக் காட்டுகிறார். 'நான் வந்தது தவறுதான்' என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தது அவளது முகம். அகத்தின் அழகு முகத்தில் தெரிந்தது. அதுமட்டுமல்ல, ''என்னை உடனே என் கணவன் இருக்கும் இடம் அனுப்பிவிடுங்கள். இனிமேல் இப்படியெல்லாம் தவறுசெய்யமாட்டேன்'' என்று அந்தப் பெண் தெலுங்கில் பேசியது இன்னும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.



நூல் நூற்கும் நேரிழையர்!

இப்படி ஒவ்வொருவரைப் பற்றியும் ஒரு கதையே சொல்லலாம். எல்லாம் சோகக் கதைகள் தாம்!

கணவன் மனைவி சண்டை காரணமாக வீட்டை விட்டு வெளியேறும் பெண்கள் தான் இங்கு அதிகம் என்கிறார் இந் நிலையத்தின் சிறப்புச் செயலாளர் திரு வி. எஸ். ரிஷி.

இவர்கள் சண்டைச் சச்சரவுகளை மறந்து, மீண்டும் நல்ல முறையில் குடும்பம் நடத்துவதற்கு வழி வகை செய்கிறது இந் நிலையம்.

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட பெண்கள் எவ்வித நிபந்தனையும் இன்றி, சாதி, மத பேதமில்லாமல் இங்குச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இங்கு சேர்ந்தபின் அவர்கள் பிரச்சினைகளை மனிதாபிமானத்தோடுஅணுகி பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றனர்.

பெற்றோர் விரும்பாத அல்லது பெற்றோர்களிடம் வாழ விருப்பமில்லாத பெண்களுக்கும் மறுவாழ்வு பல விதத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

தகுதியுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்புஅளித்தலும்மேற்படிப்பில் சேர உதவியளித்தலும் இதன் பணிகளில் ஒன்றாக இருக்கிறது.

தையல் வேலையில் தையலர்!



இவையன்றி நீண்ட காலப் பயிற்சி நிலையங்களில் சேர்வதற்குத் தக்க ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன.

இன்னொரு நல்ல காரியத்தையும் இந் நிலையம் செய்து வருகிறது.

திருமணம் செய்து கொள்ள விரும்பும் அனாதைப் பெண்களுக்கு இலவசமாகத் திருமணம் செய்து வைக்கப்படுகிறது.

'ஆயிரம் 'பொய் சொல்லி ஒரு கல்யாணத்தை நடத்து' என்பார்களே, இந்தப் பழமொழி இங்கே பலிக்காது! ஆயிரம் உண்மை சொல்லி கல்யாணம் செய்து கொள்' என்ற புது மொழி—உறுதி மொழி இருந்தால்தான் உடனே நடக்கும் திருமணம்!

நாம் திருமணத்திற்கு முன் பிள்ளை வீட்டாரைப் பற்றி விசாரிக்க வில்லையா— மாப்பிள்ளை வேலையில் இருக்கிறாரா, நல்லவரா என்றெல்லாம் அதைப்போல இந் நிலையம் ஒரு பெண் வீட்டாரைப் போல இருந்து திருமணத்தை நடத்தி வைக்கிறது.

இதுவரை இந் நிலையம் 100-க்கு மேற்பட்ட பெண்களுக்குப் பதிவுத் திருமணம் செய்து வைத்திருக்கிறது. இந்த மணமக்கள் நல்ல முறையில் இல்லறம் மேற்கொண்டு வருவதைப் பார்த்து இந்நிலையம் பெற்ற தாய் போல பெருமகிழ்வு கொள்கிறது. இவர்களது பிள்ளைகள் பள்ளியில் சேர்ந்து படிக்கவும் இந்நிலையம் உதவி செய்கிறது.

அபய நிலையத்தில் சேர்ந்ததும் ஒரு பெண் உடனடியாக அவர்கள் உறவினர்களிடம் சேர்க்கப்படுகிறாள். அதற்கான துரித நடவடிக்கைகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. குறைந்தது 3 மாதங்கள் வரை இங்கு அவர்கள் வைக்கப்படுகின்றனர். இந்தக் கால கட்டத்தில் பொழுதைக் போக்கவும், மனச்சுமையைக் குறைக்கவும் சில வேலைகளில் அவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். தையல் வேலை, பென்சில்களைக் காகிதப் பெட்டிகளில் அடைத்தல், அட்டைப் பெட்டிகள் ஒட்டுதல் போன்ற வேலைகளை இவர்கள் இங்கே செய்வதைப் பார்க்கிறோம்.

இதுவரை 3,500-க்கு மேற்பட்ட பெண்களுக்குப் பாதுகாப்பு அளித்து அவர்கள் நல்வாழ்வுக்குக் கலங்கரை விளக்குப் போல இது வழி காட்டியிருக்கிறது.

இந்நிலையத்திற்குத் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் ரூ. 8,500 நிதியுதவி வழங்கி வருகின்றது. மத்திய சமூக நல வாரியமும் ரூ. 3,000 நிதியளிக்கிறது.

தமிழ் நாடு, ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களிலிருந்தெல்லாம் இப்படிப் பெண்கள் வருகின்றனர். அவர்களுக்கெல்லாம் புகலிடம் தந்து அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து மகளிர் நலத்திலே அக்கறை செலுத்தி வரும் இந் நிலையம், ஒரு தாய் வீடு போல விளங்கி வருகின்றதென்றால் அது உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை!

—பி. வி. ஜி.

## இந்தியாவில் மகளிர்

1975-ஆம் ஆண்டை அனைத்திந்திய மகளிர் ஆண்டாகக் கொண்டாட வேண்டும் என்று ஐ.நா. அவை அறிவித்துள்ளது.

1930-ஆம் ஆண்டில், வெள்ளையர் ஆட்சியை எதிர்த்து ஒத்துழையாமை இயக்கம் நடைபெற்றது. இதன் அம்சமாக, உப்புச் சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டது. இந்தியாவில் அப்போதிருந்த பெண்களின் மனத்தில் ஒரு பெரிய சுதந்தர வேட்கையை இது ஏற்படுத்தியது. காந்தியடிகளின் தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாகிரக இயக்கத்தில், திருமதி சரோஜினி நாயுடு போன்ற நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்துகொண்டது, நாட்டிலுள்ள பெண்களிடையே விடுதலைப் போராட்ட வேள்வியைத் துவக்கியது.

தற்போது இந்தியாவில், பல்வேறு துறைகளிலும் பெண்கள் பொறுப்பான பதவி வகித்து வருகிறார்கள். 1974-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட இந்திய விஞ்ஞானிகள் மாநாட்டுக்குத் தலைமைதாங்கியவர் திருமதி ஆஷிமா சட்டர்ஜி ஆவார். அவர் புகழ்பெற்ற இரசாயனத்துறை நிபுணர். இருதய நோய் நிபுணரான டாக்டர் குமாரி பத்மாவதி, இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழக உறுப்பினராக அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர்களைத் தவிர, நம் நாட்டில் தற்போது 20 ஆயிரத்துக்கும் அதிகமான பெண் மருத்துவர்கள் பணி புரிந்து வருகின்றனர். மேலும், கட்டடக்கலை, பொறியியல், ஆகிய துறைகளிலும் பல பெண்கள் பட்டம் பெற்றுள்ளனர். எழுத்தாளர்களாகவும், ஓவியம் வரைபவர்களாகவும், சிற்பிகளாகவும், பெண்கள் பலர் தற்போது நம் நாட்டிலுள்ளனர்.

நம் நாட்டில் படித்துப் பட்டம் பெற்ற பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. நம் நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களில் 23,450 ஆசிரியைகளும் பள்ளிகளில் 94,200 பட்டம் பெற்ற ஆசிரியைகளும் உள்ளனர். மேலும் சில பெண் துணை வேந்தர்களும், சில மாநிலங்களில் இருக்கின்றனர். பொது வாழ்க்கையிலும் பெண்கள் பங்குகொண்டு தலைமைப் பதவி வகித்து வருகின்றனர். அனைத்திந்திய மட்டத்திலும், இந்தியப் பெண்கள், தங்களுடைய அறிவாற்றல் மூலம் முன்னணிக்கு வந்துள்ளனர். ஐ.நா. அவையிலும், அதைச் சார்ந்துள்ள பல்வேறு நிலையங்களிலும் இந்தியாவைச் சேர்ந்த பெண்கள் பலர் பொறுப்பான பதவிகள் வகிக்கின்றனர்.

மத்திய அரசின் நிருவாகப் பணியிலும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. முப்படைகளிலும்கூட பெண்கள் பணியாற்றி வருகின்றனர். வானொலி நிலையங்கள், தொலைக்காட்சி நிலையங்கள் ஆகியவற்றில் பொறுப்பான பதவிகளில் பெண்கள் உள்ளனர். தற்போது திரையுலகில் பெண்கள் ஆற்றி வரும் தொண்டு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். 50 ஆண்டுகளுக்கு முன்னர், இது பற்றி நாம் நினைத்துப் பார்த்திருக்கக்கூட முடியாது.



# பாசன நீர் நிருவாகம்

தமிழ்நாட்டின் 73.5 இலட்சம் எக்டேர் சாகுபடி பரப்பில், 32.8 இலட்சம் எக்டேர் பரப்பிற்கு நீர்பாசனம் செய்யப்படுகிறது. இது 47.9 சதமாவதுடன் இந்தியாவிலேயே அதிக நிலப்பரப்பில் பாசனம் செய்யும் மாநிலமாகவும் திகழ்கிறது. பயிர்களுக்கான பாசன நீர் நிருவாகம் பல காரணங்களால் மாறுபடும். அதாவது பருவகால மழை, நீர் ஆவியாவதன் தன்மை, நீர் நிலைகளின் அளவு, சாகுபடி செய்யும் பயிரின் தன்மை, மண் மற்றும் தண்ணீரில் உள்ள உப்புகளின் அளவு, மண்ணின் அமைப்பு, சத்துகளின் நிலைகள், பாசன வழி முறைகள், உரமிடுதல், களையெடுத்தல் ஆகியவைகளால், பாசன நீர் நிருவாகம் மாறுபடும். இக்காரணங்களைக் குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகத்தில் ஆராய்ச்சிகள் பல நடந்து வருகின்றன. சில ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகள் இங்கு விவரிக்கப்பட்டுள்ளன.

### நெற் பயிர்

நெற்பயிருக்கு, இதர சம வயதுடைய பயிர்களைக் காட்டிலும் இரண்டு அல்லது நான்கு பங்கு நீர் தேவைப்படுகிறது. நெல் வயலில் நீரைத் தேக்கி வைப்பதால் நிலத்தின் கீழ் வடிந்துவிடுவதுடன், ஆவியாகியும் சென்றுவிடுகிறது. மேலும் நஞ்சை நிலங்களில் நன்ருக மண்ணைப் புரட்டி சேற்றை கலக்கிட அதிக அளவு நீர் தேவைப்படுகிறது. நீர் வடிந்து விடுவதால் மட்டும் 58 முதல் 70 சத நீர், மொத்த தேவையில் வீணுகின்றன.

பருவ மழை காலங்களில் மழை நீர் கிடைப்பதால் 5 செ.மீ. உயரத்திற்கு நீரைத் தொடர்ந்து தேக்கி வைக்கத் தேவையில்லை. 4 முதல் 8 நாட்களுக்கு நீரை நிறுத்தி பின் நிலத்தை உலர வைப்பதால் மகசூல் பாதிக்கப்படவில்லை. ஆனல் கோடை காலத்தில், 5 செ.மீ. ஆழத்திற்கு நீர் தேக்கி வைப்பதால் நல்ல மகசூல் கண்டுள்ளது. தூர் பிடிக்கும் காலம் முதல் பூட்டை பிடிக்கும் காலம் வரை நீரைத் தேக்கி வைப்பதா, 'ஐ.ஆர்.ல் 20' பயிரில் எக்டேருக்கு 7,502 கிலோ தானியம் கிடைத்தது. 'கோ. 30' போன்ற சாதாரண வகை நெற்பயிருக்கும், அதிக விளைச்சல் தரும் 'ஐ. ஆர். 20' ரகத்துக்கும் ஒரே அளவு பாசன நீர் போதுமானது. உயர் விளைச்சல் தரும் குட்டை ரக பயிர்கள் குறைந்த ஆழம் உள்ள நீர் பரப்பிலேயே நன்ருகத் தூர்பிடித்து வளருகின்றன.

மதுரையில், செம்மண் பூமியில், தொடர்ச்சியாக 5 செ.மீ நீர் நீற்கும்படி நிர்வாகம் செய்த பூமி கொடுத்த மகசூலிலும், 5. செ. மீ. நீர் பாய்ச்சி பின் சிறு வெடிப்புகள் ஏற்படுவதற்கு முன் திரும்பவும் அதே அளவுக்கு நீர் பாய்ச்சி கிடைக்கும் மகசூலிலும் விளைச்சல் மாறுபாடு இல்லை. 5. செ.மீ. ஆழத்திற்கு நீர் தேக்கி பின் நிலமட்டத்திற்கு வந்தவுடன் அதே நிலைக்குக் கொண்டுவரும் முறையில்-தொடர்ந்து நீர்த் தேக்கும் விவசாயிகளின் முறையைக் காட்டிலும்-30 சதம் நீர் சேமிக்கலாம்.

பவானிசாகர் மணல் கலந்த செம்மண் பூமியில், இரண்டு நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சி வந்ததால் எக்டேருக்கு 6,653 கிலோ மகசூல் கிடைத்துள்ளது. தைப் பட்டத்தில், முதல் 35 நாட்களுக்கு 5 செ.மீ. நீர் இரண்டு நாட்களுக்கு ஒரு முறையும், பின்பு காலையும், மாலையும் 5 செ மீ. ஆழத்தில் நீர் தேங்கும்படி நீர் விட்டும், கடைசி 35 நாட்களுக்கு தினமும் 5 செ.மீ. ஆழத்திற்கு நீர் பாய்ச்சி வந்ததால் எக்டேருக்கு 6,496 கிலோ மகசூல் கிடைத்தது.

கிடைத்துள்ள ஆராய்ச்சி குறிப்புகளிலிருந்து நாம் பருவ மழை காலங்களில் நிலப்பரப்பில் நீர் உலராமல் பார்த்துக் கொண்டால் போதுமானது. மற்றும் கோடை கால்த்தில் நல்ல மகசூல் பெற 5 செ. மீ. நீர் தேக்கி வைப்பது மிகவும் அவசியமானது. நல்ல மகசூல் கிடைக்க தூர் பிடிக்கும் போதும், பூக்க ஆயத்தமாகுதல் முதல் பால் பிடிக்கும் காலம் வரையும் சிறந்த நீர் நிருவாகம் தேவையாகும். செவ்வனே அமைக்கப்பட்ட நிலப் பரப்பு, நீர் நிருவாகத்திற்கு அவசியம். இது பாசனத்திற்கும், நீர் வடித்தலுக்கும் துணை புரிவதுடன் ஒரே சீரான பயிர் வளர்ச்சிக்கும் உதவுகிறது. மண்ணில் ஊறு விளைவிக்கும் உப்புகள் இருப்பின், நீர் வடியும் திறன் இல்லாத நிலப்பரப்பிற்கு மண்ணிற்கு மேல் மட்டத்திலேயே வடியும் வசதி அமைத்தல் அவசியம். குட்டை ரக, அதிக விளைச்சல் தரும் நெற் பயிர் பயிரிடுவதால், சிக்கனமாக நீரை உபயோகப் படுத்துவதுடன், அதிக அளவு தழைச் சத்து, சூரிய வெளிச்சம் ஆகியவைகளை திறம்பட பயன்படுத்தி நல்ல மகசூல் பெற முடியும்.

### சோளம்

மண்ணில் 50 சத ஈர தன்மைக்கு நீர் பாய்ச்சி எக்டேருக்கு 100 கிலோ தழைச்சத்து இட்டு, 5,269 கிலோ தானியம் கிடைத்தது.

### மக்காச்சோளம்

மக்காச் சோளம் கங்கா 101 வகைக்கு மண்ணின் 80 சத ஈர தன்மை நிலையில் பாசனம் அளிக்க 25 முறை நீர் தேவைப்பட்டது. 4 அல்லது 5 நாட்களுக்கு ஒரு முறை என்ற அளவில்-மணற்பாங்கான பூமியில் கோடையில் நீர் ஆவியாகி செல்வதால் பாசனம் அளிக்கப்பட்டது. மண்ணில் அதிக அளவில் ஈரத் தன்மை இருக்கச் செய்தால், பூ பிடிப்பது துரிதமாகிறது. மக் மக்காச் சோளத்திற்கு பூ பிடிக்கும் காலம் வரையில் மண்ணில் 25 சத ஈரத்தன்மை இருக்கும் போதும், கதிர் செழிக்கும் தருணத்தில் மண்ணில் 75 சத ஈரத்தன்மை இருக்க நீர் பாசனம் செய்ததிலும் எக்டேருக்கு 2,775 கிலோ மகசூல் கிடைத்தது.

### பருத்தி

முன்பு கோவையில் மேற்கொண்ட ஆராய்ச்சியிலிருந்து கம்போடியா பருத்திக்கு வட கிழக்கு பருவ மழை காலம் முடிந்தபின் இரண்டு பாசனம் டிசம்பர், ஜனவரி மாதங்களில் அளித்தால் போதுமானது என்று தெரிகிறது. பவானிசாகர் மணல் கலந்த செம்மண் பூமியில் மண்ணின் ஈர தன்மை 20 சதம் இருக்கும் போது பாசனம் அளித்தாலே போதும். இதற்கு 6 முதல் 9 முறை - மழையளவுக்கு தாக்கவாறு-பாசனம் செய்யலாம். பாத்திகள் கட்டி நீர் பாய்ச்சுவதைக் காட்டிலும், பார்கள் அமைத்து நீர்பாசனம் செய்வதால் விளைச்சல் பாதிக்கப்படாமல் இருப்பதுடன், 25 சதம் தண்ணீர் சேமிக்கலாம்.

### கரும்பு

குடியாத்தம் கரும்பு ஆராய்ச்சி பண்ணையில் 6, 12 மற்றும் 18 நாட்கள் இடைவெளியில் பாசனம் செய்ததில் மகசூல் ஒன்றும் மாறுபடவில்லை. நெல்லிக்குப்பம் பகுதியில் 5 நாட்கள் இடைவெளியில் பாசனம் செய்ததில் கரும்பு மகசூல் அதிகமாக இருந்தது. ஆனால் பாசனத்தை 15 நாட்களுக்கு ஒரு முறை அளித்து கட்டை வெட்டுவதற்கு ஒரு மாதம் முன்பு நிறுத்தி விட்டால், கரும்புச் சாரின் தன்மை உயருகிறது. பாலூரில் நடத்திய ஆராய்ச்சியில் பாசனத்தையும், உர அளவையும் அதிகரித்ததில் சாரின் தன்மை நன்றாக இல்லை.

கோவையில் நடத்திய மற்றுமொரு பரிசோதனையில் அதிகமாகப் பாசனம் அளிக்கப்பட்ட கரும்பில் 1.8 யூனிட் சர்க்கரை உற்பத்தி—பாசனம் நன்றாக உலர்ந்த கரும்பிற்கு அளிக்கப்பட்டதைவிட — குறைவாக இருந்தது. சாம்பல், மணிச்சத்துகளையும், ஈரத் தன்மையையும் நிருவாகம் செய்வதால், கரும்பில் இருந்து சர்க்கரை பெறும் தன்மையை 1.5 சதம், அதிகரிக்க செய்ய முடியும்.

### நிலக்கடலை

பாலூரில் நிலக்கடலையில் 10 நாட்களுக்கு ஒரு முறை பாசனம் செய்ததில் அதிக விளைச்சல் கிடைத்தது.




மணற்பாங்கான செம்மண் நிலத்தில் தைப்பட்டத்தில் 40 முதல் 60 சத ஈரத்தன்மையில் பாசனம் செய்ததில் அதிக மகசூல் கிடைத்தது. இதற்கு 6 முதல் 13 தடவை பாசனம்- 8-ல் இருந்து 15 நாட்களுக்கு ஒரு முறை பருவ மழைக்குத் தக்கவாறு அளிக்க வேண்டும். தேவைக்கு அதிக அளவு பாசனம் அளித்ததில், வெறும் செடியின் வளர்ச்சியை மட்டுமே தூண்டுவதுடன், காய் பிடிப்பும் குறைகிறது. தைப் பட்டத்தில் கோவையில் மண்ணின் 25 சத ஈரத் தன்மைக்கு பாசனம் அளித்தாலே, அதிக விளைச்சலுக்குப் போதுமானது.

ஆளியார் நகரில் நடத்திய ஆராய்ச்சியில் நிலக்கடலையின் வளர்ச்சி பருவம் முதல் பூ பிடிக்கும் பருவம் வரை 12 நாட்களுக்கு ஒரு முறையும், பின் காய் பிடித்து, முதிரும் பருவம் வரை 6 நாட்களுக்கு ஒரு முறை பாசனம் அளித்ததில் எக்டேருக்கு 1,977 கிலோ காய்ந்த கடலை கிடைத்தது.

### துவரை

பொதுவாக பயிறு வகைகள் உப்பு மண்ணிலும், நீர் தேக்கம் உள்ள மண்ணிலும் நன்கு வளரா. கோ. 1 துவரைக்கு, மண்ணின் 40 சத ஈரத் தன்மைக்குப் பாசனம் அளித்தால் போதுமானது. இதற்கு மணற் பாங்கான செம்மண் பூமியில் 10 நாட்களுக்கு ஒரு முறை என்ற விகிதத்தில் 12 பாசனம் அளித்தல் வேண்டும்.

### தக்காளி

மணல் கலந்த செம்மண்ணில் ரபி பருவத்தில் மண்ணின் 60 சத ஈரத்தன்மையில் மொத்தம் 18 பாசனம் அளித்ததில் எக்டேருக்கு 10,000 கிலோ காய் கிடைத்தது.

### நீர்தேவை

பயிருக்குப் பொதுவாக நீர் பாசனம் செய்வதாலும், பருவ மழையாலும் நீர் கிடைக்கிறது. இந்த இரண்டும் சேர்ந்ததுதான் ஒரு பயிரின் நீர் தேவையைப் பூர்த்தி செய்கிறது. ஒரு பயிரின் நீர்தேவை. பயிரின் வயது, மண்ணின் தன்மை, தட்ப வெப்ப நிலை, பருவ மழை ஆகியவற்றை பொருத்துள்ளது.

# பவானி சாகரில் சாகுபடி செய்யும் பயிர்களுக்குத் தேவைப்படும் நீரின் அளவு

| பயிர்கள் | நீர்த் தேவை (மி. மீட்டர்) | குறிப்பு |
|---|---|---|
| 1. நெல்ஐ.ஆர்.20 (புஞ்சை) | 1020 | — |
| 2. சோளம் | 550 | நீர்ப் பாசனம் மணற்பாங்கான பூமியில் ஈரத் தன்மை 50 சதம் இருக்கும் அளவில் 5 அல்லது 6 நாட்களுக்கு ஒரு முறை அளித்தல். |
| 3. கேழ்வரகு | 435 | நீர்பாசனம் களிமண் பூமியில் ஈரத் தன்மை 60 சதம் என்ற அளவில் 10 நாட்களுக்கு ஒரு முறை அளித்தல். |
| 4. மக்காச்சோளம் | 432 | நீர்பாசனம் தைப்பட்டத்தில் களிமண் பூமியின் 75 சத ஈரத் தன்மையில் 9 அல்லது 10 நாட்களுக்கு ஒரு முறை அளித்தல். |
| 5. பருத்தி | 676 | நீர்பாசனம் களிமண் பூமியின் ஈரத் தன்மை 20 சதம் இருக்கும் அளவில் 14 அல்லது 15 நாட்களுக்கு ஒரு முறை அளித்தல். |
| 6. நிலக்கடலை | 575 | நீர்பாசனம் மணற்பாங்கான பூமியின் ஈரத்தன்மை 25 சதம் என்ற அளவில் 9 அல்லது 10 நாட்களுக்கு ஒரு முறை அளித்தல். |
| 7. சூரியகாந்தி | 407 | நீர்பாசனம் களிமண் பூமியின் ஈரத் தன்மை 50 சதம் இருக்கும் நிலையில் 9 அல்லது 10 நாட்களுக்கு ஒரு முறை அளித்தல். |
| 8. கோ. 1 தக்காளி | 570 | நீர்பாசனம் மணற்பாங்கான பூமியின் ஈரத் தன்மை 50 சதம் என்ற அளவில் 5 அல்லது 6 நாட்களுக்கு ஒரு முறை அளித்தல். |
| 9. எச்.பி. 1, எச்.பி. 3 கம்பு | 254 | |

திறமையான நீர் நிருவாகம் செய்தால், அதிக மகசூலை குறைந்த அளவு நீர் பாய்ச்சியே பெறலாம்! சிறந்த முறையில் நீர் எடுத்துச் செல்லுதல், தகுந்த காலத்தில் நீர் பாய்ச்சுதல், நவீன நீர் தெளிப்பு முறைகளை மேற் கொள்ளல், சிறந்த மண்வள பாதுகாப்பு முறைகளுடன், காலத்திற்கு ஏற்பப்பயிர் சுழற்சி முறைகளைக் கையாண்டு நீர் உபயோகத்தை பெருக்குவதும், விஞ்ஞான முறைப்படி பயிரின் வளர்ச்சி நிலைக்கும் கால நிலைக்கும் ஏற்ப நீர் அளித்து-சிறந்த வழி முறைகளுடன் சாகுபடி மேற்கொண்டால் — மேலும் கூடுதல் நிலத்திற்கு நீர் பாய்ச்ச வாய்ப்பு ஏற்படுவதுடன் மகசூலையும் பெருக்க முடியும்.

— எ. பெ. மொரச்சன், பேராசிரியர்
அ. முகம்மது அலி,
ந. கஜபதி,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

## நிலக்கடலை சிவப்புக் கம்பளிப் புழுவைப் பூச்சி மருந்தின்றி ஒழித்திடப் புதிய முறை !

தமிழ்நாட்டில் மானாவாரிப் பயிராகப் பயிரிடப்படும் முக்கிய எண்ணெய் வித்துப் பயிரான நிலக்கடலையைத் தாக்கும் பூச்சிகளில் மிகவும் முக்கியமானது சிவப்புக் கம்பளிப் பூச்சியாகும். இரசாயனப் பூச்சிக் கொல்லி மருந்துகளால் தற்போது இப்பூச்சி கட்டுப்படுத்தப்படுகிறது. ஆனல் முழுமையாக இப்பூச்சிகளை ஒழிக்க முடிவதில்லை. 'வைரஸ்' போன்ற நோய்க்கிருமிகளை உபயோகித்து இப்பூச்சிகளை முழுமையாக ஒழிக்கும் முறை பற்றி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கண்டுபிடித்த முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

மனிதர்களுக்கு நோய் வருவது போல், பூச்சிகளுக்கும் பல்வேறு நோய்கள் வருகின்றன. அவற்றில் ஒருவித 'வைரஸ்' நோய் இந்த சிவப்பு கம்பளிப் பூழுவிற்கு வருகின்றது என்று மதுரை வேளாண்மைக் கல்லூரியில் செய்த ஆராய்ச்சியின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இந்த நச்சுரி கடலைப் பயிரின் மீது தெளிக்கப்பட்டு அதை உண்ணும் புழுவின் வயிற்றினுள் சென்று மிக விரைவில் உற்பத்தியாகி புழுவின் உடலில் உள்ள உறுப்புக்களின் திசுக்களை அழித்துக் கொன்றுவிடுகின்றன. இவ்வாறு தாக்கப்பட்ட புழுக்கள் செயல்இழந்து அழுகிச் சாகின்றன. அவற்றிலிருந்து பழுப்பு நிறம் கலந்த நீர் வெளிப்படுகின்றன. இந்நீர் முழுவதும் 'வைரஸ்' கிருமிகள் இருக்கின்றன.

மேற்கொண்டு இக்கிருமியைப் பரப்ப 'வைரஸ்' நோய் வாய்ப்பட்ட ஐந்து அல்லது பத்துப் புழுக்களைத் தண்ணீரில் கரைத்து ஒரு ஏக்கருக்கு அடிக்கலாம். இக்கிருமிகள் கலந்த கலவையைப் பயிரில் தெளிப்பதால் புழுக்கள் 2 அல்லது 3 நாட்களுக்குள் உணவு உட்கொள்ளும் தன்மையை இழந்து விடுகின்றன. அடுத்த 4 நாட்களில், அவை ஏராளமாகச் செத்து மடிகின்றன. பின்னர் செத்த புழுக்களிலிருந்து இந்த 'வைரஸ்' நோய் மறுபடியும் பரவுகின்றது.

VOLTAS

# தாராளமான சக்தி ஏராளமான விளைச்சல்

## வோட்டா

### எலெக்ட்ரிக் பம்ப்ஸெட்டின் தனிச்சிறப்பு

உங்கள் வயலுக்கென்றே விசேட முறையில் உருவாக்கப்பட்டது வோட்டா எலெக்ட்ரிக் பம்ப் ஸெட். உங்கள் நிலத்திற்கு வேண்டிய நீர்த் தேவைகளை அறிந்து இயங்குவது. வேண்டிய அளவு நீர் பெற வழி செய்கிறது. அதுவும் வேண்டியபொழுது, வேண்டிய இடத்தில். கடுமையான வேலைத்திறனுடன் நீண்ட கால உழைப்பைத்தரும் வகையில் உருவாக்கப்பட்டது. நம்பகமானது, உறுதியானது, திடமானது. முழுதும் மூடப்பட்ட ஃபேன் கூல்ட் மின்சார மோட்டார் ட்ரைவுடன் (TEFC) சேர்ந்து பெறக் கூடியது. வறண்ட நிலத்தையும் தொடர்ந்த நீர்ப்பாசனத்தின் மூலம் வளம்படுத்துகிறது.
நிமிடத்திற்கு 451 முதல் 3825 லிட்டர் நீர் இறைக்கும் திறன் கொண்டது. உபயோகத்திற்கு வெகு சிக்கனமானது.

**வோட்டா மோனோப்ளாக் பம்ப்ஸெட்களும் கிடைக்கின்றன**

வோல்டாஸ் மற்றும் நாடெங்குமுள்ள அவர்களுடைய விற்பனையாளர்கள் விற்பனைக்குப் பின் அளிக்கும் ஸர்விஸ் வசதி இணைந்தது.

ஏகபோக வினியோகஸ்தர்கள்:
**வோல்டாஸ் லிமிடெட்,**
அக்ரோ இண்டஸ்ட்ரியல் ப்ராடக்ட்ஸ் டிவிஷன், பம்பாய் 400 033.
கல்கத்தா . சென்னை . புது டில்லி . பெங்களூர் . லக்னோ . பாட்னா
அகமதாபாத் . செகந்தராபாத் . கொச்சி . போபால் . ஜெய்ப்பூர்
ஜெம்ஷெட்பூர்.



H.T.-VT. 8034 A

**வோல்டாஸ்—செழுமையான விளைச்சலைப் பெருமளவில் பெற உழவர்களுக்கு உதவுகிறது.**



## தோடர்களின் தொன்மைவகை

நீலகிரி மாவட்டத்தில் மலைவாசிகளில் இன்னும் மனதைக் கவர்பவர்களாகத் தோடர்கள் இருந்து வருகின்றனர். அவர்களுடைய இல்லங்கள் எளிமையானவைகளாக இருப்பினும் எழிலுடனும் மலையின் குளிரைத் தாங்கும் வலிவும் படைத்தவைகளாக இருப்பதைக் காணலாம்.

தோடர் பெண்கள் அழகுமிக்கவர்கள். அவர்கள் சிந்தும் நாணப் புன்னகையின் நளினம் அவர்கள் கரத்திலும் இருப்பதைக் காணலாம். துணிகளில் அவர்கள் செய்யும் பூவேலை அவர்களுக்கு மட்டுமே உரியது. கண்களுக்கும் கைகளுக்கும் சரியான வேலை கொடுக்கும் அந்த நுண்ணியகலை தனிமதிப்பு பெற்றிருக்கிறது. தோடர்கள் மட்டுமே செய்துவரும் அந்த கைவேலை இன்னும் வெளிநாட்டவர் அனைவரும் பொருள் கொடுத்து வாங்கிச் செல்லும் அளவிற்கு உயர்ந்திருப்பதை நாம் உணரலாம்.

## முன்னும் பின்னும்

நீலகிரி மாவட்டத்தில் கடலூரில் ஒரு தையற் பயிற்சி நிலையம் சமூகநலத் துறையால் இயங்கி வருகின்றது. இங்கு மற்றப் பெண்களுடன், பணியர் பெண்களும் சேர்ந்து பயிற்சி பெறுகின்றனர். கூந்தலை விரித்த வண்ணம் ஒரு துண்டு மட்டும் உடலை மறைத்து வாழும் ஆதிவாசியாக வருபவர், இங்கே வந்த ஒரு வருடத்தில் மற்ற பெண்களைப் போல கூந்தல் முடிந்து புடவை கட்டி நாகரிக மங்கையாகத் திரும்பிப் போகிறார்கள். கைவண்ணம் பயிலவந்த ஆதிவாசிப் பெண்கள் தங்கள் நாகரிக வாழ்விற்கேற்ப மாறிச் செல்லும் காட்சி இத்தொழில் நிலையத்திற்கு ஒரு நிறைவைக் கொடுக்கின்றது.




# ஒருங்கிணைந்த குழந்தைகள் உயர்வாழ்வு பெற......

**ம**ழைத்துளிக்கு நிறமில்லை. அது வீழ்ந்த நிலத்திற்கேற்பவே நிறமும் இயல்பும் பெறுகிறது. அதுபோலவே, மனிதனும் பிறக்கும்போது ; நல்லவனாகவோ கெட்டவனாகவோ பிறப்பதில்லை. சமுதாயத்தின் சூழல்-வளர்ப்பு இவற்றிற்கு ஏற்பத்தான் குழந்தையின் குண இயல்புகள் மாறுகின்றன-நிலை பெறுகின்றன. இதையுணர்ந்துதான், மேல் நாட்டினர் குழந்தை வளர்ப்பில் பெரிதும் ஈடுபாடும் கவனமும் கொள்கின்றனர். நம்மவர்களில் இத்துறையில் அக்கறை காட்டுவோர் மிகமிகக் குறைவு. இதற்கான வாய்ப்பும் வசதியும் பலருக்கில்லை என்பதையும் மறுப்பதற்கில்லை. இதனை உணர்ந்து, இத்துறையில் நல்லதொரு மாற்றங்காண-குழந்தைகள் வளர்ப்பில் பெற்றோர்க்கு உதவுவதன் மூலம் நல்லதொரு சமுதாய மாற்றத்தை-வளர்ச்சியைக் காணவே ஒருங்கிணைந்த குழந்தைகள் நல்வாழ்வுத் திட்டத்தினை (Integrated Child Welfare Project ) அரசு தொடங்கியுள்ளது.

இத்திட்டம் 1963-ல் ஒரு முன்னோடித் திட்டமாகத் தொடங்கப்பட்டது. நல்வாழ்வுத்துறை, கல்வித்துறை, போன்ற ஏனைய துறைகளின் பணிகளை ஒருங்கிணைப்பதன் மூலம் மகளிர்க்கும், குழந்தைகளுக்கும்பணி புரிவதற்கென்றே இத்திட்டம் தொடங்கப்பெற்றது. 0-16 வயது தொகுதியைச் சார்ந்த, குறிப்பாக 0-6 வயது தொகுதியைச் சார்ந்த சிறுவர்களுக்கான இத்திட்டத்தில் நல்வாழ்வு, கல்வி, ஊட்டச்சத்துணவு ஆகியவை முக்கிய அம்சங்களாகும்.

முன்னோடித் திட்டமாக அமைந்துள்ள இந்த ஒருங்கிணைந்த குழந்தைகள் நல்வாழ்வுத் திட்டம் தமிழ்நாட்டிலே செங்கை மாவட்டம் பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும்தான் செயல்பட்டு வருகின்றது. குழந்தைச் செல்வங்களின் நலனைப் பேணிக் காத்து, அந்தப் பிஞ்சு உள்ளங்களில் நல்லெண்ணங்களை வளர்த்து, அறிவு புகட்டி அவர்

களை வருங்காலத்தில் நாட்டின் தலைசிறந்த சிற்பிகளாக உருவாக்குவதற்கென்றே செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் கீழ் பூந்தமல்லி ஒன்றியத்தில் 50 பாலர் பள்ளிகளும், 10 சிறுர் பள்ளிகளும் (creche) சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன. பாலர் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 2,660 ஆகும்.

பாலர் பள்ளிகளில் 2 வயது முதல் 5 வயது வரையிலுள்ள குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்கென்றே இத்துறையில் முனைப்பாகப் பயிற்சிபெற்ற பால சேவிகாக்கள் ஒவ்வொரு பள்ளிக்கும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இப்பள்ளியிலுள்ள குழந்தைகளுக்குக் காய்கறிகள், பழங்கள், மரங்கள், மிருகங்கள், மனைவாழ் பிராணிகள் போன்றவைகளைப் பற்றிய விவரங்களை விளக்குகின்றனர். செயல் முறைப் பாடல், நீதிக்கதைகள் சொல்லுதல், விளையாட்டு போன்ற வகுப்புகளையும் நடத்துகின்றனர். இவைகள் அனைத்தும் பாடத்திட்ட முறைகள் மூலம் நடத்தப்படுகின்றன.

குழந்தைகள் சோர்வின்றிப் பயிலவும், படிப்பில் நாட்டங் கொள்ளவும் தகுந்த சத்துணவு தரப்பட வேண்டும். இதனையுணர்ந்துதான் இவர்களுக்கு மதிய உணவாக -12 மணி அளவில் கேழ்வரகுக்களி, காயிட்ட சாம்பார் சாதம், மிளகிட்ட வெண் பொங்கல், கடலையும் அரிசியும் கலந்த சாதம் போன்ற சத்துள்ள உணவுகள் மாறுபட்ட நாட்களில் தரப்படுகின்றன.

''உண்ட மயக்கம் தொண்டர்க்கும் உண்டு'' என்பார்கள். தொண்டர்களுக்கே இந்நிலையென்றால் குழந்தைகளைக் கேட்க வேண்டுமா? எனவேதான் மதிய உணவிற்குப் பின்னர் 1 மணி வரை துயில் கொள்ள வழிசெய்யப்படுகின்றனர். துயில்நீங்க எழுந்த பின்னர் ஆயாக்கள் அவர்களின் முகங்கழுவி, தலைவாரி, ஆடை திருத்தி விடுகின்றனர்.

2½ வயதுக்குற்பட்ட குழந்தைகளின் (creche) கண்காணிப்புக்கெனத் தனி ஆயாக்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆயாக்கள் இக்குழந்தைகளின் வளர்ச்சியில் தனிக்கவனமும், மிகுந்த அக்கறையும் காட்டி வருகின்றனர். பால், பொட்டுக்கடலைக் கஞ்சி போன்ற சத்துணவு வழங்கப்படுகின்றன. வளர்ச்சி முழுமை பெறுகின்ற அளவிற்கு இவர்கள் கவனிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மழலைகளின் உள்ளம் வளர்ச்சி பெற-ஊக்கம் மலர - மனம் உறுதியடைய உடல் வளர்ச்சியும் தேவைப்படுகிறது. உடல் வளர்ச்சி பெறுவதற்கு ஊட்டச் சத்துணவு எவ்வளவு தேவைப்படுகிறதோ அந்த அளவுக்கு மருத்துவ வசதியும் தேவைப்படுகிறது. நோயற்ற வாழ்வினை அமைத்துத் தர



'நல்வாழ்வு நிலையம்' ஒன்றும் செயல்பட்டுவருகிறது.

இந்த நல்வாழ்வு நிலையத்தில் பெண் மருத்துவர் ஒருவரும், மருத்துவப் பார்வையாளர்கள் இருவரும், மருத்துவ ஆய்வாளர்கள் இருவரும், மருத்துவ உதவியாளர்கள் இருவரும், ஆயாக்கள் இருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பூந்தமல்லி ஒன்றியத்திலுள்ள அனைத்துக் காப்பகக் குழந்தைகளுக்கும், இரண்டு மகப்பேறு நிலையத்திலுள்ளவர்களுக்கும் மருத்துவச் சிகிச்சைகள் அளித்து வருகின்றனர்.

அவ்வப்போது பாலர் பள்ளிக் குழந்தைகளின் உடல் நிலை மருத்துவ அலுவலரால் சோதனை செய்யப்படுகின்றன. உடனுக்குடன் சிகிச்சை அளிப்பதுடன் தடுப்பூசிகளும் போடப்படுகின்றன. இரும்புச் சத்துள்ள மாத்திரைகள், டானிக்குகள், முட்டை போன்றவைகளைக் குறிப்பிட்ட பாலர் பள்ளிக் குழந்தைகளுக்குத் தரப்படுகின்றன.

பாலூட்டும் தாய்மார்கள், கருவுற்ற தாய்மார்கள் போன்ரோரின் நலன் சிறப்பாகக் கவனிக்கப்படுகிறது. கருவுற்ற தாய்மார்களை இந்நிலைய மகப்பேறு மருத்துவமனையில் சேர்த்துக் கொண்டு எல்லாவிதமான மருத்துவ வசதிகளையும் அளிக்கிருர்கள். சத்துள்ள டானிக்குகள், மாத்திரைகள் போன்றவை இலவசமாக வழங்கப்படுகின்றன. கரு உருவாவதிலிருந்து குழந்தை வடிவம் பெற்று, அதன் 12 வயது வளர்ச்சி வரையில் செய்யப்பட வேண்டிய மருத்துவச் சிகிச்சைகள் அனைத்தையும் இந்நிலையம் ஏற்றுக் கொண்டு இருப்பது சிறப்பானதோர் அம்சமாகும்.

கிராமங்களுக்கு மருத்துவ ஆய்வாளர், பார்வையாளர், உதவியாளர் ஆகியோர் நேரில் சென்று பொதுமக்களைச் சந்தித்து, அவர்களின் உடல் நிலையைச் சோதனை செய்து மருத்துவச் சிகிச்சையளிக்கின்றனர். மருத்துவ ஆலோசனை, குடும்ப நலத்தின் தேவை, பொதுச் சுகாதாரத்தின் இன்றியமையாமை, தடுப்பூசிகள் அவசியம் ஆகியவைபற்றி எடுத்துக் கூறுகிருர்கள். அம்மைத் தடுப்பூசிகளும், பி.சி.ஜி. தடுப்பூசிகளும் இருகின்றனர். காலரா, காச நோய் போன்ற தொற்று நோயுள்ளவர்களை உடனடியாகச் சென்னை அரசினர் மருத்துவ மனைகளுக்கு அனுப்பி வைக்கின்றனர்.

குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சைகளையும் இந்நிலையத்தினர் மேற்கொண்டுள்ளனர். இத்திட்டத்தில் நிரந்தர முறைகள் மற்றும் இடைக்காலத் தடுப்பு முறைகள் கவனிக்கப்படுகின்றன.

இந்நிலையத்தினரால் நடத்தப்பெறுகின்ற சிகிச்சைகளுக்குரிய மாத்திரைகள், ஊசி மருந்துகள் போன்றவைகளைச் சமூகநலத்துறை வழங்குகிறது. இரும்புச் சத்து மற்றும் உயிர்சத்து மாத்திரைகள், டானிக்குகள், மற்றும் விலையுயர்ந்த மாத்திரைகளை மக்கள் நல்வாழ்வுத்துறையினர் வழங்குகின்றனர். குடும்பக் கட்டுப்பாடு சாதனங்களையும் இவர்கள் வழங்குகின்றனர்.

இத்தகு முறையில் பூந்தமல்லியில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் நல்வாழ்வு நிலையம், குழந்தைகள் நல்வாழ்வில் அக்கறையும் ஆர்வமும் காட்டுவதோடு, தாய்மார்களின் வளமான வாழ்வுக்கும் வழிகாட்டுகிறது.

—ஆயிரம்

# அயராது பணியாற்றும் ஆதம்பாக்கம் மகளிர் மன்றம்

"அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு" என்ற ஒரு காலமும் இருந்து வந்தது. ஆனால் இன்று அந்த நிலை அறவே நீங்கி அனைத்துத்துறைகளிலும் பெண்கள் ஆணுக்குச் சரி நிகராக விளங்குவதை நாம் காண்கின்றோம். இத்தகைய நிலையில் பெண்கள் தங்கள் வீட்டு நலனை மட்டும் கருதாமல் ஓரளவு நாட்டு நலனையும் சிந்தித்துச் செயல்பட்டால் அவர்களால் நாட்டையும் வளமாக்க முடியும்.

தனிப்பட்ட ஒரு பெண்ணால் இந்தக் காரியத்தைச் செய்ய முடியுமா என்றால் அது இயலாத ஒன்றாகும். எனவே நாட்டுப் பணிகளைச் சிறந்த முறையில் செயல்படுத்திட, பல பெண்கள் ஒன்று சேர்ந்து "மகளிர் மன்றம்" போன்ற நிறுவனங்களைத் தோற்றுவித்து அதன் மூலம் நாட்டுமக்களுக்கு, தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட, வசதியற்ற மக்களுக்குப் பல நல்ல காரியங்களைச் செய்திட முன்வர வேண்டும். இத்தகைய வழிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி நல்ல பணிகளை நாட்டு மக்களுக்குச் சீரிய முறையில் செய்து வருகின்றனர் ஆதம்பாக்கம் 'கஸ்தூரிபாய் மகளிர் மன்றத்'தினர்.

செங்கற்பட்டு மாவட்டம் பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஆதம்பாக்கத்தில் அமைந்துள்ள இந்த மகளிர் மன்றம் 11-5-1965-ல் துவக்கப் பெற்றது. தொடக்கத்தில் தையல் பயிற்சி, இசைப் பயிற்சி போன்ற வகுப்புகளை மட்டுமே இம்மன்றம் நடத்தி வந்தது. ஆனால் தற்போது ஏராளமான பணிகளைச் செய்து வருகிறது.



## அட்டை சொல்லும் கட்டுரை

இப்பகுதி வாழ் மகளிரின் விருப்பத்திற்கிணங்கவும், அவர்கள் பொது அறிவைப் பெறுவதற்கு ஏற்ற வகையிலும் நூல் நிலையங்கள் நடத்தப் பெறுகின்றன. முதலில் ஒரு இடத்தில்தான் ஆரம்பிக்கப் பெற்றது. தற்பொழுது மூன்று இடங்களில் ஏற்படுத்தப்பெற்று நல்ல முறையில் இயங்கி வருகின்றன. இந்த நூல்நிலையங்களில் நல்ல புத்தகங்கள், தின, வார, மாத நூல்களும் இடம் பெற்றுள்ளன.

இப்பகுதியிலுள்ளவசதியற்ற ஏழை எளிய குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளித்திடும் வகையில் இம்மன்றத்தினர் 'பாலர்' பள்ளி ஒன்றினை நடத்தி குழந்தைகளுக்குக் கல்வி கற்றுத் தருகின்றனர். பெண்களுக்குச் சமையல் கலை பற்றிய வகுப்பும் நடத்துகின்றனர்.

போதிய அளவில் மருத்துவ வசதி கிட்டாமல் துன்புறும் மக்களுக்கு மருத்துவ வசதியும் செய்து தருகின்றனர். நல்லெண்ணம் படைத்தோர் பலரால் உருவாக்கித் தரப்பட்ட கட்டடம் ஒன்றில் 'இலவச மருத்துவ மனை' ஒன்று 1967 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்றது. காலையில் பெண் மருத்துவர் ஒருவராலும், மாலையில் ஆண் மருத்துவர் ஒருவராலும் மருத்துவச் சிகிச்சைகள் அளிக்கப்பெற்று வருகின்றன.

நாள்தோறும் நூற்றுக்கணக்கானவர்கள் மருத்துவ வசதி பெற்றுச் செல்லும் காட்சியை எல்லாரும் காணலாம். இவர்களுக்குத் தரப்படுகின்ற மருந்துகள் இலவசமாக இம்மன்றத்தினரால் வழங்கப்படுகின்றன. நாடகங்கள், திரைப் படங்கள், நடன நிகழ்ச்சி போன்ற கலைநிகழ்ச்சிகள் நடத்தி அதில் கிடைக்கின்ற தொகையினைக் கொண்டு இது போன்ற பணிகள் நடத்தப்படுகின்றன.

இன்று தமிழ்நாடு அரசு நுகர்வோர் வாணிபக் கழகத்தின் மூலம் ஏராளமான நியாய விலைக்கடைகளை ஏற்படுத்திப் பொதுமக்களுக்கு அரிசிபோன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்கி வருவதை நாம் அனைவரும் அறிவோம். இவ்வகையில் இம்மன்றத்தினரும் கூட்டுறவுப் பண்டகசாலை ஒன்றினை 29-10-1973-ல் தொடங்கி அதன்மூலம், அப்பகுதியில் உள்ள சுமார் 558 குடும்பத்தினர்களுக்கு அரிசி, ரவை, கோதுமை, சர்க்கரை, மைதா போன்ற உணவுப் பொருட்களை வழங்கி வருகின்றனர்.

இக்கூட்டுறவுச் சங்கத்தில் போதிய அளவு மூலதனம் இல்



வருங்கால வாழ்வு வளமுள்ளதாக அமைந்திட வேண்டுமென்றால் இன்றையச் சேமிப்பின் அவசியம் தேவையானதொன்றாக விளங்குகிறதல்லவா? எனவேதான் சேமிப்பின் இன்றியமையாமையைக் குழந்தைகளுக்கு வலியுறுத்துகின்ற வகையில் 'சிறுசேமிப்புத் திட்டம்' ஒன்றினையும் இவர்கள் அண்மையில் துவக்கியுள்ளனர்.

இதுபோன்ற பணிகளோடு மேலும் பல சமூகப் பணிகளிலும், பொதுப்பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். சில மாதங்களுக்கு முன்னர் இப்பகுதியில் சில குடிசைகள் தீக்கிரையாயின. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு உடனடி நிவாரணம் அளித்தது. அரசுடன் ஒத்துழைக்கும் விதத்தில் இம்மன்றத்தினரும் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு உடுத்தத் துணிகளும், சமையல் செய்திட அரிசியும் வழங்கிப் பாராட்டுதல்கள் பல பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதுபோன்ற நல்ல பணிகளைச் செய்துவரும் இம்மன்றத்தின் செயலாளர், அமைப்பாளர், மன்ற உறுப்பினர்கள் ஆகியோரைப் பாராட்டத்தான் வேண்டும். இத்தகைய பணிகளைத் தொடர்ந்து செய்திட அவர்களுக்கு அரசு ஆக்கமும் ஊக்கமும் அளித்திடத் தயாராக உள்ளது என்றால் அது மிகையாகாது.

—ஆயிரம்.

பட்டியல் தொகை போடப்படுகிறது

லாததால், சங்கத்தின் இயக்குநர்கள் தங்களுடைய நிதியினைக் கொண்டு சரக்குகளைக் கொள்முதல் செய்து, அவைகளை அங்கத்தினர்களுக்கும், பொதுமக்களுக்கும் விற்பனை செய்கின்றனர். இப்பொழுது இது மகளிர் மன்றக் கட்டடத்தில் வாடகை முறையில் நடத்தப் பெற்று வருகிறது. இதற்கெனச் சொந்தக் கட்டடம் ஒன்று கட்டுவதற்கென அண்மையில் வேளச்சேரியில் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திரு. சி.வி.எம். அண்ணாமலை அவர்களால் அடிக்கல் நாட்டப் பெற்றது.



மருந்து தரும் பணி

இந்திய நாட்டில், மகளிர் மன்றத்தைத் துவக்கிய இந்தியப் பெண்மணி, சரோஜ் நளினி என்பவர். இவர் வங்கத்தில் மாவட்ட ஆட்சித் தலைவராகவும், நீதிபதியாகவும் பணியாற்றிய ஜி. எஸ். தத் என்பவரின் மனைவி.



தமிழகத்தில் 1947-ஆம் ஆண்டில் மகளிர் மன்றம் துவக்கப்பெற்றது. இதனைத் துவக்கியவர் திருமதி பாரிஜாதம் நாயுடு ஆவர்கள்.

குமார்..

# நெல் மகசூலைப் பெருக்கும் வழிகள்!



டாக்டர். எஸ். ஒய். பத்மனுபன்

**கேள்வி:** கோதுமையில் மட்டும் பசுமைப் புரட்சி ஏற்பட்டுள்ளது. நெற்பயிரைப் பொறுத்தவரையில் பசுமைப் புரட்சி ஏற்படவில்லை என்று பொதுவாகக் கருதப்படுகிறது இது உண்மைதானு? இதற்குக் காரணம் யாவை?

**பதில்:** நெற்பயிரைப் பொறுத்தவரையில் இந்தியாவின் சில பாகங்களில், பசுமைப் புரட்சி ஏற்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களில் அது ஏற்பட்டு வருகிறது. உதாரணமாக, பஞ்சாப், தமிழ்நாடு ஆகியவற்றில் பசுமைப்புரட்சி முழு வேகத்தில் ஏற்பட்டு வருகிறது. இவ்விரு மாநிலங்களிலும் எக்டேருக்கு, சராசரியாக 2,000 கிலோ கிராமுக்கும் அதிகமாக அரிசி கிடைக்கிறது. அதே நேரம் இந்திய மட்டத்தில் எக்டேருக்குச் சராசரியாக சுமார் 1,000 கிலோ கிராம் அரிசிதான் கிடைக்கிறது.

ஒரிசா உட்பட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் பருவ காலம் அல்லாத போதுகூட, பாசனவசதியைப் பயன்படுத்தி, நெற்பயிர் விளைவிக்கப்படுவதை நாம் காண்கிறோம். இத்தகைய சமயங்களில் சராசரியாக எக்டேருக்கு 3 முதல் 5 டன் அரிசி கிடைக்கிறது. மேற்கு வங்காளம் தவிர கிழக்கு உத்தரப் பிரதேசம், பீகார், அசாம், ஒரிசா, மத்தியப் பிரதேசம் போன்ற பருவமழையை நம்பியிருக்கும் மாநிலங்களில், எக்டேருக்கான சராசரி அரிசி உற்பத்தி அளவு, தேசிய சராசரி அரிசி உற்பத்தி அளவை விடக்குறைவாகவே உள்ளது. மேற்கு வங்காளத்தில் மட்டும் எக்டேருக்கு சுமார் 1,200 கிலோ கிராம் அரிசி கிடைக்கிறது.

(கட்டாக்கிலுள்ள மத்திய நெற்பயிர் ஆராய்ச்சிக் கழகத்தின் இயக்குநர் டாக்டர் எஸ். ஒய். பத்மனுபன் அவர்கள் அளித்த பேட்டிக் கட்டுரை இது. நெற்பயிர் சாகுபடி சம்பந்தமான பல்வேறு நுட்பங்கள் குறித்துக்கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளித்துள்ளார். மேலும் அவர், பருவநிலை மாற்றம், பல்வேறு பயிர்ப் பூச்சிகள், நோய்கள், இயந்திரங்களைப் பயன்படுத்திசாகுபடி செய்வது, ஆகியவற்றிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் பதில் அளித்துள்ளார்.)



பசுமைப்புரட்சியில் ஏற்றத் தாழ்வு உள்ளதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. மேலும் மற்ற மாநிலங்களைவிடச் சில மாநிலங்களில் தீவிரத் தொழில் நுட்ப மாற்றம் விரைவில் ஏற்பட்டுவிட்டது. பருவநிலை மாற்றம் காரணமாகவும், பசுமைப்புரட்சி வேகத்தில் மந்தம் ஏற்பட்டுள்ளது. போதுமான அளவு சூரிய வெளிச்சம் இருக்கும்போது, உயர் விளைச்சல் தரக்கூடிய குட்டை ரகங்கள் உயர்ந்தபட்ச அளவுக்கு மகசூல் அளிக்கின்றன. இத்தகைய சூழ்நிலைகள் பருவ காலத்தில் கிடைப்பதில்லை.

இரண்டாவதாக, சுமார் 90 முதல் 100 செ.மீ. உயரம் கொண்ட நடுத்தரக்குட்டை ரகங்கள் பயிரிடப்படுகின்றன. பருவமழைக்காலத்தின்போது, நெல் பயிரிடப்படும் மொத்த நிலப்பரப்பில் சுமார் 60 சதவிகித நிலப்பரப்பில், 90 செ. மீட்டருக்கும் அதிகமான அளவுக்குநீர் நிற்பதால், இந்த நடுத்தரக் குட்டை ரகங்களை பயிர் செய்வது சிறிது சங்கடமாக இருக்கிறது.

மூன்ருவதாக, இப்புதிய நெல்ரகங்களைப் பூச்சிகளி

லிருந்து நல்ல முறையில் பாதுகாக்க முடிவதில்லை. இது ஒரு முக்கியமான காரணமாகும். நம் நாட்டில் பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கை தகுந்த அளவுக்கு வளர்ச்சி அடையாத காரணத்தால், அடிக்கடி பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டிய பயிரினங்களை விளைவிக்கச் சாகுபடியாளர்கள் அக்கறை காட்டவில்லை. ஆகையால், இந்தியாவில் ஒரு சில மாநிலங்களில் மட்டும்தான் நெற்பயிரைப் பொறுத்தவரையில் பசுமைப் புரட்சி ஏற்பட்டுள்ளது என்றும், மற்ற மாநிலங்களில் மெதுவாகத்தான் இப்புரட்சி ஏற்பட்டு வருகிறது என்றும் நாம் கூறலாம். 1965-ஆம் ஆண்டுக்கு முன் இருந்த நிலைமையையும், புதிய நெற்பயிரினங்களை 1966-ஆம் ஆண்டு முதல் பயிர் செய்ய ஆரம்பிக்கப்பட்ட பின்பு ஏற்பட்ட நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இது விளங்கும்.

## உயர்விளைச்சல் தரக்கூடிய நெல்ரகங்கள்

**கேள்வி:** நம் நாட்டில் உயர் விளைச்சல் தரக்கூடிய பல நெற்பயிர் இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால், இவற்றின் மூலம் நெல் விளைச்சல் அதிகமாகியுள்ளதா ?

**பதில் :** உயர் விளைச்சல் ரகங்கள் மூலம், நம் நாட்டில் நெல் விளைச்சல் உயர்ந்துள்ளது. உயர்விளைச்சல் நெல் ரகங்களைப் பயிரிடுவதற்குமுன், அதாவது 1965-66-ஆம் ஆண்டின் உற்பத்தியும், தேசிய சராசரி அரிசி உற்பத்தியும் முறையே 3 கோடியே 20 இலட்சம் டன்னுகவும், எக்டேருக்கு 863 கிலோ கிராமாகவும் இருந்தன. இதற்குப் பிறகு நெல் உற்பத்திக்கான நிலப் பரப்பு கணிசமான அளவுக்கு அதிகரிக்கவில்லை. 1971-72-ஆம் ஆண்டில் மொத்த அரிசி உற்பத்தி 4 கோடியே 20 இலட்சம் டன்னுகவும், தேசிய சராசரி உற்பத்தி எக்டேருக்கு 1,151 கிலோ கிராமாகவும் அதிகரித்தன.



**கேள்வி:** பருவக்கால மாற்றங்களால் நெற்பயிர் சாகுபடி பாதிக்கப்படுவதைத் தடுக்க முடியுமா?

**பதில்:** நம் நாட்டில் சுமார் 3 கோடியே 74 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் நெற்பயிர் விளைவிக்கப்படுகிறது. இதில் 34 சதவிகித நிலப்பரப்புக்குத்தான் பாசன வசதி கிடைக்கிறது. தற்பொழுது உள்ள எல்லாப் பாசனவசதித்திட்டங்களும் பருவமழையைத்தான் நம்பியிருக்கின்றன. ஏனெனில் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள நீர்த்தேக்கங்கள் யாவும் பருவ மழையைத்தான் சார்ந்துள்ளன. நெற் பயிர் சாகுபடிக்கான நிலப்பரப்பு யாவற்றையும் பாசன வசதி திட்டத்தின்கீழ் கொண்டு வந்தால், மாறிவரும் பருவச்சூழ்நிலைகளினுல் அரிசி உற்பத்தி பாதிக்கப்படாது. இது ஒரு நீண்டகால குறிக்கோளாகும்: ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இந்தக் குறிக்கோளை அடைய முடியாது.

பருவநிலையில் ஏற்படும் மாற்றங்களை நாம் வானியல் ஆராய்ச்சிக்கான புள்ளி விவரங்களைக் கொண்டு திட்டவட்டமாக எடுத்துக் கூறலாம். பருவநிலையில் ஏற்படக்கூடிய மாற்றங்களை முன்னதாகவே தெரிந்து வைத்துக் கொண்டால், அவற்றிற்கு ஏற்ப பயிர்ச் சாகுபடி திட்டத்தை வகுக்கலாம். உதாரணமாக, பொதுவாக நெல் விளைவிக்கப்படும் பகுதிகளில்-அதாவது, 700 முதல் 1,100 மில்லி மீட்டர் மழையளவு கொண்ட பகுதிகளில் பருவகாலத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்களைக் கண்டறிவதற்காக புனுவிலுள்ள வேளாண்மை வானியல் ஆராய்ச்சித் துறை ஆய்வு நடவடிக்கை ஒன்றை, -எனது யோசனையின் பேரில்- நடத்தியது. பல ஆண்டுகளாக மழை பெய்வதில் 7-லிருந்து 9 நாட்கள் வரை இடைவெளி இருந்தது என்பதும், சில ஆண்டுகளில் மட்டும் இந்த இடைவெளி 9-லிருந்து 12 நாட்கள் வரை இருந்தது என்பதும் இந்த ஆராய்ச்சியின் மூலம் தெரிய வந்தன. பருவநிலையில் ஏற்படும் இந்தக் குறிப்பிட்ட மாறுதலைக் கொண்டு, நெல், சாகுபடியாளர்கள், மழைக்காலத்தில் 10-லிருந்து 12 நாட்கள் வரை மழை பெய்யாமல் இருக்கக்கூடிய சூழ்நிலைக்கு ஏற்பப் பயிரினங்களை மேம்பாடு செய்து சாகுபடி செய்யலாம். இந்தப் பருவநிலைக்கு ஏற்ற, மேட்டுப் பகுதிக்கான, சில குறைந்த கால பயிரினங்கள் தற்போது தயாராக உள்ளன.

பருவமழை எப்பொழுது பெய்யும் என்பது பற்றி நாம் திட்டவட்டமாகச்சொல்லமுடியாது. கிழக்கு இந்தியப் பகுதியில், மே மாதத்தின் கடைசி வாரத்திலிருந்து ஜூன் மாதத்தின் கடைசி வாரத்துக்குள் எந்த நாட்களிலும் பருவமழை பெய்ய ஆரம்பிக்கலாம். ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதத்தில் பருவமழை அதிகரித்து செப்டம்பரில் குறைந்து விடுகிறது. ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் சிறு தூறல் இருக்கிறது. இந்தப் பருவநிலையை தெரிந்து கொண்டுள்ள நாம், அதற்கு ஏற்ற வண்ணம் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பருவமழைத் துவங்க ஆரம்பித்த பின், நேரடியாக விதை தூவிவிடவேண்டும். அப்போதுதான் அவை முளைவிட வாய்ப்பு ஏற்படும்.

தற்போது நம் நாட்டில், 95 முதல் 120 நாட்களுக்குள் சாகுபடி செய்யக்கூடிய உயர் விளைச்சல் தரக்கூடிய பல நெல் ரகங்கள் உள்ளன. பருவமழை துவங்கவிருப்பதை அடிப்படையாகக் கொண்டு, எந்த மண்டலத்திலும் மிகக் குறைந்தகால, அல்லது குறைந்த காலப்பயிர்களுக்கான நெல் விதைகளைத் தூவலாம். ஒவ்வொரு பகுதிக்கும், ஒவ்வொரு நெல் பயிரினத்துக்கும் ஏற்ற விதத்தில் நாம் திட்டமிட்டு நடவடிக்கை மேற்கொண்டால், பருவநிலையில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து பயிர்களைப் பாதுகாக்கலாம்.

கலப்புப் பயிர் சாகுபடி முறையை நாம் கடைப்பிடிக்கலாம். குறிப்பிட்ட பகுதியில் பருவநிலையில் பொதுவாக ஏற்படக்கூடிய மாற்றங்களுக்கு ஏற்ப, குறிப்பாக 700-1,100 மில்லி மீட்டர் மழையளவுள்ள பகுதிகளில் நெல் பயிருடன் சில பயிர்களைப் பயிரிடலாம். கலப்புப் பயிர்முறை மூலம் மழையளவு குறைவாக இருக்கும்போது மற்ற பயிர்களையும், மழையளவு சாதாரணமாக இருக்கும்போது நெல் பயிரையும் பயிர் செய்யலாம். நன்ருக திட்டமிடுவது, இப்பகுதிகளில் கிடைக்கக்கூடிய விதைகள், தகுந்த விதைகள் சேகரிப்பு, நிலத்தைப் பற்றிய

ஆராய்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில்தான் இந்தக் கலப்பு பயிர்முறையை மேற்கொள்ள முடியும்.

பருவமழை தாமதமாக பெய்ய ஆரம்பிப்பதன் காரணமாக, அரிசி உற்பத்தி குறைகிறது. மேலும், விதை தூவுவது, நாற்று நடுவது ஆகியவை தாமதமாக நடைபெற்றால், அரிசி உற்பத்தி குறைந்துவிடும். வேளாண்மை வானிலை, பயிர்நோய்கள், பயிர்ப்பூச்சிகள் ஆகியவற்றின் காரணமாகவும், அரிசி உற்பத்தி குறைந்துவிடுகிறது. பருவமழையை நம்பியிருக்கும் பகுதிகளில் குறிப்பிட்ட காலத்தில் நாற்று நடப்பட்டால், பருவமழையினால், பயிர்கள் சேதமாவதைப் பாதியளவுக்குத் தடுத்துவிடலாம்!

இந்தியாவின் கிழக்குப் பகுதியில், சரியான நேரத்தில் நிலத்தைப் பண்படுத்தித் தயாராக வைத்துக் கொள்வதற்குத் தேவைப்படும் சாதனங்கள் சரிவரக் கிடைப்பதில்லை! இதுவும் விளைச்சல் குறைவுக்கு காரணமாகிறது. பருவமழை துவங்கிய நாளிலிருந்து, நாற்று நடுவதற்கான உகந்த நாட்களுக்குள், நாற்று நடுவதற்காக நிலத்தைப் பண்படுத்துவதற்கு தற்போது கிடைக்கும் காளை மாடுகளின் திறன் போதாது. குறிப்பாக, பருவமழை, சிறிது கால தாமதமாகத் துவங்கினால், நிலத்தைப் பண்படுத்த காளை மாடுகளை மட்டும் பயன்படுத்தினால் போதுமானதாக இருப்பதில்லை. உயர் விளைச்சல் நெல் ரகங்கள் மூலம் கூட, உற்பத்தி குறைவாக இருப்பதற்கு இது முக்கியக் காரணமாகும். இரும்புக் கலப்பை, அகலமான கொழுத்தட்டு போன்ற நவீன சாதனங்களை பயன்படுத்துவதன் மூலம், நாம் கணிசமான அளவுக்கு நெல் உற்பத்தியில் முன்னேற்றம் காணலாம்.

பருவக்காலக் கடைசியில் அதாவது அக்டோபர், நவம்பர் மாதங்களில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, 130-135 நாட்களில் அறுவடை செய்யக்கூடிய நடுத்தர நெல் ரகங்களைப் பயிர் செய்யலாம். அரிசி உற்பத்தியைப் பொறுத்த வரையில் பருவநிலையில் ஏற்படக்கூடிய மாற்றங்களைத் தவிர்ப்பதற்கு இவையாவும் முக்கியமான வழிகளாகும் என்று நான் கருதுகிறேன்.

**கேள்வி :** உயர் விளைச்சல் தரக்கூடிய நெல் ரகங்களைப் பயிரிட்டுச் சாகுபடி செய்ய நவீன சாதனங்களை உபயோகித்து அதிகம் செலவிட வேண்டும் என்ற பொதுவான கருத்து நிலவி வருகிறது. ஆகையால், சாதாரணமான ஒரு ஏழை விவசாயி இந்த நடவடிக்கையில் ஈடுபட முடியாது. இதை நீங்கள் ஒத்துக் கொள்வீர்களா ? இது சம்பந்தமாக உங்கள் கருத்துக்கள் என்ன ?

**பதில் :** நவீன தொழில்நுட்பம், நிருவாக முறை, பண வசதி ஆகியவற்றின் மூலம் தான் உயர்விளைச்சல் ரகங்களைச் சாகுபடி செய்ய முடியும் என்பதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். நல்ல முறையில் நிருவாகித்தால், பரம்பரையான பழைய நெல் ரகங்களைக் கொண்டுகூட, தற்போதைய உற்பத்தி அளவை அதிகரிக்க முடியும். தொழில்நுட்ப மாற்றம் இரண்டு வகையானது. அவை:

1. தனிப்பட்ட பயிர் சாகுபடியாளர்கள் தாங்களாகவே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக, புதிய பயிரினங்கள் சாகுபடி செய்வதைப் பற்றி அவர்களாகவே தீர்மானிக்க வேண்டும். சாகுபடியாளர்களுக்கு நல்ல விளைச்சல் தரக்கூடிய விதையைக் கொண்டுபோய் கொடுத்தால், அவர் அதை உடனடியாக ஏற்றுக் கொள்வார். இவ்வாறு மாற்றத்தைக் கொண்டு வரலாம்.

2. சமுதாயத்திலுள்ளவர்கள் எல்லாருடைய தீர்மானத்தின் அடிப்படையில், நீர் நிருவாகம், பயிர்ப்பூச்சி, நோய்த் தடுப்பு ஆகியவை மேற் கொள்ளப்பட வேண்டும். இது மற்றொரு வகையான தொழில்நுட்ப மாற்றமாகும். இதற்கு வரவேற்பு மிகக் குறைவு என்பது கண்டுபிடிக்கப்பட்டது. சாகுபடியாளர்களுக்கு இது பற்றி தெளிவாக எடுத்துக்கூறினால், இத்தகைய இன்னல்களைப் போக்கி விடலாம்.

நிலத்தைப் பண்படுத்துவது, சரியான சமயத்தில் விதைத் தூவுவது, நாற்று நடுவது, நீர் நிருவாகம், சரியான சமயத்தில் உரத்தை தகுந்த அளவுக்கு நிலத்தில் இடுவது ஆகியவை பற்றி சாகுபடியாளர்களுக்கு விளக்கப் பயிற்சி அளிப்பது நல்லதாகும். அவர்கள் இவற்றை ஏற்றுக் கொள்ளும் திறன் உடையவர்கள்தான். பல்வேறு இன்னல்கள் காரணமாக, புதிய தொழில்நுட்பமாகிய பயிர்ப் பாதுகாப்பு இன்னமும் சரிவரப் புரிந்து கொள்ளப்படவில்லை. உழவர்களுக்குப் பயிற்சி அளிப்பது, விளம்பரம் செய்வது ஆகியவற்றின் மூலம் பயிர்ப் பாதுகாப்பு முறையை ஒருங்கிணைக்கலாம்.

தொழில்நுட்ப மாற்றம், நிருவாகம் ஆகிய இரண்டு அம்சங்களுக்கும் அதிக நிதி தேவையில்லை. இருந்தபோதிலும், உரமிடுவது, பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்வது ஆகியவற்றில் இவ்விரு அம்சங்களையும் கடைப்பிடிப்பதற்குப் பணம் அவசியம் தேவைப்படும். கூட்டுறவு சங்கங்கள், விவசாயச் சேவைச் சங்கங்கள், மிகச்சிறு நிலக்கிழார் மேம்பாட்டு நிறுவனம், தலைமைப் பாங்குகள் போன்றவை இவ்வகையில் விவசாயிகளுக்குக் கடனுதவி அளிக்கின்றன. விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பது, சரியான நேரத்தில் விவசாயத் தொழிலுக்கான அடிப்படைப் பொருட்களை நிலத்திலிடுவது, கடனுதவி வழங்குவது ஆகியவற்றின் மூலம், உயர் விளைச்சல் தரக்கூடிய நெல் ரகங்களைப் பயிர் செய்யும் திட்டத்தைச் சிறந்த முறையில் செயல்படுத்தலாம். பரம்பரையாக உபயோகித்து வரும் நெல் ரகங்களைப் பயன்படுத்தி, சாகுபடி செய்தாலும் நவீன தொழில் நுட்ப உத்திகளைக் கடைப் பிடித்தாலும், உற்பத்தி கட்டாயம் அதிகரிக்கும்.

## பயிர்ப்பூச்சிகளும் நோய்களும்.

**கேள்வி :** பழைய நெல் ரகங்களோடு ஒப்பிடுகையில், உயர் விளைச்சல் நெல் ரகங்கள், பூச்சிகளால் அதிகமாக அரிக்கப்படுகின்றன என்றும், நோய்களால் அவை பாதிக்கப்படுகின்றன என்றும் கூறப்படுகிறது. இக்கருத்து சரிதானா? சரியென்றால் அதற்குத் தீர்வு காண்பது எப்படி?



**பதில் :** சீனாவிலிருந்து கொண்டு வரப்பட்ட கலப்பின ரகத்தின் (டீயோ-கீ-வூ-கீன்) மூலம் உருவாக்கப்பட்ட பல உயர் விளைச்சல் ரகங்களைக் கொண்டு அதிக அளவுக்கு மகசூல் பெறலாம். அவற்றின் இத்திறனால், அவை நோய்களினாலும், பூச்சிகளினாலும், எளிதில் பாதிக்கப்பட வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன போலும்! இப்புதிய ரகங்களைப் பயிர் செய்ய ஆரம்பித்த பிறகே, இதுவரை தெரியாமல் இருந்த பயிர் நோய்களும், பயிர்ப் பூச்சிகளும் தற்போது பயிர்களை வெகுவாக அழித்து வருவதால், அவற்றை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் பெருமளவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உரங்கள் போன்ற விவசாயத்துக்குத் தேவையான அடிப்படைப் பொருட்களை நிலத்தில் இடுவதைப் பொறுத்தவரையில் நவீன தொழில் நுட்பம் கடைப்பிடிக்கப்படுவதாலும் பல்வேறு நெல் ரகங்கள் பூச்சிகளினால் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் ஏராளமாக இருப்பதாலும், பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

1. பூச்சிக்கொல்லி மருந்துகள் உபயோகித்து பயிர்களை பாதுகாக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப் பட்டுள்ளது. பூச்சிக் கொல்லி மருந்துகள் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதில் தற்போது அக்கறை காட்டப்பட்டு வருகிறது. எந்தெந்தக் காலங்களில் பயிர்கள், பூச்சிகளினால் பாதிக்கப்படும் என்பதை முன்னதாகவே அறிந்து, அச்சமயங்களில் மட்டும் பூச்சிக் கொல்லி மருந்துகளை இடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. பல்வேறு பயிர் நோய்கள் பற்றி முன்னதாகவே எச்சரிக்கை அளிக்கப்படுகிறது. இதனால், நோய்கள் பரவுவதற்கு முன் பயிர் சாகுபடியாளர்களால், தகுந்த நடவடிக்கை ஆரம்பக்கட்ட காலத்திலேயே மேற்கொள்ளப்படுகிறது. பயிர்களுக்கு நோய் ஏற்படுவதை முன்னதாகவே அறிந்து கொண்டால், துவக்கத்திலேயே அவற்றை ஒழித்து விடலாம்.

2. இரசாயன மருந்துகள் பயன்படுத்துவதோடு, ஒருங்கிணைந்த புதிய பயிர்நோய் தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளத்திட்டமிடப்பட்டுள்ளது. புல்வகைகள், மற்ற களைகள் மூலம் பயிர்நோய்கள் ஏற்படுவதால், ஆரம்பக் கட்டத்திலேயே இத்தகைய களைப் பொருட்களிலிருந்து, பயிர் நோய்களைத் தடுத்து விடலாம். ஒட்டுண்ணி, சாருண்ணிகளை வளர்ப்பது, புழுபூச்சிகளை எதிர்க்கக்கூடிய திறன் வாய்ந்த ரகங்களைப் பயிர் செய்வது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த பலமுனை நோய்த்தடுப்பு நடவடிக்கை, நல்ல பலனை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. இந்த ஒருங்கிணைந்த பயிர்நோய்த் தடுப்பு நடவடிக்கை திட்டத்தில் ஒரு அம்சமாகிய நோய்த்தடுப்பு வீரியம் பற்றி அண்மைக் காலத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அரிசியிலுள்ள நுண் அணுப் பொருட்கள் சம்பந்தமாக ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு, அவற்றில் எவை நோய்கள் தடுக்கும் திறன் கொண்டவை என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உயர் விளைச்சல் ரகங்களைக் கொண்டு பல கலப்பு ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றில் நோய்த்தடுப்பு வீரியம், பூச்சி தடுப்பு வீரியம் கொண்ட ரகங்கள் தெரிந்தெடுக்கப்பட்டன. ஒரு குறிப்பிட்ட மண்டலத்தில் குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட நோய்களைத் தடுக்கக்கூடிய வீரியம் வாய்ந்த சில ரகங்களும் இவற்றில் உள்ளன. பயிர்நோய் அதிகமாக உள்ள பகுதிகளில் இத்தகைய ரகங்களைப் பயிர்செய்வதன் மூலம், பயிர்களுக்கு நோய் ஏற்படுவதை ஓரளவுக்குக் குறைக்க முடியும். மேலும், இத்தகைய நோய்கள் பரவாமல் இருக்கவும் இந்த நடவடிக்கை உதவும். சிறிதுகாலம் சென்றபின் இப்பகுதியில் பயிர் நோய்களே இருக்காது.



## இயந்திரமயமாக்குவது

**கேள்வி:** ஜப்பான் போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளில் நெல் சாகுபடிக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தும் முறையை நம்நாட்டிலும் கடைப்பிடிக்கவேண்டும் என்று நீங்கள் கூறுகிறீர்களா? ஆள் பலம் நிறைய உள்ள இந்தியாவுக்கு இது உகந்ததா?

**பதில்:** வளர்ச்சியடைந்த நாடுகள் இயந்திரங்களைப் பயன்படுத்தும் அளவுக்கு நம்மால் பயன்படுத்த முடியாது. ஆனால், ஆட்பலம் நிறைய இருந்தபோதிலும் அதன் தேவை நாட்டின் எல்லா பாகங்களிலும் உணரப்படுகிறது. இது ஒரு ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.



பம்பு செட்டுகள், குழாய்க் கிணறுகள் ஆகியவைகளை வழங்குவதுதான் இந்தியாவில் வேளாண்மையை இயந்திரமயமாக்குவதன் முதல் கட்ட நடவடிக்கையாகும். குழாய் கிணறுகள் மூலமாக ஆண்டு முழுவதும் தண்ணீர் கிடைத்தால், தீவிர பயிர் சாகுபடியைத் தொடர்ந்து செய்ய முடியும். இத்தகைய தீவிர பயிர் சாகுபடிக்கு முன், நிலத்தை நன்றாகப் பண்படுத்தி, வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு பயிர் சாகுபடிக்கும் மற்றொரு பயிர் சாகுபடிக்கும் இடையே நிலத்தைப் பண்படுத்தும் நடவடிக்கையை விரைவாக மேற்கொண்டால், அடுத்தப் பயிர் நல்ல முறையில் வளரும். அறுவடை, கதிரடிப்பது, நெல் உலர்த்துவது ஆகியவற்றுக்கு அதிக சக்தியும் தேவைப்படும். இந்த தீவிர பயிர்ச்சாகுபடிக்கு தற்போதைய ஆட்பலமும், விவசாயக் கருவிகளும், காளைகளின் திறனும் போதாது. இத்தகைய சக்திகளுக்கு உதவுவதற்காக இயந்திரங்கள் தேவைப்படும். பாசன வசதியும் தேவை.

ஒவ்வொரு பகுதியிலும் எந்த அளவுக்கு சக்தி தேவைப்படும் என்பதையும், எந்த அளவுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தலாம் என்பதையும் மத்திய அரிசி ஆராய்ச்சிக் கழகம் தற்போது ஆராய்ந்து வருகிறது.

(குறிப்பு: இந்திய அரசின் பத்திரிகைத் தகவல் அலுவலகம் அனுப்பிய குடியரசு நாள் சிறப்புக் கட்டுரை எண். 8-ல் சில பகுதிகள்).